கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



சபா(ஷ்)நாயகர்

KALKI • 10.08.2008 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



- வட்டியில்லா கிராமம்
- இயக்குநர் சிம்புதேவன் தொடர்



காஸ்ட்லி காமெடியன்?

Rs.10/- Only

August 2008 Now on Sale



Party Time!

COVER STORY

OVER TO BEIJING!

Antony and Grantina

-the endearing ant duo!



MARVELS OF MEDICINE

GOKULAM

AUGUST 2008 Rs.10/- THE Magazine for Children

கல்கி
10.08.2008



கல்கி
தரம் நிரந்தரம்

அடர்ந்த முடி அதிக பலம்!





"கேசப் பராமரிப்புக்கு நம் முன்னோர்கள் தந்த முக்கியத்துவத்தில் பாதியைக்கூட இன்றைக்கு நாம தர்றதில்லே! அதனால்தான் இன்றைய இளைய தலைமுறை தலைக்கு மேல் குறைபாடுகளோட அலையறாங்க!'' என்கிறார் சித்த மருத்துவர் சிவராமன்.

''பெண்கள் இன்றைக்கு பியூட்டி பார்லர் போய் தங்களோட முக அழகைப் பராமரிக்கிறது ஒருபுறம் இருக்குன்னாலும், சிகையழகைப் பலபேர் கண்டுகொள்ளாமல் விட்டுடறாங்க. பாப், போனி டெய்ல், காக் டெய்ல்னு முடியைக் குட்டையா வெட்டிக்கறாங்க.

சிகையலங்காரத்துக்குப் பெயர்போன பெண்களின் நிலைமையே இப்படியென்றால், ஆண்களின் நிலை அதைவிட மோசம்! ஷார்ட் கட்டிங்னு பின் மண்டை பளிச்சுன்னு தெரியற மாதிரி திரியறாங்க! அடர்ந்த நீண்ட கேசம்தான் ஆண்மையின் அழகுன்னு நம் முன்னோர்கள் வகுத்திருக்கறாங்க. சித்தர்கள், முனிவர்கள் எல்லாம் ஜடாமுடியுடன் இருந்ததுக்கு நிச்சயமா ஒரு அழுத்தமான காரணம் இருந்திருக்கத்தானே வேணும்?

சீனர்கள்கூட நீண்ட கேசம்தான் ஆண்மைக்கு அடையாளம்னு நம்புறாங்க. தற்காப்பு கலைகளைப் பயிலும் 'ஷாங்காய்' மாணவர்கள் நீண்ட கேசம் வளர்க்கணும்னு ஒரு நியதியைக் கடைப்பிடிக்கறாங்க. சுருங்கச் சொல்லணும்னா, 'வீரன்'னு சொன்னா நீள்முடி இருக்கணும், நம்ம பஞ்சாப் 'சிங்'குகள் போல! பெண் சிங்கத்தைவிடவும் ஆண் சிங்கம் பலத்துடனும் கம்பீரத்துடனும் உலவுவதற்கு அதன் பிடரி மயிரும் ஒரு பிரதான காரணம்தானே!''

என்கிறார் டாக்டர் சிவராமன்.

அடர்ந்த நீண்ட கேசம் என்பது தேக ஆரோக்கியத்தின் நிலைமைக்கு ஓர் அத்தாட்சி! முடி குறைவா இருந்துச்சுன்னா அந்த உடம்பின் சத்தும் குறைவு! அழகும் குறைவு! இன்னைக்கு இளைய தலைமுறையின் பெரும் பிரச்னை இளைநரை தான்!

படிப்பு, தொழில், போட்டின்னு பல விஷயங்களில் பரபரன்னு ஓடற இளம் தலைமுறையினர் ரொம்பவும் பிரயத்தனம் செய்யறாங்க. அதனால மன அழுத்தம், உடல்சூடு, ஓய்வின்மை இப்படிப் பல பிரச்னைகளுக்கு ஆளாகி அவதிப் படறாங்க. மேலும் உணவுப் பழக்கமும் அவர்களுக்கு முறைப்படுத்தப்பட்டதா இல்லே! 'ஜங்க் ஃபுட்' சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்கறாங்க!


✱ சிவராமன்

கருகருன்னு அடர் கூந்தல் வேணுமின்னு நினைக்கறவங்களுக்கு கரிசலாங்கண்ணி கற்பக தைலம் ஒரு வரப்பிரசாதம்! இளநரை, முடி உதிர்தல் பிரச்னைகளுக்கு அது நல்ல தீர்வு!

பொதுவா முடி உதிர்தல் பிரச்னைக்கு பொடுகு, உடல்சூடு, மரபணுக்கள் காரணம்! தலைக்குக் குளிக்கறதும், எண்ணெய் தேய்க்கிறதும் கேசத்துக்கு ஆரோக்கியம்! வாரம் ஒருமுறை எண்ணெய்க் குளியல் செய்யணும்ங்கறதை 'சனி நீராடு'ன்னு நம்ம பெரியவங்க சொல்லியிருக்கறாங்க. அதை இன்னைக்கு 'உலக சுதாகார மையம்' ஒத்துக்கிட்டு, எண்ணெய்க் குளியலின் பயன்களை நீளமா ஒரு பட்டியல் இட்டிருக்கறாங்க!

பக்கவிளைவு ஏதுமில்லாத சித்த மருத்துவத்தில் கேசப் பராமரிப்புக்கு எவ்வளவோ வழிமுறைகள் இருக்கு! கேசத்தின்மீது நேசத்தை வளர்த்துக்கொண்டால், அழகுடன் உடல் ஆரோக்கியமும் தானாகவே வந்து சேரும் என்பதுதான் உண்மை!'' என்கிறார் டாக்டர் சிவராமன்.

- எம்.ஆர்.இராஜேந்திரன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்: **சீதா ரவி**

உதவி ஆசிரியர்: **கதிர்பாரதி**

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் : **044 - 4343 8899**

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்கள் :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ.2,700/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

காஸ்ட்லி

வடிவேலு சிறப்புப் பேட்டி

வடிவேலு... தமிழ் சினிமாவின் காஸ்ட்லி காமெடியன். சமீபகாலமாக மீடியா பக்கமே தலை வைத்துப் படுக்காமலிருந்தவர், கல்கிக் கென பிரத்யேகப் பேட்டியளித்தார். அவருட னான சந்திப்பிலிருந்து...

மீடியாவுக்கு திடீரென்று இடைவெளி விட் டது ஏன்?

''அண்ணே, நான் வளர்ந்ததே மீடியாவால தாண்ணே. அதை என்னால என்னைக்கும் ஒதுக்கவோ, புறக்கணிக்கவோ முடியாது. நடு வாந்தரத்துல ஒரு சின்ன மனவருத்தம் ஏற் பட்டுப் போச்சுண்ணே, அதான் விஷயம். நான் உயிரைக் கொடுத்து நடிச்ச படம்ணே 'இந்திரலோகத்தில் நா.அழ கப்பன்'. அதுக்காக கிட்டத்தட்ட இருபது பட வாய்ப்புகள இழந் திருக்கேன். எவ்ளோ படம் போச்சு தெரியுமா? நல்ல கருத்தை மக் களுக்குச் சொல்லணும்னே எடுக் கப்பட்ட படம்ணே அது. மூணு வேஷத்துல முங்கி முங்கி நடிச் சிருப்பேன். அதுவும் அந்த வயசான கிழவன் வேஷத்துல நடிச்சு முடிக்கிறதுக் குள்ள உசுரு போய் உசுரு வந்திருக்கு. ஆனா, இது எதையும் மீடியா கண்டுக்கலண்ணே. சரி, கொஞ்ச நாளைக்கு அமைதியா இருப்போம்னு தவம் இருந்துட்டேன். இந்தா, இப்ப கலைச் சாச்சு.''

இந்த உயரத்தை எட்ட உதவியது எது?

''சத்தியமா உழைப்புதான்ணே. அதத்தாண்டி வேற ஒண்ணு இல்லவே இல் லண்ணே. சதா எந்த நேரமும் நமக்கு சினிமா நினைப்புதான். நம்ம முகத் தப் பார்த்தே இன்னிக்கு நாடே சிரிக் குது. அதைத் தக்க வச்சுக்க அடுத்து என்ன புதுசா செய்யலாம், ரிபீட் இல்லாம எப்படி ட்ரயல் உட



லாம்னு ஒரே சினிமா அலப்பறை தாண்ணே. சினிமான்னு இல் லண்ணே, எந்த ஒரு விஷயத்திலும் கடினமா உழைச்சா அதுக்கான பலன் உயர்வுதான்ணே. அதுக்கு இந்த வடிவேலு சிறந்த உதாரணம்.''

கடந்த காலத்தை நினைத்துப் பார்ப்பீர்களா?

''ஏன் பாக்காம? அப்புறம் எப்

காமெடியன்?

படி உசுரு வாழுறது? நான் என்ன பொறக்கும்போதே பணக்காரனாவா பொறந்தேன்? கஷ்டப்பட்டு ஜீவனம் செஞ்சவங்கதாண்ணே நாங்களும். அப்பனையும் ஆத்தாளையும் நாம வாழ்ந்த வாழ்க்கையையும், குடிச்ச கஞ்சியையும், சொந்த பந்தங்களையும் எவ்ளோ உசரத்துக்குப் போனாலும் திரும்பிப் பார்க்காம வாழுறவன் உருப்பட்டதா சரித்திரமே இல்லண்ணே. இந்த வடிவேலு உருப்படணும்னு நினைக்கறேன்.''

'இந்திரலோகத்தில் நா.அழகப்பன்' படத் தோல்வியை எப்படி எடுத்துக்கொண்டீர்கள்?

''200 பிரிண்ட் போடப்பட்ட படம் அது. அம்பது நாட்களுக்கு மேல நல்லாவே போச்சண்ணே, மக்கள் காமெடி கம்மியா இருக்குன்னு ஃபீல் பண்ணாங்க, அவ்ளோ தான். நான் பார்த்த வரைக்கும் பல நல்ல காமெடிங்க படத்துல இருந்தது. ஆனா, தியேட்டருக்குப் போனா காமெடியெல்லாத்தையும் வெட்டி தூக்கியிருக்காங்க. கேட்டா, படத்துல மெஸேஜ் வேணும்னு பதில் சொல்றாங்க. ஒரு நடிகன் எடிட்டிங் ரூம் வரைக்கும் ஃபாலோ பண்ணிட்டுப் போக முடியாதுண்ணே.''



அரசியல்வாதி நடிகர்களோட நடிக்கக் கூடாதுங்கறதுல நான் முடிவா இருக்கேன்

உங்களை ஹீரோவாக வைத்து இயக்க, பல தயாரிப்பாளர்கள் தயாராக இருந்தும், ஏன் ஒப்புக்கொள்ளத் தயங்குகிறீர்கள்?

''நல்ல கதை வேணும்ணே, அதுதான் முக்கியம். அது நமக்குத் தோதானதா இருக்கணும். காமெடி நிறைய இருக்கணும். ஜனங்க பார்த்து ரசிக்கறா மாதிரி சொல்லத் தெரியணும். இப்படிப் பல விஷயம் இருக்கு. ஒன் லைன் மட்டும் கேளுங்கண்ணேன்னு வந்தா, எப்படிண்ணே ஒப்புக்கறது? இருபது, முப்பது படத்த உட்டுப்போட்டு, ஒரு படத்துல கதாநாயகனா நடிக்கறோம். நாலு விஷயத்தையும் கவனிச்சுப் பார்த்துத்தானே செய்யணும்! இங்க சூதானமா இல்லன்னா சுருட்டி அரச்சிடுவாங்கண்ணே, கவனமா இருக்கணும்.''

பல படங்களிலிருந்தும் விலகுகிறீர்கள்... பெரிய டைரக்டர்களிடம் கோபித்துக்கொள்கிறீர்கள்... ஏன், எதனால்?

''இந்த நிலைக்கு வர்றதுக்கு எவ்ளோ போராட வேண்டியிருக்கு! மக்கள் தினுசு, தினுசா காமெடிய எதிர்பார்க்கறாங்க. ஒரு படத்துல செஞ்சத அடுத்த படத்துல பண்ணா ரசிக்க மாட்டாங்க. அதனால எப்பவுமே நான் கொஞ்சம் கூடக் குறைய, ஆடியன்ஸ் நம்மகிட்ட எதிர்பார்க்கற காட்சியை உள்ள எறக்கி காமெடி பண்ணுவேன். அது அந்த சீன் நல்லா வரணும்ங்கற ஒரே நோக்கத்துலதான். காமெடி சீன் நல்லா இருந்தா படத்

துக்குத்தானே ப்ளஸ் பாயின்ட்! அதனால பெரும்பாலான டைரக்டர்கள் 'எஸ் பாஸ்'ன்னுதான் சொல்வாங்க. ஆனா ஒரு சிலர் இருக்காங்க, அவங்க எழுதிக் கொடுத்ததத் தவிர ஒரு வரியச் சேர்த்துச் சொல்லிப்புட்டாலோ, எக்ஸ்பிரஷன எக்ஸ்ட்ரா கொடுத்தாலோ, ரொம்ப ஃபீல் பண்றாங்க. அந்த மாதிரி ஆளுங்க படத்துல நான் நடிக்கறதே இல்ல. அதுக்கு வேற ஆளுங்க இருக்காங்க. நாம எதுக்கு அநாவசியமா டயர்டாய்க்கிட்டு!''

அரசியல்வாதி நடிகர்களின் படங்களில் நடிக்க மறுப்பது ஏன்?

''நல்லா கேட்டீங்க கேள்விய, அண்ணே, அரசியல்வாதி நடிகருங்க 'வடிவேலு, நான் அரசியல் படம் பண்ணல. அந்த வாடையே இருக்காது'ன்னு சொல்லித்தான் கூட்டிட்டுப் போவாங்க. நாமளும் நம்பிப் போவோமா...



நீங்க வேற பீதியக் கௌப்பாதீங்கண்ணே. நான் எந்த அரசியல் கட்சிலயும் இல்ல.

அவங்களும் அரசியல் கலக்காமத்தான் படம் எடுப்பாங்க. வில்லனைப் பார்த்து 'டேய், அவருகிட்ட வச்சுக்கிட்ட நீ காணாமப் போயிடுவ. நீ ஆம்பளயா இருந்தா ஒண்டிக்கு ஒண்டி மோதிப் பாருடா'ன்னு ஒரு டயலாக்கும் கொடுப்பாங்க. நாமளும் அசமஞ்சமா பேசியும் வைப்போம். படமும் ரிலீசாகும். சன், கலைஞர், ஜெயான்னு பல டீ.வி.கள்ல க்ளிப்பிங்ஸ் ஓடும். இதுல டைட் க்ளோசப்ல போட்டு அவருக்கு எதிரா பேசற மாதிரி சித்திரிப்பாங்க. அதுல காமெடிங்கற பேர்ல போட்டு, இவங்களுக்குச் சவால் விடற மாதிரி பேசுறதா போட்டுத் தாக்குவாங்க. இதைப் பார்க்கற தலைவர்களும் ரசிகர்களும் அதைக் காமெடியா பார்க்காம, நான் ஏதோ சம்பந்தப்பட்ட நடிகரோட பி.ஆர்.ஓ. மாதிரியும் அவரு கட்சியில சேர்ந்துட்ட மாதிரியும் நினைச்சு நம்மள கட்டம் கட்டிடுவாங்க. இதெல்லாம் எனக்குத் தேவையாண்ணே? இந்தப் பொல்லாப்பெல்லாம் வேண்டாம்னுதான் அரசியல்வாதி நடிகர்களோட நடிக்கக் கூடாதுங்கறதுல நான் முடிவா இருக்கேன்.''

எனில், அந்தக் கட்சியில் நீங்கள் சேர்ந்துவிட்டதாக வந்த தகவல் குறித்து...

''நீங்க வேற பீதியக் கௌப்பாதீங்கண்ணே. நான் எந்த அரசியல் கட்சியிலயும் இல்ல. எல்லாருக்குமே நான் பொதுவானவன். இதைத் தெளிவா கொட்ட எழுத்துல போடுங்க.''

சக காமெடி நடிகர்களுடன் உங்களது நட்பு எப்படி இருக்கிறது?

''எல்லாருமே எனக்கு நண்பருங்கதாண்ணே. நல்லது கெட்டதுக்குப் போவோம், வருவோம். கூட்டத்துல பார்த்தா நாலு வார்த்தை பேசிக்குவோம். அவங்க அவங்க திறமை அவங்களுக்கு. எல்லாருமே நல்லா வரட்டும்ணே. காமெடி நடிகர்கள் பெருகப் பெருகத்தான்ணே நாட்டுல நகைச்சுவைல மூழ்கி மக்கள் சந்தோஷப்படுவாங்க.''

– மு.மாறன்

படங்கள்: ஸ்ரீஹரி

வெற்றுச் சட்டங்கள்; வெல்லும் குண்டுகள்!





ராஜீவ்காந்தியைக் கொலை செய்தது மனித வெடிகுண்டுதான் என்று விஞ்ஞான ஆதாரத்துடன் நிரூபித்தவர் தடயவியல் அறிஞர் டாக்டர் பி.சந்திரசேகரன். இவர் சமீபத்தில் எழுதி வெளிவந்துள்ள புத்தகம், The first Human Bomb. இப்போது நம்மைப் பயமுறுத்தும் தொடர் வெடிகுண்டு வெடிப்புகளைத் தடுத்து நிறுத்த பல யோசனைகளைச் சொல்கிறார்:

சீக்கிரம் திருத்துங்கள்!

கட்டுமான வேலைகள், குவாரிகள் மற்றும் வேறு பல காரியங்களுக்கு வெடிமருந்து தேவைப்படுவதால், அதன் உற்பத்தியை நிறுத்த முடியாது. ஆனால், விற்பனையை ஒழுங்குபடுத்திக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். இது தொடர்பாக இருக்கும் சட்டங்கள், 1884 மற்றும் 1908 ஆண்டுகளில் போடப்பட்டவை. இவை இப்போது வேலைக்கு ஆகாது. மாறி வரும் சூழலைக் கணக்கில் கொண்டு, புதிய சட்டங்கள் தேவை. அமெரிக்காவில் வெடிமருந்து தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு ஜெல்லடின் குச்சிக்கும் நம்பர் உண்டு. அது எங்கே, எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதும் கண்காணிக்கப்படுகிறது. மொத்தமாக வெடிமருந்து வாங்குபவர்களின் விரல் ரேகை, ஃபோட்டோ எடுத்தபிறகுதான் அங்கு விற்பனை. பல மேலை நாடுகளில் மாகாணத்துக்கு மாகாணம் தனி வெடிகுண்டுச் சட்டங்கள் உள்ளன. இந்த அம்சங்களை உள்ளடக்கி அதைச் செயல்படுத்தும் அதிகாரங்களுடன்கூடிய 'National Explosive

Control Bureau' ஒன்றை அமைக்க வேண்டும் என்று பல வருடங்களாகப் போராடி வருகிறேன். வெடிமருந்து விற்பனையில் ஒரு தீவிர தொடர் கண்காணிப்பு இல்லையென்றால், குண்டு வெடிப்புகளைத் தடுக்க முடியாது.



✱ பி. சந்திரசேகரன்

பாம்ப் மேனியாக்!

முதலில் மதத் தலைவர்களுக்கு 'மதம்' பிடிக்கக் கூடாது. சிலருக்கு அப்படிப் பிடித்திருப்பதால்தான் தீவிரவாத நெருப்புக்கு நெய் ஊற்றப்படுகிறது. இந்த நிலை மாற வேண்டும். அப்போது



தான் வழி தவறும் இளைஞர்களைத் திருத்த முடியும். அப்பழுக்கற்ற, மக்களைக் கவர்ந்த அரசியல் தலைமை மற்றும் மதத் தலைவர்களின் தீவிர நல்லிணக்கப் பிரசாரம் ஆகியவை மனமாற்றங்களைக் கொண்டு வரலாம். சட்டம், போலீஸ் என்பதெல்லாம், குற்றம் நடந்த பிறகுதான். மற்றபடி, வெடிகுண்டு வைக்கும் சிலருக்கு bomb maniac என்ற உளநோய்கூட இருக்கக்கூடும். அதுபோல bomb maniac நோயாளிகளை, தீவிரவாதிகள் பயன்படுத்தும் வாய்ப்பும் உண்டு.

அரதப்பழசுக்கு அல்வா!

காவல்துறைக்குப் புலனாய்வு அறிவு குறைந்துவிட்டதோ என்று எனக்குச் சந்தேகம் வருகிறது. ஒரு தொடர் தீவிர விசாரணை என்பது நடப்பதில்லை. காவல் துறைக்கு உள்ள வேறு பல வேலைகளும் இதற்குக் காரணம். பயங்கரவாதி பிடிபட்டவுடன், அவனிடம் உண்மையை வரவழைக்கக் கையாளும் முறைகள் அரதப் பழசானவை. உதாரணங்கள் நார்கோ (Narco) பரிசோதனை- ஊசி போட்டு, குற்றவாளி அரை மயக்கத்தில் இருக்கும்போது உண்மையை வரவழைப்பது. இதில் பரிசோதனை செய்யும் அதிகாரி, தாம் நினைத்ததை குற்றவாளி வாயில் திணிக்க முடியுமே தவிர, உண்மையை வரவழைக்க முடியாது. அதேபோல் பொய் சொன்னால் கண்டுபிடிக்கும் மிஷின் மற்றும் brain finger printing என்கிற முறைகள். இந்த முறைகளெல்லாம் பல ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவில் காவல் துறையால் உதறித் தள்ளப்பட்ட விஷயங்கள் தான்.



மேலும், இதற்கெல்லாம் தீவிர வாதிகள் அல்வா கொடுப்பார்கள். வெடிகுண்டு சம்பவ இடத்துக்கு, crime scene

scientistஐ அனுப்பி, தடயங்களை ஜாக்கிரதையாகச் சேகரிக்க வேண்டும். ஏற்கெனவே சொன்னதுபோல் வெடிமருந்து விற்பனை கட்டுப்பாடு, சந்தேக நபர்கள் மீது தொடர் கண்காணிப்பு, குற்றம் நிரூபிக்கப்பட்டால் கடும் தண்டனை ஆகியவைதான் மிக முக்கியமாகச் செய்ய வேண்டியவை.

"காவல்துறைக்குப் புலனாய்வு அறிவு குறைந்து விட்டதோ என்று சந்தேகம் வருகிறது"

பொதுமக்கள் பொறுப்பு

டிஃபன்பாக்ஸ், டிரான்ஸிஸ்டர், கேரியருடன் கூடிய சைக்கிள், மொபெட் மற்றும் வேறு சில பொருட்கள், வித்தியாசமான இடங்களில் இருந்தால் உடனே காவல்துறைக்குத் தெரிவிக்கவும். பொது இடங்களில் புழங்கும்போது ஓர் எச்சரிக்கை இருக்கட்டும். பக்கத்து வீட்டில் சந்தேகமான நடமாட்டம் இருந்தால் உடனே தெரிவித்து விடுங்கள். 'இரட்டை கோபுர' சம்பவத்துக்குப் பிறகு, அமெரிக்காவில் பெரிய அளவில் நாசவேலை நடக்கவில்லை. காரணம், மக்கள் அங்கே விழிப்போடு இருப்பதுதான்.

– ப்ரியன்



● ஸ்டெல்லா, சீர்காழி

பத்துக்குள்ளே நம்பர் ஒண்ணு சொல்லு?

தசாவதார பத்துக்குள் எனக்கு மிகவும் பிடித்த நம்பர் 'நம்பி'.

● ஆர்.கோபாலன், மேற்கு மாம்பலம்

காதலியின் முகத்தை, காதலன் பௌர்ணமி நிலவோடு ஒப்பிடுவது சரி தானா....? வெள்ளை வெளேரென்று தோசைக் கல் மாதிரி அகன்ற முகத்தை யுடைய ஒரு பெண்ணை எவன் சார் விரும்புவான்?

அத்துமீறுர மனசுக்குத் தடங்கலும், அலைபாயுற புத்திக்குச் சிக்கலும் தந்து, தில்லா இருக்கிற கல்லான காதலின்னு அர்த்தம்!

உமக்கு வேண்டுமானால் அது தோசைக் கல்லாகத் தெரியலாம். காதலனுக்கு அது ஆசைக் கல் சாமி! கல்லானாலும் காதலி.

● ரவிபிரகாஷ், பெங்களூர்

வேண்டாத கடவுள் இல்லை; இந்தப் பாழாப் போன நகைச்சுவை வரவே மாட்டேங்குதே கிரேசி?

அட கடவுளே! நாம பாழாப் போகாம இருக்கத்தான் நகைச்சுவையே சாமி! முதலில் பாக்கியம் ராமசாமியின் 'அப்புசாமி'யைப் படியுங்கள். 'அப்புறம் சாமி'யை வேண்டிக்கொள்ளுங்கள். நகைச்சுவைக்கு கிரேஸி கைகொள்ளும் ஈஸி வழி இதுதான்.

● கோவிந்தராஜன், டெல்லி

திருட்டு வீடியோ பார்ப்பது தப்பு தானே?

வீடியோ-பைரஸி தப்புதான். ஆனால் அதைவிட மகா தப்பு, அந்தப்புரத்தில் அத்து மீறி நுழையும் 'வீடியோ-பிரைவஸி'. வீடியோ-பைரஸியை போலீஸ் பார்த்துக் கொள்ளும். வீடியோ-பிரைவஸியை நாம் தான் என்கரேஜ் பண்ணாமல், இருக்க வேண்டும். ஆயிரம் குற்றங்களுக்குச் சமமான இதைச் சர்வ சாதாரணமாக எப்படித்தான் 'சைபர்- க்ரைம்' என்று கூறுகிறார்களோ....!

● என்.கோமதி, நெல்லை

நான்கு முகம் கொண்ட பிரம்மா எப்படிப் படுப்பார்? எந்தப் புறம் படுத்தாலும் முகம் இடிக்குமே?

நாலு பேருக்குத் தெரியாமல் ஆஃபீ





நம்மைப் புதுசாக்கும் நகைச்சுவை!

ஸில் நாற்காலியில் அமர்ந்தபடி தூங்கும் டெக்னிக்கை நமக்குச் சொல்லிக் கொடுத்தவரே, நாராயணன் நாபிக் கமலத்தில் அமர்ந்து, படைக்கும் வேலையைப் பார்க்கும் பிரம்மா தான். அமர்ந்தபடி தூங்கும் அவஸ்தையை அவரே நேற்று என் கனவில் வந்து கவிதையாகக் கூறினார் :

'குப்புறப் படுத்து குஷனில் புதைத்து
முகமொன்று
அப்புறம் அண்ணாந்தபடி தூங்கு
முகமொன்று
இடப்புறம் குறட்டை ஒலி கேட்கும்
முகமொன்று
வலப்புறம் ஒருக்களித்து சொக்கும்
முகமொன்று
நான்கு முகமான உருளல் இது கடினம்
என்றே
நாரணனின் நாபிமலர்
அமர்ந்துறங்கிவேனே.'

● **ராகவன், நெய்வேலி**

இறைவன் பெண்ணா இல்லை ஆணா?

எழுத்தறிவித்து எனது Penஐ எழுத வைக்கும் ஸ்விட்ச் ON....!

● **புனிதா, திருத்தணி**

மெஸேஜ் இருக்கும்படி ஒரு பாராவில் கதை சொல்லுங்க பார்க்கலாம்....?

இதோ இன்றைய இளைஞர்களுக்கு எஸ்.எம்.எஸ். செய்ய வேண்டிய மெஸேஜ் கதை : ராமசாமியால் முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்ட அவன் தந்தை கோவிந்தசாமி, 'வாய்யா ஜேம்ஸு! நீ வருவேன்னு எதிர்பார்த்தேன். ஏன் லேட்டு?' என்ற குரல் கேட்டுத் திரும்ப, அங்கு கோவிந்தசாமியால் சேர்க்கப்பட்ட அவன் தந்தை குப்புசாமி, அவனை வாய்-பொக்கே காட்டி வரவேற்றார். மெஸேஜ் - 'முதியோர் தம் உள்ளத்தை மிதிக்க வேண்டாம்....!'

● **வி.எஸ்.கீர்த்தனா, ஈரோடு**

வெளுத்ததெல்லாம் பால் என நினைப்பவரா நீங்கள்....?

வெற்றிலை போடும் பழக்கம் உடைய நான், வெளுத்ததெல்லாம் சுண்ணாம்பு என நினைப்பவன்....!

● **அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி**

மனிதனை மனிதனாக மதிக்காத மனிதனை என்ன செய்வது?

மனிதாபிமானத்தோடு மன்னித்து விடுங்கள். மிதிப்பவன் மிருகம். மதிப்பவன் மனிதன். மன்னிப்பவன் மகான்.



கல்கி




2008 ஆகஸ்ட் 10
ஸர்வதாரி ஆடி 26
மலர் : 67
இதழ் : 2


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்.*

அகமதாபாத் பயங்கரம்!

தமிழகத்தைத் தாக்க தொடர் வெடிகுண்டு சதித்திட்டம் தீட்டிய அப்துல் கஃபூர் கைதானபோது, அவரது தந்தையே அதிர்ச்சியடைந்தார். அவருடன் பணியாற்றிய செருப்பு தொழிற்சாலை ஊழியர்களால் அதை நம்பவே முடியவில்லை. பயங்கரவாதம் சராசரி வாழ்வுக்குள் ஊடுருவி கலந்துவிட்டதற்கான அத்தாட்சிகள் இவை.

பிரிட்டனில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று, அங்கு உயர் கல்வி பயிலும் இஸ்லாமிய மாணவர்களுள் 28 சதவிகிதத்தினர் மதத்தின் பெயரால் நடக்கும் கொலைகளை ஆதரிப்பதாகக் கண்டறிந்துள்ளது! உயர்கல்வி பெற்ற இஸ்லாம் மாணவர்களே இப்படிக் கொடூரமாகச் சிந்திக்கிறார்கள் என்றால், கல்வி அறிவு அதிகமற்ற இஸ்லாமியர்களின் கதி என்னவாக இருக்கும்! பிரிட்டனில் நடத்தியது போன்ற ஆய்வை நம் நாட்டில் நடத்திக் கண்டறிவது சுலபமல்ல. உடனே அரசியல் எதிர்ப்பு எழும்! ஆனால், மதத்தின் பெயரால் நடக்கும் கொடுமை மூடத்தனமானது; மூர்க்கமானது என்று இளம் வயதிலேயே உணர்த்தப்படுவதற்குப் பதிலாக, பல இஸ்லாமிய மாணவர்களும் இளைஞர்களும் அவற்றை ஏற்க பயங்கரவாதிகளால் மூளைச் சலவை செய்யப்படுகிறார்கள். அவர்களுள் சிலரே கொலையாளிகளாகவும் சதிகாரர்களாகவும் மாறுகிறார்கள் என்றால்கூட, பயங்கரவாதம் வெற்றிபெற அதுவே





போதும். சராசரி மக்களிடையே மத துவேஷம் வளர்த்து அமைதி குலைப்பதே பயங்கர வாதிகளின் நோக்கமாக இருக்கிறது.

துரதிர்ஷ்டவசமாக, மத ரீதியாக எழுந்துள்ள ஒரு சிக்கலை அரசியல் ரீதியாக அணுகி, மேலும் சிக்கலாக்கிக்கொண்டிருக்கிறோம். சிறுபான்மை இனத்தவருக்கு அளிக்க வேண்டிய பாதுகாப்பும் சலுகையும் அரசியல் ஆதாயங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பான்மை சமூகத்தை அவமானப்படுத்துவது, தூஷிப்பது, அவமதிப்பது என்று அரசியல் வாதிகள் கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகிறார்கள். பெரும்பான்மை சமூகத்தை ஆதரிக்கும் கட்சிகள், சிறுபான்மையினரைச் சீண்டுவதில் சற்றும் பின் தங்குவதில்லை!

போதாக்குறைக்கு, மாநிலக் கட்சிகள் வேறு பிரதேசப் பித்தை வளர்த்து, இந்தியன் என்ற உணர்வை மழுங்கடித்து வருகின்றன. காங்கிரஸ், பா.ஜ.க. போன்ற தேசிய கட்சிகளாவது பேதங்களைக் கடந்து, ஒரு நாடு, ஒரு மக்கள் என்ற சிந்தனையைக் கைகொள்ள வேண்டாமா? இந்தியாவில் உள்ள ஹிந்துக்களுக்கு இந்நாடு எவ்வளவு சொந்தமோ, அவ்வளவுக்கு இங்கு வாழும் முஸ்லிம்களுக்கும் மற்ற மதத்தினருக்கும்கூட அது சொந்தமாகும். மத ரீதியாக சகிப்புத்தன்மை காட்டி, மக்கள் புரிந்துணர்வுடன் வாழ, தலைவர்கள் அல்லவா வழிகாட்ட வேண்டும்?

பொருளாதாரத் திட்டங்களும் சந்திரமண்டல பயணமும் 123 ஒப்பந்தமும் முக்கியம்தான்; ஆனால், அவையெதுவுமே இந்திய ஒருமைப்பாடு திட்டம் அளவுக்கு அவசரத் திட்டங்கள் அல்ல. அரசியல் சுயநலத்தை உதறிவிட்டு, அரசும் அரசியல் தலைவர்களும் ஒருமைப்பாடு வளர்க்க ஆக்கபூர்வமாக உடனே திட்டம் வகுக்க வேண்டும். கலைஞர்களையும் அறிஞர்களையும் மதத்தலைவர்களையும் திட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும். இதனை அவசரக் கால அடிப்படையில் செயல்படுத்தவும் வேண்டும். இல்லையேல், எதிர்காலத்தில் இந்தியாவில் அவசர நிலைப் பிரகடனத்துக்கு அவசியம் ஏற்பட்டுப் போகும்!



★ விழா மேடையில்

செம்மங்குடி சீனிவாச அய்யரின் மனைவி தையு அம்மாள் காலமான சமயம். விசாரிக்கச் சென்ற வித்வாம்ஸினி வேத வல்லியிடம் அவர் கேட்டார்:

''பாதிவ்ரத்யம் என்றால் என்னவென்று தெரியுமா?'' திகைத்தார் வேதவல்லி. ''உங்கள் மனைவியைப் போல் ஒரு பதிவ்ரதை இருக்க முடியாது'' என்று பதில் சொல்ல, செம்மங்குடி போட்டார் ஒரு போடு - ''அப்படியானால் இத்தனை வருஷம் ஒன்றாக இருந்துவிட்டு, வயதான காலத்தில் கணவனை விட்டுவிட்டுச் செல்வதுதான் பாதிவ்ருத்யமா?'' என்று.

''துக்கத்தினிடையேயும் அறிவுக் கூர்மை, புதிய கண்ணோட்டம்'' - செம் மங்குடி நூற்றாண்டையொட்டி நடந்த 'ஓபன் ஹவுஸ்' நிகழ்ச்சியை நெறிப்படுத்தி நடத்திய வேதவல்லி நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்.

''என்னுடன் வா!'' என்று பாளை ராமச்சந்திரனை சிஷ்யனாக ஏற்று, திருவனந்தபுரத்திலிருந்து சென்னைக்கு இழுத்துக்கொண்டு வந்துவிட்டார் செம் மங்குடி. ஆனால், அவருக்கு ஒரு வாரத் துக்கு மேல் பாடமே நடத்தவில்லை! பட்ட ணத்துக்குப் பழக்கமில்லாத, தமிழ் அறியாத சிறுவன் ராமச்சந்திரன் ஊரைக் கண்டு அசந்து போவதைக் கவனித்தார் குரு. ஒரு நாள், சட்டென்று அழைத்து, இரண்டு கைகளால் இருவேறு தாளங்கள் போட்டுக்கொண்டு நான்கு காலம் (படிப் படியாக வேகம் கூட்டி) கற்பனை ஸ்வரம் பாடினால்தான் அன்று சாப்பாடு என்று, உத்தரவு போட்டுவிட்டார்!

சங்கீத பூஷணம் படிப்பு படித்த ராமச்சந்திரன் தனியே சென்று நொந்து கொண்டார். பிறகு, 'செம்மங்குடி ஆசார் யரே குரு, அவரே தெய்வம்' என்று மனத்தில் இருத்தி பாட ஆரம்பிக்க, ஒரு மணி நேரத்தில் வித்தை கை கூடிவிட்டது! நேரே குருவிடம் சென்று பாடிக் காண் பிக்க, சந்தோஷம் அடைந்த அவர், ''முதலில் போய்ச் சாப்பிடு'' என்று அனுப்பியிருக்கிறார்!

புது ஊர் மோகத்தில் திளைத்துக்

கொண்டிருந்த தமக்கு மன ஒருங்கிணைப்பு வருவதற்காகவே இப்பயிற்சியை அளித்தார் குருநாதர் என்று அதே ஓபன் ஹவுஸ் நிகழ்ச்சியில் சொன்னார் பாளை ராமச்சந்திரன். குரு பற்றி தாம் சமீபத்தில் எழுதி வெளியிட்டுள்ள நூலுக்கு 'சத்குரு செம்மங்குடி சுவாமி' என்றே தலைப்பிட்டுள்ளார் ராமச்சந்திரன்!

சத்குரு செம்மங்குடி சுவாமி!

வேத வாழ்வைக் கடைப்பிடித்து, சங்கீத ஸாகரத்தில் மூழ்கி முத்துக்களை அள்ளி, 75 ஆண்டுகளுக்கும் மேலாக சிஷ்யர்களையும் ரசிகர்களையும் பிரமிப்பில் ஆழ்த்திய மஹாவித்வான் செம்மங்குடி ஒருவரே! அவருடைய நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை செம்மங்குடி ஃபவுண்டேஷனும் விழாக் குழுவும் சேர்ந்து நடத்தியபோது, 94 வயதுவரை வாழ்ந்த அவ்ரை எண்ணி யாரும் துக்கத்தைத் தழுவவில்லை; மாறாக, புது ஆனந்தத்துடன் காணப்பட்டனர். அதுதான் செம்மங்குடியின் 'பவர்'. அவரையும் அவர் சங்கீதத்தையும் நினைக்க நினைக்கக் குதூகலம்!

''காகிதத்தில் பாட்டை எழுதி வைத்துக்கொண்டு பாடாதீர்கள்!'' என்று தலைமை தாங்கிய அப்துல் கலாம் கர்ஜிக்க, ''போதும் இந்த child prodigy விவகாரங்கள்; அவை பெரும்பாலும் tragedyயாகத்தான் முடிகின்றன. ஒரே குருவிடம் நன்கு பயிலுங்கள்'' என்று கேரள அமைச்சர் எம்.ஏ.பேபி இளம் கலைஞர்களைக் கண்டித்தார்! செம்மங்குடி



✱ செம்மங்குடியின் சிஷ்யர்கள் - இசை நிகழ்ச்சி

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி (2008) பிரசுரத்துக்குத் தேர்வான கதைகள்

1. தீமிதி - வி.உஷா, சென்னை - 116
2. என் கடைசிப் பக்க கவிதைகள் - தமிழினியன், திருச்சி
3. பசி - மணிநாத், சென்னை - 11
4. அம்மாவின் தாலி - மு.செல்லா, மதுரை
5. வேவு - ச.ரெங்கநாதன், சென்னை - 85
6. ஒரு சின்னப்புறாவும் சில ஏவுகணைகளும் - ஆதலையூர் சூரியகுமார், நாகப்பட்டினம்
7. மீன் குஞ்சுகள் - டீனா, சென்னை - 34
8. எடு குடத்தை - கே.பி.ஜனார்த்தனன், நாகர்கோவில்
9. அஸ்திவாரம் - எட்டயபுரம் ராஜன், மதுரை
10. பவுனு - பநியான், நெய்வேலி -3
11. அட்மிஷன் - ராமச்சந்திரன் உஷா, சூரத்
12. கலை - சி.சாமிநாதன், கோவை
13. நெட்டை மனசு - நந்தகோபால், கீழ்ப்பட்டு

பிரசுரத்துக்குத் தேர்வான படைப்பாளிகளுக்கு வாழ்த்துகள். உற்சாகத்துடன் பங்கேற்றவர்களுக்கு நன்றிகள்.


கிராமத்தில் உள்ள அவரது பூர்வீக வீட்டை நினைவகமாக நிர்மாணிக்க வேண்டும் என்று கலாம் பளிச் ஆலோசனை சொல்ல, பேபி அதை வழிமொழிந்து, உதவ வாக்குறுதியும் தந்தார்!

தொடர்ந்து 90 வயது ஆர்.கே. ஸ்ரீகண்டனின் கச்சேரி! நூறுக்குத் தொண்ணூறு அளித்த சமர்ப்பணம்! அரங்கத்தை அலங்கரித்திருந்த நேர்த்தி, செம்மங்குடியின் எளிமையும் பிரகாசமும் நிறைந்த வாழ்க்கையை நினைவூட்டியது! ஸ்ரீகண்டனின் கச்சேரி மேடையை அலங்கரித்ததோ செம்மங்குடி பல கச்சேரிகளில் பயன்படுத்திய அதே தம்பூரா!

பிரதம சிஷ்யர்களுள் ஒருவரான வி.சுப்ரமண்யமும் அவரது சிஷ்யரான வி.ஸ்ரீராமும் இணைந்து செம்மங்குடி பற்றி எழுதிய புத்தகம், கர்னாடிகா நிறுவனம் பதிப்பித்த செம்மங்குடியின் இசைப் பதிவுகள் (இதில் செம்மங்குடியுடன் எம்.எஸ்.பாட, கே.எஸ்.நாராயணசாமி வீணை வாசிக்கும் அபூர்வ பதிவு ஒன்றும் அடக்கம்) ஆகியவை விழா மேடையில் வெளியிடப்பட்டன.

செங்கல்பட்டு ரங்கநாதன், வேலூர் ராமபத்திரன், பி.ராஜம் அய்யர், லால்குடி ஜெயராமன், வேதவல்லி, வி.ராமச்சந்திரன் - சாருமதி என்று பல இசைப் பிரமுகர்களை அரங்கில் காண முடிந்தது. செம்மங்குடி கச்சேரிகளுக்கு வாசித்த டி.என். கிருஷ்ணன், உமையாள்புரம் சிவராமன், வி.வி.எஸ், எம்.எஸ்.ஜி; இன்றைய கலைஞர்களான டி.வி.எஸ், சஞ்சய், சௌம்யா, சுதா, ஜெயஸ்ரீ, நித்யஸ்ரீ, கிருஷ்ணா... என்று வராதவர்கள் பட்டியல் தான் பெரிசு! ஹூம் நஷ்டம் யாருக்கு...? செம்மங்குடியால் மனப்பூர்வமாகப் பாராட்டப்பெற்ற இவர்களை, இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றாய்ப் பார்க்க ஆசைப்பட்ட ரசிகர்களுக்குத்தான்!

அருள்வாக்கு




சீலம்

தேகபலம், அஹிம்ஸை, பயமற்ற நிலை இவற்றோடு சொந்தக் கஷ்டங்களைப் பாராட்டாமல் பிறரைக் காக்கும் பான்மையும் சேர்ந்தால் அது மிகப் பெரிய சீலமாகும். இதற்கே 'க்ஷத்ர தர்மம்' என்று முன்னாளில் பெயர் சொல்லப்பட்டது. 'க்ஷதாத் கில த்ராயதே: இதி க்ஷத்ரம்' - 'பிறரைத் தீமையிலிருந்து காப்பதே க்ஷத்ரம்' என்பது இதன் பொருள். 'க்ஷத்திரியர்' என்ற பெயர் இதிலிருந்துதான் பிறந்தது. இப்போது நம் நாட்டு யுவர்கள் இந்த க்ஷத்ர தர்மத்தை மேற்கொள்ள நிரம்ப அவசியமிருக்கிறது. பலிஷ்டர்களைக் கண்டு பயப்படக்கூடாது. பலவீனர்களைப் பயமுறுத்தவும் கூடாது. பலவீனர்களை வெறும் மிருக பலம் படைத்தவர்கள் கொடுமைப்படுத்தாதபடி சர்வத்தியாகமும் செய்து காப்பாற்ற வேண்டும். மெஜாரிட்டி, மைனாரிடி என்ற பயம் இல்லாமல், தர்மத்துக்கு ஆபத்து வந்தால், உயிரைத் திருணமாக மதித்துப் போராடுகிற நெறி இளைஞர்களுக்கு இருக்க வேண்டும். இதுவே சேவையில் ஈடுபட்ட யுவர்களின் தர்மம்.

துரதிர்ஷ்டவசமாக இதற்கு நேர்மாறான போக்கைக் காணும்போது வருத்தமாக இருக்கிறது. பலவீனர்களைப் பயமுறுத்தி ஹிம்சை முறையால் பணிய வைக்கிற போக்கு நல்லதல்ல. இந்த மாதிரி செய்கிற உண்ணாவிரதம், கொடும்பாவி கொளுத்தல், கிளர்ச்சி இவையெல்லாம் உண்மையில் இவற்றைச் செய்கிறவர்களின் பலவீனத்தைத்தான் காட்டுகிறது. தங்களுடைய லட்சியத்திலுள்ள சத்தியத்தின் சக்தியில் நம்பிக்கை இல்லாததால்தான் இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்யா சுவாமிகள்

50 Kg தாஜ்மஹால்!



ஸ்வீட்டாக

அன்று இரவு படுத்தவளுக்கு, சாப்பிட்டதெல்லாம் எதிர்த்துக்கொண்டு வாய்க்கு வந்தது. ஒரே நெஞ்செரிச்சல். ஏதோ அஜீரணம் என்று எழுந்து, மோரில் பெருங்காயத் தூள் போட்டுக் குடித்தாள். ம்ஹூம் பலனில்லை. ஹரியை ஜெலுஸில் வாங்கி வரச் சொன்னாள். அவனும் 'நீ பாட்டுக்குக் கண்டதையும் தின்னுட்டு வந்து என் உசிர வாங்கு' என்று முனகிக்கொண்டே சட்டையைப் போட்டுக்கொண்டு கிளம்பி ஜெலுஸில் வாங்கி வந்தான்.

ஜெலுஸில் உள்ளே போய் ஒரு மணி ஆகிவிட்டது. இரவு முழுக்க திரும்பிப் படுத்தே பொழுதைப் போக்கிவிட்டு, அதிகாலையில் நன்றாகவே தூங்கிப் போனாள்.

கண் விழித்தவள், நேரே பாத்ரூமுக்குள் நுழைந்து பெரிய சத்தத்துடன் வாந்தி எடுத்தாள். பின்னால் சென்று அவள் தலையைப் பிடித்துக்கொண்டு முதுகை நீவிய ஹரி, ''நேத்திக்குச் சாப்பிட்ட கேக்குதான் ஒத்துக்கல ஒனக்கு'' என்று எரியும் நெருப்பில் எல்.பி.ஜி ஊற்றினான். தலைவலி மண்டையைப் பிளந்தது. பிறகு அடுத்த தெருவில் இருக்கும் அவளது ஆஸ்தான டாக்டரிடம் சென்றாள் அருணா.

அருணாவைப் பார்த்ததும் டாக்டர் கேட்ட முதல் கேள்வி 'என்ன இவ்வளவு வெயிட் போட்டுட்ட?' என்பதுதான். 'ஹி ஹி... ஆமா டாக்டர்' என்று ஒரு அசட்டுச் சிரிப்புடன் வந்த காரணத்தைச் சொல்ல ஆரம்பித்தாள். ''இன்டைஜஷன் ஆகியிருக்கு. இந்த மாத்திரையைச் சாப்பிடு'' என்றவர், ''அதுக்கு முன்னாடி உன் ஹைட்டையும் வெயிட்டையும் செக் பண்ணிக்கலாம் வா'' என்று அழைத்தார்.

பலிகடாவாய் பயந்துகொண்டு ஏறி நின்றாள் வெயிங் மெஷினில். அவளது பிஎம்ஐ ஐக் கணக்கிட்ட டாக்டர், ''நீ ஒபீஸ்'' என்று முத்திரை குத்தினார். ''ஏற்கெனவே கொழுப்பு ஜாஸ்தியா இருக்கறதுனால இது மாதிரியான பதார்த்தங்களத் தொடவே கூடாது. உடம்பு ஏத்துக்கல. இது மாதிரி அடிக்கடி நடக்க ஆரம்பிச்சா, அப்புறம் அது பித்தப்பை பிரச்னைல கொண்டு

விட்டுடும். உன் ஹைட்டுக்கு நீ இப்போ இருக்கறதைவிட இருபது கிலோ கம்மியா இருக்கணும். அதை அசீவ் பண்ற வழியப் பாரு. நல்ல டயட் ஃபாலோ பண்ணு. வாக் போ. ஜிம் போ, யோகா போ" என்று பல 'போ' போட்டு பர்ஸையும் பதம் பார்த்து விட்டு, ஒரு மாதம் கழித்து வரச் சொன்னார்!

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டு ஒரு சபதம் எடுத்துக் கொண்டு வெளியேறினாள். அதாவது உமா குழந்தையின் அடுத்த பர்த்டே பார்ட்டிக்குள் 20 கிலோ குறைத்து ஸ்லிம் ஆகும் சபதம்! இனிமேல் நோ ஸ்வீட்ஸ், நோ சீஸ்!

அன்று வழக்கத்துக்கு சற்று முன்னதாகவே வந்துவிட்டான் ஹரி. ''என்னாச்சுங்க உடம்பு சரியில்லயா?'' என்றாள் கதவைத் திறந்துகொண்டே. ''ஆமா, முழங்கால் வலி ஜாஸ்தியா இருக்கு. டாக்டர்ட்ட அப்பாயின்மெண்ட் வாங்கிட்டேன். ஏழு மணிக்கு அப்பாயின்மெண்ட். டிஃபன் ரெடி பண்ணு'' என்றபடி குளிக்கச் சென்றான். அருணாவும் கவலையுடன் அடுப்படிக்குள் நுழைந்தாள்.

அது என்ன பிஎம்ஐ? அதாவது 'பாடி மாஸ் இண்டெக்ஸ்' என்பதன் சுருக்கமே ஆகும். இதனை நாமே கணக்கிட்டுக் கொள்ளலாம். எப்படி? இதற்கு உங்களது உயரமும் எடையும் தெரிய வேண்டும். எடையை கிலோகிராமில் எழுதிக் கொள்ளுங்கள். உயரத்தை மீட்டரில் கணக்கிடுங்கள். எடையை மீட்டரினால் ஆன உங்கள் உயரத்தின் வர்க்கத்தினால் வகுக்க வேண்டும்.

உதாரணத்துக்கு ஒருவர் 60 கிலோ எடை என்று கொள்வோம். அவரது உயரம் 1.58 மீட்டர் என்று கொள்வோம். அப்போது அவரது பிஎம்ஐ

60 / 1.58 X 1.58 = 24

ஒருவரது பிஎம்ஐ 18.5க்கும் கீழே இருந்தால் அவர் மெலிந்தவர்.

18.5 - 24.9க்கு இடைப்பட்டிருந்தால் அவரது எடை உயரத்துக்கு ஏற்றவாறு இருப்பதாக அறியலாம்.

25 - 29.9க்கு இடையில் இருந்தால் அவர் பருமனானவர்.

30க்கு மேலிருந்தால் அவர் ஒபிஸிடி அல்லது அதீத பருமன் வகையைச் சேர்ந்தவர், அருணாவைப் போல.

(தொடரும்)

ஒரு சபதம்!

லக்ஷ்மி மோகன்



‘உங்கள் குழந்தையைக் கண்டுபிடித்துவிட்டார்கள்’ என்று நண்பர்கள் சொன்னதும், மகிழ்ச்சியில் வெடித்து அழ ஆரம்பித்துவிட்டார் ஜயபுன்னிசா. ‘அழாதீர்கள் அம்மா இப்போதே சென்று அழைத்துக்கொண்டு வந்துவிடலாம்’ என்று சொல்லித்தான் அவர்கள் கிளம்பினார்கள். தான் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலி என்று நினைத்துப் பூரித்துப் போனார் ஜயபுன்னிசா. ‘இப்போது என் குழந்தைக்கு ஆறு வயது இருக்கும். அழகாக வளர்ந்திருப்பான். நன்றாகப் பேசப் பழகியிருப்பான். முதலில் என்னை அவனுக்கு அடையாளம் தெரியாமல் போகலாம். ‘கண்ணா, நான்தான் உன் அம்மா’ என்றதும், ஓடிவந்து என்னைக் கட்டிக்கொள்ளப் போகிறான். இதோ வந்துகொண்டே இருக்கிறேன், மகனே காத்திரு.’

கடைசியாகத் தன் மகனை அவர் பார்த்தது, பிப்ரவரி 28, 2002ல் அகமதாபாத்திலுள்ள கஸ்பூரில். மடியில் கிடத்தி பால் புகட்டிக்கொண்டிருந்தார். கதவை எட்டி உதைத்து உள்ளே நுழைந்தது ஒரு கும்பல். இரண்டு பேர் குழந்தையை அவர் கையில் இருந்து பிடுங்கினார்கள். அவ்வளவுதான் தெரியும் ஜயபுன்னிசாவுக்கு. மயக்கம் கலைந்தபோது வீடு எரிந்து கொண்டிருந்தது. வெளியில் பாய்ந்து வந்தார். பக்கத்து வீடும் எரிந்து கொண்டிருந்தது. கலவரம் என்று யாரோ சொன்னார்கள். எதுவும் காதில் விழ வில்லை ஜயபுன்னிசாவுக்கு. ‘என் குழந்தை எங்கே? எங்கே? யாராவது பார்த்தீர்களா?’ வருடங்கள் பல உருண்டன.

கதவைத் தட்டும் ஓசை கேட்டு, திறந்து பார்த்தார் மீனா. அவர் புடைவைத் தலைப்பைப் பிடித்தபடி கண்களை அகலத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன். ஜயபுன்னிசா பாய்ந்து சென்று ‘முஸாஃபிர் முஸாஃபிர்’ என்று அவனைக் கட்டிக்கொண்டார்.

‘முஸாஃபிர் இல்லை, இவன் விவேக்.’ எரிச்சலுடன் வந்து விழுந்தது அந்தப் பதில். ‘ஓ, அதனாலென்ன பரவாயில்லை. பெயரை மாற்றியிருக்கிறீர்கள். பாதகமில்லை. இவன் கிடைத்தது என்



எனக்கு ஒரே ஒரு அம்மாதான்!

மருதன்

பாக்கியம். மீனா, மீனாதானே உங்கள் பெயர்? உங்களுக்கு கோடி நன்றிகள். தொலைந்தே விட்டான் என்று நினைத்துக்கொண்டிருந்த என் மகனை, நல்லபடியாக வளர்த்திருக்கிறீர்கள். உங்களுக்கு நான் மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.'

'என்னது? உங்கள் மகனா?' சட்டென்று விவேக்கைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டார் மீனா. 'இவன் என் மகன், தயவுசெய்து இவனிடம் உரிமை பாராட்டாதீர்கள். எங்களுடைய ஒரே சொத்து இவன்தான்.' சரி, பழகிய பாசம் என்று நினைத்தார் ஜயபுன்னிசா. மீண்டும் ஒரு நன்றியை உதிர்த்துவிட்டு, 'சரி நாங்கள் கிளம்பறோம்' என்று ஜயபுன்னிசா தன் மகனின் கையைப் பிடித்தபோது, 'சரி போய் வாருங்கள்' என்று அவனைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டார் மீனா.

ஊர் மக்கள் கூடிவிட்டார்கள். 'கண்டெடுத்த குழந்தைதானே, கொடுத்துவிடேன்' என்றபோது, மகனைத் தன் மார்போடு சேர்த்து இறுக்கமாகக் கட்டிக்கொண்டார் மீனா. 'நான் சுமந்து பெத்த குழந்தையை என்னிடம் கொடுத்துவிடுங்கள்' என்று கதறியழ ஆரம்பித்துவிட்டார் ஜயபுன்னிசா. டிஎன்ஏ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. ஜயபுன்னிசாதான் குழந்தையின் அம்மா. சான்றிதழ் கொடுத்துவிட்டார்கள். அந்தக் காகிதத்தைத் திரும்பிக்கூடப் பார்க்க மறுத்துவிட்டார் மீனா.

'சரி குழந்தையிடமே கேட்டுவிடலாம்' என்று யாரோ சொன்னார்கள். பேசத் தெரிந்த சிறுவன், அவன் முடிவு என்ன? துப்பட்டாவால் கண்களைத் துடைத்துக்கொண்டிருந்த அந்தப் பெண்ணை ஒருமுறை பார்த்துவிட்டு, ஓடிச்சென்று மீனாவை அணைத்துக்கொண்டான் விவேக். 'அம்மா, அம்மா, ஏன் இவர் என்னைப் பார்க்கும்போதெல்லாம் அழுதுகொண்டிருக்கிறார்? என்னை ஏன் முஸாஃபிர் என்று அழைக்கிறார்?'



* ஜயபுன்னிசா

பெற்ற அம்மாவிடம் சேர்வதுதான் முறை என்கின்றன சில பத்திரிகைகள். மீனா பாவம், ஆறு ஆண்டுகள் பழகிவிட்டார். திடீரென்று குழந்தையைப் பிரிப்பது சரியல்ல என்கிறார்கள் வேறு சிலர். இரண்டு குடும்பங்களும் எதிர் எதிரே நின்று போராடிக்கொண்டிருக்கின்றன. அவரவருக்கு அவரவர் பக்க நியாயம். இதில் யார் நியாயம் சரியானது?

விவேக்கிடம் 'உனக்கு இந்த அம்மா வேண்டுமா? அந்த அம்மா வேண்டுமா?' யார் யாரோ வந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரே பதிலைத்தான் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருக்கிறான் விவேக். 'எனக்கு ஒரு அம்மா தான்.' படித்து முடித்து என்னவாகப் போகிறாய்? 'போலீஸ் மேன்!' ○

என்னை இயக்கிய ஹீரோக்கள் - 2

ஒரு மேன்ஷனும்



ஒவ்வொரு இளைஞனும் இருபது வயதிலிருந்து இருபத்தைந்து வயதுக்குள் எதிர்கொள்ளும் விஷயங்கள் பல உண்டு. சிலருக்கு முழுதாக வளர்ந்த மீசை, சிலர் அடிப்படை சம்பளத்துக்கு வேலைக்குப் போயிருப்பது, சிலருக்கு வீரம் மொத்தமும் திரட்டி விஸ்கி அடிக்கும் சாதனை, சிலருக்கு காதல், பலருக்கு வாழ்க்கையை எதிர்கொள்ளும் போராட்டத்தில் அவர்கள் சந்திக்கும் 'மேன்ஷன்!' இவற்றுள் இந்த மேன்ஷன் மட்டும் ஒரு வினோதமான ஜந்து! இளைஞர்களின் வாழ்க்கையில் டீன்ஏஜ் பருவத்திலிருந்து வாழ்க்கை பருவத்தை நோக்கித் தாவும் போது, அந்தரத்தில் இருக்கும் பருவம்தான் இந்த மேன்ஷன் காலம்! தாவும்போது பலர் மறுகிளைக்குப் போய்விடுவர். சிலர் அதள பாதாளத்துக்குப் போய்விடுவர். வேறு சிலர் அந்தரத்திலேயே வெகு காலம் நிற்பர்.

''ராணுவ பயிற்சிக் கூடங்களில் சங்கமிக்கும் மனித உணர்வுகளின் சரித்திரங்கள் எழுதப்படாமலே முடிந்து போய்விடுகின்றன'' என்பார் இயக்குநர் க்யூப்ரிக். அதேபோலதான் லோக்கல் மேன்ஷன்களில் டீ கிளாஸ், சிகரெட், புத்தகங்கள் சகிதமாக மனித உணர்வுகளின் சங்கமிப்புச் சரித்திரங்களும் எழுதப்படாமலே

கடந்து போய்விடுகின்றன. நாம் படித்த பள்ளி, கல்லூரி போல மேன்ஷனும் நம்மை உருவாக்கியதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

நான் விகடனில் வேலைக்குச் சேர சென்னை வந்தபோது, மேன்ஷன் எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. நானும் உடன் பணிபுரிந்த நண்பர் பா.ராஜநாராயணனும் சேர்ந்து மேன்ஷன் தேடினோம். ஜாம்பஜார் மார்க்கெட் பின்புறம் கடைகளைக் கடந்து செல்லும்போது திடுமென ஒரு வாசல். கேட்டால் மேன்ஷன் என்றார்கள். மறுபடி சற்றுப் பின்னால் வந்து பார்த்தால் மேன்ஷனைக் காணோம். தஞ்சை பெரிய கோயில் டைப் ஆர்க்கிடெக்சர்! ஐந்தடி சுற்றளவுக்குள் மட்டுமே நம் கண்களுக்கு அது புலப்படும். இதுபோல பல ஆர்க்கிடெக்சர் ஐட்டங்கள் அதில் உண்டு.

ராசி பார்த்தியா? சீக்கிரமே முழிப்பு வந்துருச்சு. நாளைல இருந்து பிச்ல ஜாக்கிங் போகணும்'' என்றார். யதார்த்தமாக கடிகாரத்தைப் பார்த்தால், மணி பதினொண்ணே முக்கால்! கடிகாரம் நின்றுவிட்டது போல என எழுந்து கதவைத் திறந்தால், தூரத்தில் மேன்ஷன் வாசலில் வெயில் மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. வாட்ச் டைம் சரிதான். இருவரும் அதிர்ச்சியோடு குளிக்காமல் கொள்ளாமல் கிளம்பினோம். யெஸ்... இதுவும் ஆர்க்கிடெக்ட் உத்திதான்! சூரியனே வந்து

டிஸ்கவரி சேனலும்

வாசலில் நின்றாலும் வெளிச்சம் உள்ளே வந்து விடாதபடி, பார்த்துப் பார்த்துக் கட்டியிருந்தார்கள் அந்த மேன்ஷனை.

அறைக்குள் சற்று வேகமாகப் போனாலே மறுசுவரில் முட்டிவிடுவோம். அகல வாக்கில் படுக்க முடியாது. நீள வாக்கில் மட்டுமே படுக்க முடியும். ஒரே நேரத்தில் இருவரும் எழுந்து நின்றால், மூக்கும் மூக்கும் இடிக்கும். ஜன்னல் எதுவும் கிடையாது. கதவுக்கு மேல் ஒரு அடிக்கு ஒரு அடியில் ஒரு சின்ன வென்டிலேட்டர், அவ்வளவுதான்.

முதல் நாள் படுத்தபோது காலை நாலு மணிக்கெல்லாம் முழிப்பு வந்துவிட்டது. எனக்கு மட்டுமில்லை... ராஜநாராயணனுக்கும்தான்.

''பரவாயில்லை... இடத்தோட

அறைகளைத் தாண்டி கடைசியில் இருக்கும் பாத்ரூம், டாய்லெட், 'நெகட்டிவ் லேப்' போல எப்போதுமே இருட்டாக இருக்கும். அதில் பல்பு எங்கிருக்கிறது... சுவிட்ச் எங்கிருக்கிறது... என்பதெல்லாம் அதைக் கட்டிய கொத்தனார் உட்பட யாருக்குமே தெரியாது. இருட்டு என்பதால் வெறும் தரையிலேயே பலர், படியில் நடப்பது போல் காலைத் தூக்கித் தூக்கி வைத்து நடப்பார்கள்.

இன்னொரு ஆர்க்கிடெக்ட் உத்தி அதன்

இயக்குநர் சிம்புதேவன்

தரை! ஈரமாக உள்ளதா... காய்ந்திருக்கிறதா என வெறும் கண்களுக்குத் தெரியாது. அது மொசைக்கா? சிமென்ட்? அல்லது வெறும் மண்ணா? கடைசி வரை யாராலும் கண்டு



பிடிக்க முடியாது. இதில்தான் நாம் துவைக்க வேண்டும். அழுக்கு போனதா இல்லையா என்பதெல்லாம் சட்டையைப் போடும்போதுதான் தெரியும்.

அடுத்த ஆர்க்கிடெக்ட் ஐட்டம்! ரூமுக்குள் கொடி கட்டியிருப்பார்கள். துணிகளை வேறு எங்கும் காயப்போட முடியாது. இந்தக் கொடிகளில் துணிகளைக் காயப் போட்டால், காய்வதற்கு மூன்று பகல், இரண்டு இரவு தேவைப்படும். அதாவது திங்கள் காலையில் போட்டால் புதன் மாலைதான் காயும். இதில் ராஜநாராயணன் வேறு அந்த வெண்டிலேட்டரை மறைத்து காயப்போடுவார். பிறகென்ன? காலை மூன்றரைக்கெல்லாம் முழித்தது போல் இருக்கும்.

உட்குறிப்பு இப்படியென்றால் மேன்ஷனின் வெளிப்பகுதி இன்னும் சுவாரஸ்யம். அந்தத் தெருவில் குறுக்கும் நெடுக்குமாக பலதரப்பட்ட மனிதர்கள், விதவிதமான கூக்குரலோடு அலைந்து கொண்டே இருப்பார்கள். ஏதோ அணு குண்டு போட்ட பின் எல்லோரும் ஊரைக் காலி பண்ணிக்கொண்டிருப்பது போன்ற பிரமை. மனிதர்களுக்கு இணையாக மாடுகளும், நாய்களும் அதிகம்.

வேலை முடிந்து இரவு பதினொரு மணிக்கு நாங்கள் இருவருமாக திரும்பும் போது சதா பயம்தான். தூரத்தில் இருட்டுக்குள் நாய் படுத்திருக்கும். எனக்கு நாயென்றால் பயம். ராஜ நாராயணனுக்கோ மரண பயம். பாதுகாப்புக்கு கையில் ஒரு கல்லையும் எடுத்துக்கொண்டு தட்டுத்தடுமாறி நெருங்கினால், 'மே' என அந்த ஆடு எழுந்து செல்லும். சமயத்தில் ஆடு என நினைத்து அலட்சியமாகச் சென்றால், கொலைவெறியோடு நாய் விரட்டும்.

அடுத்து நான் தங்கியது S.N.M. மேன்ஷன். நல்ல தேடலுக்குப் பின் கிடைத்த தனியறை. அட்டாச்டு பாத்ரூம். கொஞ்சம் வெளிச்சம் வேறு வரும். பக்கிங்ஹாம் அரண்மனையிலேயே இடம் கிடைத்த திருப்தி. ரூம் நிறைய புத்தகங்களும் நானும்தான்! 'கி.மு.வில் சோமு' படக்கதையை உருவாக்கியது இங்குதான்!

இரண்டு ரூம் தள்ளி நண்பர் விஜய கிருஷ்ணன். முறுக்கு, சீடைகளோடு நண்பர்களுக்காகக் காத்திருக்கும் அன்னை உள்ளம் கொண்டவர். மூன்று நான்கு பேராக இரவு செட்டிலாகி, நின்று கொண்டே ஜனாதிபதியில் தொடங்கி மேன்ஷன் மேனேஜர் வரை எல்லாருமே

தப்பு எனும் ரீதியில் பேசுவோம். ஓவர் பேச்சு! வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு நடிகர் 'அர்ஜு'னைவிட நாட்டுப் பற்று கொண்டவர்கள் எனத் தோன்றும். விடிந்தவுடன் சுயநல வாழ்க்கை தொடங்கி விடும். பேச்சு வேறு... வாழ்க்கை வேறு.

மேன்ஷனில் விதவிதமான மனிதர்கள் உண்டு. ஆஸ்துமா கிழவர், சதா ஹிண்டு படிக்கும் இன்ஜினீயர், 'ஒரு பெக்கு போடுவமா?' என எல்லோரையும் அழைக்கும் காசில்லாதவன். அந்தச் சின்ன உண்டு. எல்லோருக்கும் தனித்தனி சரித்திரம்!

மெட்ரோபாலிடன் சிட்டியில் மேன்ஷன்காரனின் வாழ்க்கை வினோதமானது. குறிப்பாக, திருவல்லிக்கேணியில்! உலகின் மிக நீண்ட பீச், வானளாவிய கட்டடங்கள், பளபளக்கும் சினிமா தியேட்டர்கள், விதவிதமான சாப்பாடுகள், கோயில்கள், பூஜை ஒலி, அழகழகான

"சேவல் பண்ணைகளாக உயர்ந்து நிற்கும் இந்த ஒடுங்கிய கட்டடங்களின் சிறை போன்ற அறைகள்தான், நம் இந்தியாவின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும்"

ரூமுக்குள்ளேயே ஃப்ரிட்ஜ், கட்டில், பீரோ, வாஷிங்மிஷின் என சகலத்தையும் ஒளித்து வைத்திருக்கும் கவர்ன்மென்ட் வேலைக்காரர், கம்ப்யூட்டர் படிப்பவர்கள், பேங்க் எக்ஸாம் படிப்பவர்கள் என நிறைய பேர் பெண்கள்... வறுமைக்கும் குழப்பத்துக்கும் நடுவே இவற்றைப் பார்ப்பது ஏதோ டிஸ்கவரி சேனல் பார்ப்பது போன்ற ஃபீலிங்தான் இருக்கும்!

'சேவல் பண்ணைகளாக உயர்ந்து நிற்கும் இந்த ஒடுங்கிய கட்டடங்களின் சிறை போன்ற அறைகள்தான், நம் இந்தியாவின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் ஏராளமான நல்லவர்களையும் கெட்டவர்களையும் உருவாக்குகிறது!'

'அறை எண் 305ல் கடவுள்' படத்தில் ஆரம்பத்தில் கூறப்படும் இந்த வார்த்தைகளில் நிறைய உண்மையிருக்கிறது.

(பேசுவேன்)

படம் : ஸ்ரீஹரி



''எழுத்துப் பணிக்கு உங்க மனைவி ரொம்ப உதவுவாங்களா... எப்படி?''

''நான் எழுதும்போது வீட்டு வேலை எதையும் செய்யச் சொல்ல மாட்டா!''

- சீர்காழி வி. ரேவதி

இந்து மகா சபையின் தலைவர்களுள் ஒருவரான என்.சி. சட்டர்ஜியின் மகனான சோம்நாத், காவிச் செடியில் பூத்த சிவப்பு மலர்

★ ''என்றைக்கு மக்களவையின் சபாநாயகராக என்னைத் தேர்ந்தெடுக்கிறீர்களோ அன்று முதல், நான் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டுத்தான் செயல்படுவேன்; இதற்கு ஒப்புக்கொண்டால், என்னை அந்தப் பொறுப்புக்கு அனுப்புங்கள்'' என்று சொல்லி, அதற்கு கட்சியிடம் ஒப்புதல் வாங்கிக்கொண்டுதான் சபாநாயகராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்; தமது கொள்கையில் உறுதியாக இருந்து, கட்சி அரசியலைக் கடந்து, இன்று உயர்ந்து நிற்கிறார் சோம்நாத் சட்டர்ஜி.

★ அஸ்ஸாம் மாநிலம் தேஜ்பூரில் பிறந்த சோம்நாத்தின் பள்ளி, கல்லூரி படிப்பு கொல்கத்தாவில்தான். அதன் பின்னர் லண்டனுக்குச் சென்று மேல் படிப்பைத் தொடர்ந்தார். புகழ்பெற்ற 'மிடில் டெம்பிள்' கல்லூரியில் சட்டம் முடித்து, வழக்கறிஞராக கொல்கத்தா திரும்பினார்.

★ அப்பா என்.சி.சட்டர்ஜி இந்து மகா சபையின் தலைவர்களில் ஒருவர். மகன் சோம்நாத் சட்டர்ஜியோ கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களில் ஈடுபாடுகொண்டு, காவிச் செடியில் பூத்த சிவப்பு மலரானார்.

★ பெரும்பாலான கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு, தலைமறைவு வாழ்க்கை, சிறை வாசம் என்று வீரம் செறிந்த அனுபவங்கள் இருக்கும். ஆனால், அதுபோன்ற அனுபவம் எதுவும் சோம்நாத் சட்டர்ஜிக்குக் கிடையாது. ஆயினும் அவர் ஏழைகளின் வாழ்க்கையைக் குறித்தே சிந்தித்தார்.

★ இதுவரை பத்து முறை பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். முதல் மூன்று முறை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு பெற்ற சுயேச்சையாகத்தான் தேர்தலில் போட்டியிட்டார். ஒரு முறை மம்தா பானர்ஜியால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்.

★ மேற்கு வங்க தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராகவும் பதவி வகித்திருக்கிறார். தொழிலதிபர்களிடம், கடனை வசூலிக்க 'one time settlement' என்ற முறையைக் கையாண்டதும் சர்ச்சையை உருவாக்கியது.

★ கொல்கத்தாவில் சாந்திநிகேதன் - ஸ்ரீ நிகேதன் வளர்ச்சிக் குழுமத்தின் தலைவராக இருந்தபோது, தனியார்களுக்குக் கட்டடம் கட்ட வழங்கப்பட்ட அனு



மதியும் மீடியாவால் பரபரப்பாக அலசப் பட்டது. இதுபோன்ற பல சர்ச்சைகள் இருந்தாலும், எந்தக் குற்றச்சாட்டும் நிரூ பிக்கப்படவில்லை.

★ மற்ற வங்காளிகளைப் போல், அரசியலுக்குப் பிறகு, சோம்நாத்துக்கு மிகவும் பிடித்த விஷயம் கால்பந்து. உள்ளூர் போட்டியிலிருந்து உயர் நிலைப் போட்டி வரை பார்வையாளராக ஆஜராகிவிடுவார். புகழ்பெற்ற மோகன் பகன், கால்பந்து கிளப்பில் உறுப்பினர்.

★ இவர் சபாநாயகராகப் பொறுப் பேற்றுக்கொண்டபோது, வாஜ்பாய், "நீங்கள் ஸ்பீக்கர்... ஆனால், அமைதியைக் கடைப்பிடியுங்கள்; அதிகம் பேச வேண் டாம்'' என்று ஆலோசனை சொன்னார். ஆனால், சோம்நாத் வரம்பு மீறும் உறுப் பினர்களை அடக்க, அதிகம் பேச வேண்டி யதாகிவிட்டது. இரண்டு முறை 'நான் ராஜினாமா செய்வேன்' என்று பயமுறுத்தி யிருக்கிறார். பாராளுமன்ற உறுப்பினர் களிடம் இவர் கண்டிப்பு காட்டுவதால், 'ஹெட்மாஸ்டர்' என்று கிண்டலாக பெயர் சூட்டியுள்ளனர்!

★ பொதுவாக சபாநாயகர் வீட்டில் சோப்பு, சீப்பு, டீ, காப்பி செலவுகளுக் கும் அரசு பணம்தான். ஆனால், சோம் நாத் "இதுபோன்ற செலவுகளுக்கு எனக்கு அரசு பணம் வேண்டாம்'' என்று சொல்லிவிட்டார்.

★ அரசு சார்பாக வெளிநாடு செல்லும்போது மனைவி ரேணு உடன் வந்தால், அவரது முழுச் செலவையும் சோம்நாத்தே ஏற்றுக்கொள்வார். இவரது குடும்பத்தில் இவரைத் தவிர யாரும் அரசியலில் இல்லை.

★ ஜோதிபாசுதான் இவரது அரசியல் குரு. 1996ல் ஜோதிபாசுக்கு பிரதமர் ஆகும் வாய்ப்பு வந்தது. ஆனால், கட்சி ஒப்புக் கொள்ளவில்லை. "இது வரலாற்றுத் தவறு'' என்று இன்றும் நண்பர்களிடம் சொல்லிக்கொண்டிருக்கிறார் சோம்நாத்.

★ மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யைப் பொறுத்தமட்டில், ஒருவரைக் கட்சி யில் இருந்து நீக்கிவிட்டால், அவருடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் பகிஷ் கரித்துவிடுவார்கள். 80 வயதைத் தொட்டி ருக்கும் சோம்நாத் தாம் இறந்த பிறகு, தம் மீது செங்கொடி போர்த்தப்படுவதையே விரும்புகிறாராம். எனவே, பதவியை ராஜி னாமா செய்துவிட்டு, கட்சியுடன் சமரசம் செய்துகொள்வார் என்று சில மூத்த காம்ரேடுகள் சொல்கிறார்கள். இவரது முடிவு ஜோதிபாசு கையில்தான் இருக்கிற தாம்.

– கௌசி



நவதிருப்பதிகளுக்கும் சென்று கண்ணனைத் தரிசித்தோம். இனி, அதற்குச் சற்று அருகிலேயே உள்ள திருக்கோஷ்டியூருக்கு நாம் போக வேண்டும். அங்கு போவதற்கு முன் மீண்டும் ஒரு முறை ஆழ்வார்திருநகரி சென்று நம்மாழ்வாரிடம் நாம் விடைபெற வேண்டியிருக்கிறது.

ஆழ்வாருக்கு பராங்குச நாயிகா என்று ஒரு பெயர் உண்டு - பெண் பாவனையை ஏற்றுக்கொண்டதால் இந்த நாமம்.

அங்குசம் என்றால் நமக்குத் தெரியும். யானையை அடக்குவதற்குப் பயன்படும் ஆயுதம். யானை எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அது எத்தனை ஆட்டம் போட்டாலும், சின்னதாக இருக்கும் மாவட்டி அங்குசத்தை அதன் முன்னே வைத்து விட்டால், அதைத் தாண்டத் துணியாது!

அதேபோல்தான் ஆழ்வார் - பரனுக்கே அங்குசம் வைத்தவர். பரனான ஸ்ரீமன் நாராயணனை ஒரு மாவட்டி போலே, ஓர் அங்குசத்தைப் போலே தம் திருவாய் மொழி ஒவ்வொரு பாசுரத்தைக் கொண்டும் அழுத்தி வைத்தார் அல்லவா!

இன்றைக்கும், எந்த விஷ்ணு கோயிலுக்குப் போனாலும் அங்கே பெருமாள் புறப்பாடு நடக்கிறபோது, நாலாயிர திவ்ய பிரபந்த ஸேவை பெருமானுக்கு முன்னே நடந்து செல்லும். அத்யாபக சுவாமிகள் ஸேவித்துக்கொண்டு போவார்கள். பெருமாள் அதற்குப் பின்னாடிதான் வருவார். பெருமாளுக்குப் பின்னாடிதான் சம்ஸ்கிருத வேதமே வரும்!

வேதத்தின் முன் செல்க
விரிஞ்சன் முதலானோர்



கண்ணனைத் தேடி... 16



கோதற்ற ஞானக் கொழுந்தின் முன் செல்க
எங்கள் தென்குருகூர்ப் புனிதன் கவி
பாதத்தின் முன் செல்லுமே... பரஞ்சுடரே!

பெருமான் வடமொழி வேதத்தைத் தாண்டலாம். பிரமன், இந்திரன் முதலான தேவதைகளின் அறிவைத் தாண்டலாம். ஆனால், ஆழ்வார் பாடிய ஒரு பாசுரத்தினுடைய ஒரு வரியைக்கூடத் தாண்டி எம்பெருமானாலேயே நடக்க முடியாது.

ஆகவே, அவனையும் தன் பக்திப் பெருக்காலே, தன் பாசுரச் சுவையாலே அங்குசமிட்டு நிறுத்தி வைத்தவர் ஆழ்வார்.

இப்படிப்பட்ட நம்மாழ்வார் திருநக்ஷத்திரமான வைகாசி விசாகத்தன்று ஆழ்வார்திருநகரி சென்று ஸேவிக்க வேண்டும். அங்கே ராமானுஜ சதுர்வேதி மங்கலத்துக்கு நடுவிலே அமைந்துள்ள (எம்பெருமானார்) ராமானுஜர் சன்னிதியிலே ஆழ்வாரையும் ராமானுஜரையும் சேர்ந்து ஸேவிக்க வேண்டும். இந்த ராமானுஜர் (விக்கிரகத்) திருமேனிக்குத் தனிச் சிறப்பு உண்டு. பவிஷ்யதாசார்ய விக்ரஹம் என்று இதற்குப் பெயர்.

இதற்குப் பின்னால் ஒரு சுவையான சரித்திரம் இருக்கிறது. இந்தத் திருத்தலத்திலே நம்மாழ்வார் 32 ஆண்டுகள் எழுந்தருளியிருந்தார். மதுரகவியாழ்வாருக்கு எல்லா அர்த்தங்களையும் நாலு

பராங்குசன் பெருமைகள்



வேளுக்குடி ஸ்ரீ க்ருஷ்ணன் சுவாமிகள்

பிரபந்தங்களையும் கொடுத்தார். இவ்வுலக வாழ்க்கையை முடித்துக்கொண்டு தாம் ஸ்ரீவைகுண்டம் புறப்பட்டார்.

அப்போது மதுரகவியாழ்வார், ''உம்மை விட்டுப் பிரிந்து எம்மால் எப்படி உயிர் வாழ முடியும்? உம்முடைய நினைவாக எதையாவது எம்மிடத்திலே விட்டுச் செல்லும்'' என்று பிரார்த்தித்தார். உடனே நம்மாழ்வார் மதுரகவியாழ்வாருக்கு ஆணையிடுகிறார்:

''நீர், நேரே சென்று தாமிரபரணி ஆற்று நீரை எடுத்துக் காய்ச்சும். அதிலிருந்து ஒரு விக்கிரகம் - ஒரு சிலை - வரும். அதைக் கொண்டு வாரும்'' என்று தெளிவித்தார்.

மதுரகவிகள், தாமிரபரணித் தண்ணீரைக் காய்ச்சக் காய்ச்ச, அதிலிருந்து புதியதான விக்கிரகம் ஒன்று உருவாயிற்று. அது நம்மாழ்வாருடைய விக்கிரகம் அல்ல; ராமானுஜருடைய விக்கிரகம்!

இவ்விடத்தில் ஒரு முக்கியமான செய்தி. நம்மாழ்வாருடைய காலம் 5100 ஆண்டுகளுக்கு முந்தையது. ராமானுஜருடைய காலமோ, இன்றைக்கு 1,100 வருடங்கள் முன்பாக. அப்படியானால் நம்மாழ்வாருக்கும் ராமானுஜருக்கும் நான்காயிரம் ஆண்டுகள் வேறுபாடு உண்டு. நான்காயிரம் ஆண்டுகள் கழித்து, இவ்வுலகத்திலே பிறக்கப் போகிற ராமானுஜருடைய விக்கிரகம், நம்மாழ்வார் வாழ்ந்திருந்த காலத்திலேயே உருவாகிவிட்டது.

பின்னர் இந்த ராமானுஜர்தான் இவ்வுலகிலே ஆசார்யராக எழுந்தருளி, உலகத்துக்கே பக்தி மார்க்கத்தையும் சரணாகதி மார்க்கத்தையும் போதிக்கப் போகிறார் என்பதை, நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கோடிட்டுக் காட்டியிருக்கிறார் நம்மாழ்வார்! அதனால்தான் மதுரகவி, ஆற்றுநீரைக் காய்ச்சியவுடன் ராமானுஜர் விக்கிரஹமே தோன்றியது! இந்த விக்ரஹத்துக்கு பவிஷ்யதாசார்ய



✱ மதுரகவியாழ்வார்

''உம்மை விட்டுப் பிரிந்து எம்மால் எப்படி உயிர்வாழ முடியும்? உம்முடைய நினைவாக எதையாவது எம்மிடத்தில் விட்டுச் செல்லும்.''

விக்ரஹம் என்று ஏன் பெயர்? பவிஷ்யத் என்றால் - வருங்காலம். ஆசார்யர் - குரு! 'வருங்காலத்தில் ஜகதாசார்யராக இருக்கப் போகிறார் இவர்' என நம்மாழ்வாரால் உகக்கப்பட்டவர் ஸ்ரீ ராமானுஜர்.

ஆனால், ராமானுஜர் விக்ரஹம் கிடைத்தும் மதுரகவி ஆழ்வாரின் ஆசை தீரவில்லை. ''நான் கேட்டது நம்மாழ்வாரே, உம்மை! ஆனால், ராமானுஜர் விக்கிரஹம் அல்லவா வந்திருக்கிறது!'' என்றார்.

உடனே நம்மாழ்வார், மறுபடியும் ஒருமுறை தாமிரபரணி நீரைக் காய்ச்சும்படி

சொன்னார். மறுபடியும் காய்ச்ச, நாம் இன்று ஆழ்வார்திருநகரியிலே ஸேவிக்கின்ற நம்மாழ்வார் திருமேனி கிடைத்தது.

இந்த அற்புதங்களெல்லாம் என்றைக்கோ நிகழ்ந்ததென்றாலும், இன்றைக்கு நாம் ஆழ்வார்திருநகரியிலே அன்றைக்குத் தோன்றிய நம்மாழ்வாரையும் ஸேவிக்கலாம், ராமானுஜரையும் ஸேவிக்கலாம்.



* நம்மாழ்வார்

"நீர், நேரே சென்று தாமிரபரணி ஆற்று நீரை எடுத்துக் காய்ச்சும். அதிலிருந்து ஒரு விக்கிரகம்-சிலை-வரும். அதைக் கொண்டு வாரும்."

அதுவும் வைகாசி விசாகத்தன்று, நம்மாழ்வார் தாமிரபரணி ஆற்றிலே தீர்த்த வாரி கண்டருளி, பவிஷ்யதாசார்யருடைய சன்னிதிக்கு எழுந்தருள்வதைப் பார்க்கலாம். நம்மாழ்வாரும் ராமானுஜருமாக ஒரே ஆஸனத்தில் அமர்ந்து, நமக்கு ஸேவை சாதிக்கிறார்கள். இது ஓர் ஆச்சர்யமான திருக்கோலம். கண்கொள்ளாக் காட்சி.

இந்த நம்மாழ்வார் திருமேனி கிடைத்த தினம் மாசி மாதத்து விசாகம். ஆகவே, திருமேனி எழுந்தருளப்பண்ணப்பட்ட உத்ஸவம் மாசி மாதம் விசாகத்தில் நடைபெறும். இந்த இரண்டு மாதங்களிலுமே பத்து பத்து நாட்கள் உத்ஸவங்கள் ஆழ்வார்திருநகரியிலே ஸேவிக்கலாம்.

மற்றொரு கதையின்படி, நாதமுனிகள் நம்மாழ்வாரைக் கூப்பிட்டு நாலாயிரம் பிரபந்தங்களையும் பெற்றுக்கொண்டதாக வருகிறது. திருப்புளியாழ்வார் நிழலிலே இது நடந்ததல்லவா, அப்போதே ராமானுஜர் திருமேனியையும் நம்மாழ்வார் நாதமுனியிடம் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

நம்மாழ்வார் திருநக்ஷத்திரமான வைகாசி விசாகத்திலேயே அவதரித்தவர் திருவாய்மொழிப் பிள்ளை என்கிற மற்றொரு ஆச்சார்யர். வைணவ பரம்பரையில் இவருக்கு முக்கியமான இடம் உண்டு. பிள்ளை லோகாசார்யருக்கு அடுத்து அவதரித்து, மணவாள மாமுனிகளுக்கு ஆசார்யனாக இவர் விளங்கினார். இந்த ஆழ்வார்திருநகரி - திருக்குருகூர் தேவஸ்தானத்தை புனருத்தாரணம் பண்ணியவர் அவர்தான்.

ஆழ்வார் என்றோ அவதரித்து இங்கு வாழ்ந்தார். பிற்பாடுதான் அவருக்குக் கோயில் கட்டப்பட்டது. ஆனால், நாள் செல்லச் செல்ல கோயில் புதர்மண்டிப்

போயிற்று. ஆற்றுநீர்ப் பெருக்காலே மணல் மண்டிப் போயிற்று. திருவாய்மொழிப்பிள்ளை, தம்முடைய காலத்திலே இந்த ஊரையும் மறுபடி ஸ்தாபித்தார்; ஆழ்வார் சன்னிதியையும் ஸ்தாபித்தார். ராமானுஜர் சதுர்வேதி மங்கலம் என்கிற நான்கு வீதிகளையும் உருவாக்கி, ராமானுஜருக்கு நடுவிலே கோயிலையும் அமைத்து பிரதிஷ்டை பண்ணினார்.

அந்தத் திருவாய்மொழிப் பிள்ளைக்கும் இங்கே தனி சன்னிதி இருக்கிறது. ஸ்ரீசைலநாதர் என்பது இவரது இயற்பெயர். திருவாய்மொழி மீது இருந்த ஈடுபாட்டாலே அவர் பெயரே 'திருவாய்மொழிப் பிள்ளை' என ஆகிவிட்டது! ஆழ்வார் திருநகரியில் அவதரித்த மணவாள மாமுனிகள், இந்த சுவாமியினிடத்திலேதான் எல்லா அர்த்தங்களையும் கேட்டறிந்தார். இவ்வூரில், நம்மாழ்வாருடைய ஆஸ்தானத்தில், மிக முக்கியமான பல கைங்கர்யங்களை திருவாய்மொழிப் பிள்ளையின் வம்சத்தவர்கள் இன்றைக்கும் நிகழ்த்தி வருகிறார்கள்.


* ராமானுஜர்

திருச்சங்கணித்துறை என்று தாமிரபரணிக் கரையிலே ஒரு துறை உண்டு. இவ்விடத்தில் சங்கன் என்பவன் கடும் தவம் புரிந்து அருள் பெற்றான்.

வைகாசி விசாகத்தன்று இத்துறையிலே ஆழ்வார் இறங்கி, ஆச்சர்யமான தீர்த்தவாரி நடைபெறுகிறது. ஒரு சிறு பலகை தாமிரபரணியிலே இடப்பட்டு, அதில் ஆழ்வாரை அமர்த்தி திருமஞ்சனம் அபிஷேகம் நடந்து, சந்தனக் காப்பெல்லாம் சாற்றப்படுகிறது. அர்ச்சக ஸ்வாமி ஆழ்வாரைத் தம் திருக்கரங்களிலே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு நதியின் நடுவிலே அமிழ்த்துகிறபோது எல்லா பக்தர்களும் சேர்ந்து அமிழ்கிறார்கள். பெரியோர்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லோரும் ஆழ்வாருடைய திருவடிபட்ட அந்தப் புண்ணிய நதி தீர்த்தம் தங்கள் பேரில் பட, ஆசையோடு ஆழ்வார் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டே நீராடி புனிதமடைகிறார்கள்.

தீர்த்தவாரி நடக்கும் மாலை வேளையில் ஆகாயத்தை நோக்கினால், ஒரு பக்கத்தில் ஆதவன் 'நான் சூரியனா? இந்த ஆழ்வார் சூரியனா?' என்று கேள்வி கேட்டுக்கொண்டு போராடித் தோற்று மறைகிறான்! மேகங்களோ, 'நாம் மழை பொழிவதாவது! பெருமானுடைய கருணையாகிற மழையைப் பருகி நம்மாழ்வார் நம்மிடத்தில் கொடுத்தாலன்றோ பொழியலாம்?' என்று தலை கவிந்து நிற்கின்றன!

(தேடுவோம்)

படங்கள்: **ஸ்ரீஹரி**

சித்திரம்: **வேதா**

சில எதிர்மறைக் குறிப்புகள்!

தமிழ் மணவாளன்



ஓட்டுநரின் விழிப்பின் மீது மட்டும்
நம்பிக்கை வைத்து
உறங்கிவிட முடிவதில்லை
பேருந்துப் பயணத்தில்.

இரண்டு மூன்று சந்துகள் திரும்பி
இல்லத்தின் முன் நிறுத்திய ஆட்டோக்காரர்
பேசியதை விடவும் அதிகம்
கேட்காமல் இருந்ததில்லை ஒருபோதும்.

திரைப்படத்தின்
இடைவேளையில் எதிர்ப்படும் நண்பனிடம்
'சினிமாவுக்கா?' எனும்
அசட்டுக் கேள்வியைத் தவிர்க்க இயலவில்லை
எவ்வளவு முயற்சித்தும்.

திறமையின் பெரும்பகுதி
நல்லவனாய் நடிப்பதற்கென்றே
செலவாகிப் போகிற அபத்தத்தை
என்ன பெயரிட்டு அழைப்பது?

கனவை முழுமைப்படுத்த முடியாமலே
கலைந்து போகிறது
ஒவ்வொரு விடியற் பொழுதும்.

இப்படி எதிர்மறைகளும்
இயலாமைகளும் இணைந்தே
கட்டமைக்கின்றன
இயல்பான வாழ்வை.

மடை

செய்யாறு தி.தா.நாராயணன்

"அவங்க ஏரி கலங்கல் சாய்ஞ்சிட்டதுதானே? இதுக்கு மேல சாய்றது நம்ம தண்ணி. நம்ம ஏரிக்கு வரணும். இப்பப் போயி அடாவடியா கலங்கல் மடையில நாலடி தண்ணி கட்றான்னா என்ன அர்த்தம்? நாமெல்லாம் பொட்டைங்களா?"

வெளியே நறநறவென்று மழை அடித்துக்கொண்டிருக்க, சாவடியில் நடந்துகொண்டிருந்த வாய்க்கால் பிரச்னைக் கூட்டம் இப்படித்தான் ஆரம்பித்தது. இரண்டுதரப்பினரும் மோதிக்கொண்டதில், நிறைய பேருக்கு பலத்த காயம். வன்முறை வெடித்ததில். ரிசர்வ் போலீஸ் படை வந்திறங்கி, நிலைமையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குள், இரு தரப்பிலும் தலா ஒவ்வொரு பிணம் விழுந்துவிட்டிருந்தது.

சில நற்பணி இயக்கங்களின் ஆக்கபூர்வமான அணுகுமுறையினால், மறுநாள் பனையூர் மேல்நிலைப் பள்ளியில், கலெக்டர் தலைமையில் நல்லிணக்கக் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. வெளியே பலத்த போலீஸ் பாதுகாப்புப் போட்டிருக்க, 'கேட்டு'க்கு வெளியே மக்கள் திரண்டிருந்தனர். தாசில்தார் எழுந்து பேச ஆரம்பித்தார்.

"இந்தத் தாவா சம்பந்தமாய் நடைமுறைச் சட்டத்தை மட்டும் சொல்லிவிட்டு முடிச்சுக்கிறேன். பாலாற்றிலிருந்து வரும் கால்வாய்த் தண்ணீர், மாமண்டூர் உட்பட பெரிய ஏரி வரை மொத்தம் பதிமூன்று ஏரிகளுக்கும் பொதுவானது. தனிப்பட்ட எந்த ஒரு ஏரிக்கும் சொந்தமானதில்லை."

சண்டைக் கோழியாய், பனையூரான் ஒருத்தன் எழுந்தான்.

"அந்தச் சட்டம் எங்களுக்குத் தெரியும் சாரு!"

"டாய்... டாய்... ம...! திருட்டுப் பலவை போட்டுட்டு சட்டம் பேசறியா? ஒதை வாங்கப் போறேடா!"



-நந்தியூர் ஆட்கள் எழுந்து துள்ளினார்கள். பதிலுக்குப் பனையூரான்களும் எழுந்து கத்த, அடக்கிவிட்டு கலெக்டர் எழுந்தார்.

"முதல்ல பனையூர்க்காரங்க, தங்கள் ஏரியில் தண்ணீர் கட்டியது சட்டப்படி குற்றம் என்பதைப் புரிஞ்சிக்கணும். ஒண்ணு உங்க ஏரிக்கு கீழ் ஏரி -அதாவது நந்தியூர் ஏரி -கலங்கல் சாய்ந்த பிறகு நீங்க பலகை போட்டு மடை கட்டலாம். அல்லது மழைக்காலம் முடிந்த பிறகு அதாவது டிசம்பர் பதினைந்து தேதிக்கு மேல கட்டலாம்."

"ஐயா மழைக்காலம் முடிஞ்சுப் போச்சிய்யா. இந்த வருஷமும் இவ்வளவுதான் மழை."

"அடிங்...! நிறுத்துடா. நாளைக்கே கூட மழை பெய்யலாம். டிசம்பர் பதிஞ்சி - அதான் சட்டம். உடமாட்டோம்டேயேய்!"

"நீ இன்னாடா குறுக்கே? நாயே!" மறுபடியும் இரண்டு தரப்பும் எழுந்து கூச்சலிட்டன.

"பனையூர்க்காரங்க தயவுசெய்து சட்டம்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில்
ரூ. 7,500 இரண்டாம் பரிசு பெறும் சிறுகதை



என்ன சொல்லுதுன்னு பாருங்க.'' - இது சட்டமன்ற உறுப்பினர். பொல்லாப்பு வராமல் அடக்கி வாசித்தார்.

''ஆமாம் பொல்லாத சட்டம்... செல்லாத சட்டம். இதையேதான் கர்நாடகாக்காரன் பண்றான். அங்க வாயைக் காணோம். நாங்கன்னா எளப்பம். ஏன்னா தல காய்ஞ்சவங்க.''

''இங்க யாரும் அரசியல் பேசாதீங்கப்பா!'' - இது கலெக்டர்.

பனையூர் தலைவர் எழுந்தார்.

''ஐயா! பலகை போடலேன்னா, ரெண்டாம் போகம் கதிரு பால் புடிக்கிறப்போ தண்ணி அருந்தட்டலாப் போயிரும்.''

கலெக்டருக்கு எரிச்சலாயிருந்தது.

''நந்தியூர்க்காரங்களுக்கு ஆடு மாடு குடிக்கக்கூட ஏரியில தண்ணீர் இல்லையென்கிறப்போ, இரண்டாம் போகத்துக்காக இப்படி வெட்டுக்குத்து ரேஞ் சுக்கு நீங்க போறது அநாகரிகம். அதனால, இன்றைக்கு என் முன்னிலையில் பனையூர் ஏரியில் அடைக்கப்பட்டிருக்கும் கோடி மடை அகற்றப்படுகிறது.''

கலெக்டர் உத்தரவில் கையொப்பமிட்டுவிட்டுக் கிளம்பினார். பனையூர் ஆட்கள் கோஷமிட்டபடி வெளியேற, நந்தியூர் ஆட்கள் வெற்றிக் களிப்பில் குதித்தார்கள். ஆனால், பாவம் அவர்கள் சந்தோஷம் முழுசாய் நான்கு நாட்கள் நீடிக்கவில்லை. நாலாம் நாள், பனையூரான்கள் மீண்டும் கோடி மடையை அடைத்துவிட்டார்கள். நந்தியூரான்களுக்கு வேறு போக்கிடமில்லை. கலெக்டரிடம் ஓடினார்கள்.

''தெரியும்யா! தாசில்தார் ஃபோன் பண்ணார். திரும்பத்திரும்ப எத்தனை தடவைதான் எடுத்துப் போடறது? அரசாங்கத்துக்கு எழுதியிருக்கேன் பதில் வரட்டும் பார்ப்போம்'' கலெக்டர் சலித்துக் கொண்டார்.

போன கும்பல் விதிர்விதிர்த்து நின்றது. என்ன இப்படிப் பல்டியடிச்சிட்டார். அப்போது பெரிய பெர்தனத்தின் அப்பா

வேணுகோனார் மெதுவாய் எழுந்து நின்றார். எழுபது வயசு. பத்து வருஷம் நந்தியூர் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தவர். விவேகி.

"என்ன பெரியவரே?" எனக் கேட்டார் கலெக்டர்.

"மந்திரி நரசிம்மன், இதில் நுழைஞ்சிருக்கிறது வெளியே வந்திருச்சு. அவன் பனையூரின் பழைய குடி. விட்டுருங்க. இதை நாங்களே தீர்த்துக்கறோம்."

"மறுபடியும் அடிச்சிக்கிட்டுச் சாகப் போறீங்களா?"

"ஐயா! எல்லாம் ஒண்ணுக்குள்ள ஒண்ணு. எங்க ஊர்க்காரன் செத்ததுக்கு அந்த ஊர் பொண்ணுதான் தாலியறுத்தாள். அந்த ஊரான் செத்ததுக்கு இங்கதான் பொண்ணு



அமங்கலியாப் போச்சுது. வாணாம்யா. இனிமே யாரும் இங்க ரத்தம் சிந்தக் கூடாது. எந்த ஊருக்கும் சேதம் வராம நிறுத்தணும்; நிறுத்துவோம்."

"பெரியவரே! நிஜமாவே எனக்கு சஸ்பென்ஸ் தாங்கல. அப்படி என்னதான் செய்யப் போறீங்க?"

"நேரம் வரட்டும் சொல்றேன்."

கிழவர் என்ன செய்யப் போகிறார் என்று யாருக்கும் தெரியவில்லை.

மறுநாள் காலையில் பெரிய பெர்தனம், தெருவில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து யோசனையாயிருந்த அப்பனிடம் நைச்சியமாகப் பேச்சுக் கொடுத்தார்.

"ஏம்பா! என்னப்பா பண்ணப்போற? எதைச் செய்யறதா இருந்தாலும் இனிமே அடுத்த வருஷந்தான். மழைதான் அத்துப் போச்சே!"

கிழவர் மகனைப் பார்த்துச் சிரித்தார்.

"டேய்! மேற்கே பார்த்தியா? செவ்வானம் போட்டிருக்கு. மூணு நாளா போடுது. அதோட மேல மப்பு மணல் வாரி இறைச்சிருக்கு. இதெல்லாம் நல்ல அறிகுறி கன மழைக்கான அத்தாட்சி. பார்ப்போம். முருகன் துணையிருப்பான். அதுக்கு முன்ன நான் சொல்ற மாதிரி சில காரியங்களை நீ ரகசியமாச் செய்யணும்" - பிள்ளையிடம் சற்றுநேரம் ரகசியம் பேசினார். பிள்ளைக்கு இதிலெல்லாம் நம்பிக்கை ஏற்படவில்லை.

ஆனால், கிழவரின் கணிப்புதான் ஜெயித்தது. நாலாம் நாள் நிலைமை மாறி வாடைக்காற்று வீச ஆரம்பித்தது. அடுத்த நாள் காலையிலேயே கிழக்கே பனைமரம் உயரத்துக்கு மேகம் கரைகட்டி கொசுத் தூறல் ஆரம்பித்தது. கிழவர் பிள்ளையிடம் 'இன்னும் நாளைக்கு மேல பாரு!' என்று கண்கள் பொங்கச் சிரித்தார். மறுநாள் அப்பா... அப்பப்பா! மழையா அது? இடி மின்னல் இல்லாமல் சூறாவளிக் காற்றுடன் கொட்டித் தீர்க்கிறது. அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்துக்கு, தமிழ்நாடு முழுக்க பலத்த மழையால் கடற்கரையோரங்களுக்கு புயல் எச்சரிக்கை விடப்பட்டது.

அந்த நேரத்துக்குத்தான் பனையூர் ஏரிக்கரைக்கு வரச் சொல்லி கிழவரிடமிருந்து கலெக்டருக்கு அழைப்பு வந்தது. 'இந்த மழையிலா? ஓ.கே.! கிழவன் அப்படி என்னதான் பண்றான்னு பார்த்துடறதே சரி.' லோக்கல் போலீஸ் அத்தாரிட்டிக்குத் தகவல் சொல்லிட்டுக் கிளம்பினார்.

கார் அங்கே போனபோது கலெக்டருக்கு அதிர்ச்சி. கிழவரும் அவர் பின்

ளையும் குடை பிடித்துக்கொண்டு கோடி மடை பக்கம் நிற்கிறார்கள். கொட்டும் மழையில் நனைந்தபடி நந்தியூர் ஆட்கள் திரண்டிருந்தனர். ஒவ்வொருத்தனிடமும் உருட்டுக்கட்டை, சைக்கிள் செயின் போன்ற ஆயுதங்கள். இவருக்கு உள்ளே திக்கென்றிருந்தது. இறங்கி குடையுடன் நடந்தார். நல்ல வேளை பனையூரான்கள் உஷார் பார்ட்டிகள். கட்டி வைத்திருந்த கோடி மடையை முன்னதாகவே அகற்றிவிட்டிருக்க, அப்பாடா தற்போதைக்குப் பிரச்னை தீர்ந்தது.

ஆனால், கிழவர் இப்போதுதான் பிரச்னையைத் துவக்குகிறார், என்ற உண்மை அடுத்த ஐந்தாவது நிமிஷத்தில்தான் கலெக்டருக்கு உறைத்தது. கிழவர் சைகை காட்ட, அகற்றப்பட்டிருந்த கோடி மடை மீண்டும் மூடப்பட்டது.

''டாய்... டாய்... எவன்டா டாய்?'' பனையூர் ஆட்கள் வெறிக் கூச்சல் போட்டபடி ஓடி வந்தவர்கள், கலெக்டரையும் போலீஸையும் பார்த்து நிதானித்தார்கள்.

''டாய்! எங்க ஏரிக்கு எவன்டா பலவை போட்டவன்?''

கிழவர் இப்போது சற்று நகர்ந்து முன்னே வந்தார்.

''நான்தாண்டா பலவை போட்டேன்!''

''டேய் மாசி! மொதல்ல கெழவனை போட்றா! டேய் கெழவா, மரியாதையா உங்க ஆளுங்களோட ஓடிப்போயிடு...''

''டேய்! பேசிக்கிட்டு நிக்காதீங்க. சீக்கிரம் மடைய உடையுங்கடா.. ஆபத்து... ஆபத்துடா பாவி! சீக்கிரம் உடைடா... எவன் தடுத்தாலும் வெட்டு, பார்த்துக்கலாம்'' - இது பனையூர் தலைவன்.

கலெக்டருக்கு அடித்துக்கொண்டது. கிழவர் பேச்சை நம்பியது தப்பு. இந்தப் பக்கம் நந்தியூர் ஆட்களும் கத்தி யைத் தூக்கிட்டானுங்களே! ஐயய்யோ!

''டாய்... டாய்... ஏய்... ஏய்..!'' திடீரென்று கீழ் ரோடு பக்கம் பெரும் கூச்சல்



இனிமே யாரும் ரத்தம் சிந்தக் கூடாது. எந்த ஊருக்கும் சேதம் வராம நிறுத்தணும். நிறுத்துவோம்!

கேட்டது. பார்த்தால் லாரிகளும், டிரக்குகளும், வேன்களும் சாரிசாரியாய் வந்து நிற்க அவ்வளவும் மக்கள் கூட்டம். பாலாற்று கால்வாயில் பயன் அடையும் மற்ற ஏரிக்காரர்கள். ஒவ்வொருத்தரிடமும் பயங்கர ஆயுதங்கள். அவர்கள் கூச்சல் போட்டபடி திமுதிமுவென்று ஓடி வந்து சூழ்ந்துகொண்டார்கள்.

''டேய் பனையூரான்! மடையை எடுத்த, மவனே! எடுத்த கையை வெட்டுவோம்; ஊரையே துவம்சம் பண்ணிடுவோம்.''

கலெக்டருக்கு எதுவும் யோசிக்க முடியவில்லை. இந்தக் கொட்டுகிற மழையில எவ்வளவு ஜனங்க? என்ன மாதிரி கலெக்டிவ் ஒர்க்? சினிமா மாதிரி இருந்தது அவருக்கு. பனையூர் ஆட்கள் விக்கித்து நிற்கிறார்கள். கிழவர் உரக்கப் பேச ஆரம்பித்தார்.

''நம்ம கலெக்டர் முன்னால, வந்திருக்கிற உங்க எல்லார் முன்னாலயும் பனையூர்காரங்களுக்கு ஒரு சத்தியம் செய்யறேன். இனிமேல என்ன கஷ்டம் வந்தாலும் நாலடி உசரத்துக்கு, பலகை போட்டு நீங்க கட்டின மடையை எடுக்கச் சொல்ல மாட்டோம். அதே சமயம் எந்த கஷ்டத்திலயும் மடையை எடுக்கவும் விட மாட்டோம். போட்ட பலகை போட்டதுதான்.''

''ஆமாம். போட்டது போட்டதுதான்'' பின்னால் நின்ற கூட்டம் ஆக்ரோஷமாகக் கத்தியது.

''ஐயய்யோ! ஏரி தாங்காதுடா மடையை உடைங்கடா! மடையை உடை.''

பனையூர் தலைவர் கூக்குரல் போட, மடையை எடுக்க ஆவேசமாகப் பாய்ந்தவர்களை, ஒரு கும்பல் கோழிக் குஞ்சு போல் அமுக்கிக்கொண்டது.

இன்னும் மூன்று மணி நேரங்கூட ஏரி தாங்காது. உடைப்பெடுத்துக்கொள்ளும் அபாயம். கலெக்டர் விரைந்தார்.

"பெரியவரே! என்ன அடாவடி இது? கோடிமடைதான் ஏரிக்கு சேஃப்டி வால்வ் மாதிரி. இப்ப மடையை எடுக்கலேன்னா ஏரி உடையும்; பனையூர் முழுகிப் போயிடும்."

"முழுகட்டும்... சாவட்டும்யா!"

"இதை நான் அனுமதிக்க முடியாது."

"நீங்க என்னய்யா அனுமதிக்கிறது?



உங்க அனுமதியைக் கேட்டா, நீங்க எடுத்த மடையை மறுபடியும் போட்டான்? வந்து முறையிட்டமே, என்ன செஞ்சீங்க? போட்ட பலவை போட்டதுதான்."

பின்னால் நின்ற கூட்டமும் அதை ஆமோதித்துக் கர்ஜித்தது.

"எப்ப தண்ணி இல்லாதப்ப மொத்தத் தண்ணியும் எங்களுதுதான்னு அடைச்சான்களோ, அப்ப வெள்ளம் வர்றப்போவும் மொத்தத் தண்ணியும் அவன்களுடையதுதான். இந்தப் பக்கம் வரவுடமாட்டோம்."

கலெக்டர் அசந்து நின்றுவிட்டார். சே! இதுதான்யா செக்மேட். பனையூரான்களுக்கு செக் வெச்சிட்டான்யா கிழவன். செஸ் ஆட்டத்தில் இந்த பொஸிஷனில் ராஜாவைக் காப்பாற்ற வேண்டுமானால் வேறு ஒரு பலவரை இழந்துதான் தீரணும். இல்லேன்னா ஆட்டம் க்ளோஸ்.

கொட்டும் மழையில் இன்னமும் ஒருத்தரும் அசையவில்லை. தெற்குப் பக்கம் இலேசாக கரை உடைப்பெடுத்துக் கொண்டதாக ஒருத்தன் ஓடி வந்து கத்த, பாதி பனையூரான்கள் கூச்சலிட்டபடி ஓடினார்கள். ஏரி உடைந்தால் பனையூரில் ஒண்ணும் தேறாது. மேற்கேயிருந்து வரும் கால்வாய் நீர் ஏரிக்குள் தமதமவென்று வந்து விழுந்துகொண்டிருக்க, பனையூர் தலைவருக்கு வேறுவழி தெரியவில்லை. தன் சகாக்களுடன் கிழவரிடம் வந்து நின்றார்.

"எங்களை மன்னிச்சிடுங்க மாமோவ்! புத்தி கெட்டுப் போய் நாங்க செஞ்சது தப்புதான். இனிமே சட்டம் சொல்றபடி நடக்கிறோம்னு எங்க ஊர் சார்பா உறுதி சொல்லிக்கிறேன். எந்தத் தப்பும் நடக்காது."

எல்லோரையும் பார்த்துக் கும்பிட்டுவிட்டு, கிழவரின் கையைப் பிடித்துக் கொண்டார்.

"வுட்றா! நியாயம் புரிஞ்சாச் சரி. மல்லுக்கு நிக்கறதுக்கு நீ யாராய் போயிட்ட? இனிமே இந்தத் தப்பை யார் பண்ணாலும் சரி, இதுதான் பதில். பதிமூணு ஊர் ஜனங்களும் வந்து நிக்கும். டேய்! மடையை எடுத்து வுடுங்கப்பா!"

கிழவர் உத்தரவில் சடுதியில் மடை இடித்து அகற்றப்பட, வெள்ளம் நொப்பும் நுரையுமாய்ச் சுழித்துக்கொண்டு வெளியேறியது. கிழவர், கலெக்டரைப் பார்த்து இலேசாய்க் கண் சிமிட்டினார்.

●

கந்து வட்டி, மீட்டர் வட்டி, மாத வட்டி எல்லாம் தடை பண்ணி முழுசா மூணு மாசம் ஆச்சு!



வட்டிக்குத் தடா!



அறந்தாங்கியிலிருந்து கட்டுமாவடி வழியாக மீமிசலை நெருங்கும் முன்பாக அம்மாபட்டினம் கிராமம். சாலையின் இரு புறங்களிலுமாக அந்தக் கிராமத்தின் நுழை வாயில் முதல், இறுதி எல்லை வரைக்குமாக வைக்கப்பட்டிருந்த டிஜிட்டல் பேனர்களின் வாசகம், நம்மை அந்தக் கிராமத்தில் சட்டென இறங்க வைத்துவிடுகிறது. தமிழ் நாட்டில் இப்படியும் ஒரு கிராமமா என அனைவரையும் ஆச்சர்யப்படவைக்கிறது.

'வட்டி தடை செய்யப்பட்ட கிராமம்! வட்டி இல்லா பொருளாதார மேம்பாட்டு மையம், அம்மாபட்டினம்.' இது பேனர்களில் காணப்படும் வாசகம். கிராமங்களிலும் நகரங்களிலுமாக அவனவன் ஐந்து வட்டிக்கும் பத்து வட்டிக்கும் பணம் கடனாகக் கிடைக்காதா என்று ஆவலாய்ப் பறக்கிறான். இந்தக் கிராமத்திலோ

வட்டியே தடை செய்யப்பட்டுள்ளதாம்!

"நெசமாத்தான் நம்புங்க. எங்க ஊர்ல கந்துவட்டி, மாதவட்டி, மீட்டர் வட்டி எல்லாம் தடை பண்ணி முழுசா மூணு மாசம் ஆச்சு. அதுக்கு முன்னாடி டெய்லி பத்து ஆளுங்க மோட்டார் சைக்கிள்ல ஊரை ரவுண்டு அடிப்பாங்க. அந்த நபர் மோட்டார் சைக்கிளை விட்டுக் கீழே எறங்க மாட்டார். வாசல்ல ஹாரன் சத்தம் கேட்டதும் அன்னைக்குக் கட்ட வேண்டிய பணத்தையும், கந்து புத்தகத்தையும் எடுத்துக்கிட்டு வாசலுக்கு ஓடுவோம். சரியா பணம் கட்ட முடியாத ஆளுங்க, கந்து வசூல்காரங்க வர்ற நேரத்துல எங்கயாவது போயி ஒளிஞ்சுக்குவாங்க!" என்கிறார் அம்மாபட்டினம் கிராமவாசி ஒருவர்.



"கந்துக் கடனை அடைச்சுட்டேன்!"
- ராஜேந்திரன்



"இந்த மையம்தான் வட்டிக்கடன் தொல்லையிலிருந்து என்னை மீட்டது!"
- ஷாகுல் ஹமீது

"அஞ்சு வருஷமா கந்து வட்டிக்கு வாரா வாரம் பணம் கட்டுவேன். இப்ப வட்டியில்லா பொருளாதார மையத்துல கடன் வாங்கி, அந்தக் கந்துக் கடனை அடைச்சுட்டேன். இப்ப இந்த மையத்துக்கு அசல் கடனை மட்டும் இந்த மூணு மாசமா திருப்பிச் செலுத்திட்டு வர்றேன். இந்த ஊர்ல முஸ்லிம் - இந்து - கிறிஸ்துன்னு மதம் மற்றும் சாதி வித்தியாசமெல்லாம் எங்களுக்குள்ளே கிடையாதுங்க!" எனக் கூறுகிறார் ராஜேந்திரன்.

"டீக்கடையில முப்பது வருஷமா மாஸ்டரா இருக்கேன். ரெண்டு பொண்ணுங்களையும் வட்டிக்கு வாங்கித்தான் கட்டிக் குடுத்தேன். அந்தக் கந்து வட்டிக் கடன் தொல்லையிலிருந்து இவங்கதான் மீட்டாங்க" என்கிறார் ஷாகுல் ஹமீது.

"ஆயிரம் ரூபாய்க்கு ஒரு நாள்ல நூறு ரூபா வட்டின்னு, தினசரி ஊருக்குள்ளார கந்துக்காரங்க தொல்லை அதிகமானது. யோசிச்சோம். கந்து வட்டி வாங்குன ஜனங்களோட லிஸ்ட் எடுத்தோம். நாங்க ஐம்பது நபர்கள் சேர்ந்து மையத்தை உருவாக்கினோம். இதுல ஐந்நூறு ரூபா தந்தவர்களும் உண்டு. ஐம்பதாயிரம் ரூபாய் தந்தவர்களும் இருக்காங்க. அஞ்சு லட்ச ரூபாய் சேர்ந்திச்சு. ஊரு ஜனங்களை முதல்ல அவங்களோட பழைய கடன்லேருந்து விடுவிச்சோம். வட்டியில்லாம பணத்தைத் திருப்பிச் செலுத்தற முறையை உருவாக்கினோம். இதுக்குன்னு வசூல் பண்ண மாசச் சம்பளத்துல ஒருத்தரை நியமிச்சு, அவருடைய மாசச் சம்பளத்தை எங்க சொந்தப் பணத்துல தந்திடறோம். எங்க ஊரு மக்கள், வட்டிக்குக் கடன் வாங்கி மடிஞ்சிடக் கூடாது. வட்டிக்கு வாக்கப்பட்டா தற்கொலைக்குச் சமம். இதுக்காகவே துவங்கப்பட்டது இந்த மையம்!" எனக் கூறுகிறார் மையத்தின் முகமது சுலைமான். இத்திட்டம் காற்றைப் போல தமிழக கிராமங்களுக்கெல்லாம் பரவவேண்டும் என்றே பிரார்த்திக்கத் தோன்றியது.

செய்தியும், சித்திரங்களும்:
புதியவன்



"கட்சியில் இனிமேல், 'உட்கட்சிப் பூசலுக்கு இடமேயில்லை'ன்னு புதுசா வந்த தலைவர் சொல்றாரே?"

"எப்படி இடமிருக்குமாம்? அதான் ஏற்கெனவே உட்கட்சிப் பூசல்கள் ஃபுல்லா இருக்குதே!"

- அனன்யா

ஜோக்ஸ் ஸ்பாட்!



"சார், சொன்னா நம்புங்க. திருடன் வேஷத்துல, நாடகத்துல நடிக்கத்தான் போய்க்கிட்டு இருக்கேன்!"

"இந்தக் கதையே வேண்டாம்; எடு மாமூலை!"

- அனன்யா

"காட்டுல நீ தனியா வரும் போது, எதிரே ஒரு புலி வந்தா என்ன பண்ணுவே?"

"நான் என்ன பண்ண முடியும்...? அதுதான் பண்ணும்!"

- ச.ஆ.கேசவன்






"பெண்களுக்கு ஞாபக சக்தி ரொம்ப அதிகமா, எப்படிச் சொல்றே?"

"'நீ ரொம்ப அழகா இருக்கே'ன்னு என் பெண்டாட்டிக்கிட்டே கல்யாணத்தன்னிக்குச் சொன்னதை, இப்பவும் சொல்லிச் சொல்லிப் பீத்திக்கறாளே!"

- வெ.சீதாராமன்



வானத்து

'கே.கே.நகர் நாலாவது குறுக்குத் தெருவுக்கு எப்படிங்க போறது?' 'இப்படியே போய் ரைட்டுலே கட் பண்ணித் திரும்பி, உடனே லெஃப்ட் எடுத்து நேராப் போனா ரேஷன் கடைக்கு அடுத்தது வேலாயுதம் வீடு. ரிடயர்ட் போஸ்ட்மேன். அவர்கிட்டே விசாரியுங்க.' இந்த மாதிரி பதில் கிடைக்கும்போது 'ஆதிமூலமே...' என்று ஆண்டவனைத்தான் வழிகாட்டக் கூப்பிடவேண்டும். அவன் பிஸியாக இருக்கும்பட்சத்தில், கம்ப்யூட்டர் தொழில் நுட்பம் இருக்கவே இருக்கிறது.

வானத்தில் இரண்டு செயற்கைக் கோள்களை ஏவி வைக்க வேண்டும். பூமியைச் சுற்றி கிட்டத்தட்ட 26000 கிலோ மீட்டர் உயரத்தில் தாழப் பறந்தபடி, அந்த இரண்டும் ரேடியோ ஒலிபரப்பு மாதிரி வெளிப்படுத்தும் சிக்னலை பூமியில் பெற வேண்டும். நிமிடத்துக்கு நிமிடம் செயற்கைக் கோள்கள் நகர்ந்து கொண்டே இருப்பதால், சிக்னலை வைத்து அவை இருக்குமிடத்தை மட்டும் இல்லை, நாம் நிற்கிற இடம் உலக வரைபடத்தில் எங்கே இருக்கிறது என்றுகூடக் கணித்துக் காட்ட முடியும்.

முதன்முதலாக இந்த அற்புதமான அறிவியல் யோசனையைச் சொன்னவர் ஒரு ஜெர்மானிய அறிஞர். அவர் சொன்ன நேரம்தான் சரியில்லை. ஜெர்மனியில் ஹிட்லரின் சர்வாதிகார அரசு இரண்டாம் உலக மகாயுத்தத்தில் மும்முரமாக ஈடுபட்டுவந்த காலம் அது. 'சும்மா குடாக்குத்தனமா உளறிக்கிட்டு கிடக்கறான் இந்த ஆளு' என்று விஞ்ஞானியை மனநோய் மருத்துவமனைக்கு அனுப்பினார்கள்.



ஆனாலும், யுத்தம் முடிந்து இருபது ஆண்டுகளுக்குள் செயற்கைக் கோள்கள் உலகை வலம்வர ஆரம்பித்தன. அமெரிக்கா எண்பதுகளில் தன் போர்ப்படைகளுக்கு உதவியாக, பத்து செயற்கைக் கோள்களை பூமியைச் சுற்றி வெவ்வேறு உயரங்களில் தாழப் பறக்கச் செய்து, அவற்றை 'உலகளாவிய அளவில் வானில் நிற்பவை' என்று அழைக்க ஆரம்பித்தது. இந்த நீளமான பெயரின் ஆங்கில வடிவத்தின் சுருக்

இரா.முருகன்

கம் ஜி.பி.எஸ். இப்போது இப்படி மொத்தம் 32 செயற்கைக் கோள்கள் புழக்கத்தில் உள்ளன.

ஜி.பி.எஸ். தத்துவம் எளிமையானது. தரையில் இருக்கும் படைவீரன் கையில் ஜி.பி.எஸ். ரிஸீவர் என்ற கருவி இருக்கும். இதில் அமைந்திருப்பது ஒரு சக்தி வாய்ந்த ஆன்டெனா. சுவிட்சைப் போட்டதும் நம் வீட்டு டீ.வி. வேறு வேறு சேனல்களில் வரும் ஒன்றுக்கு மேற்பட்ட அழுவாச்சி சீரியல்களைப் பிடித்துத் திரையில் ஒவ்

வழிகாட்டி!

வொன்றாகப் பரத்துகிற மாதிரி, ஜி.பி.எஸ். ரிஸீவர் ஒன்றுக்கு மேற்பட்ட செயற்கைக் கோள்களிலிருந்து சிக்னலைப் பெறும். இந்த சிக்னலை எல்லாம் வைத்துக் கணக்குப் போட்டு அந்தப் போர்வீரன் நிற்கிற இடம் கடல் மட்டத்தில் இருந்து எத்தனை உயரம், வேறு குறிப்பிட்ட இடங்களில் இருந்து கிழக்கா, மேற்கா, வடக்கா, தெற்கா? அது எல்லாம் எவ்வளவு தூரம் என்று சொல்லிவிடும். இதற்கு முன்னால் போயேயிருக்காத இடத்தில் அலைய வேண்டிவரும்போது, இருக்கும் இடம் எது என்று யாரையும் விசாரிக்க வேண்டாம்.

ஆனால் எதிரி நாட்டுப் படைகள் கையில் ஜி.பி.எஸ். ரிஸீவர் மாட்டினால்? நியாயமான பயம்தான். அமெரிக்கா தனக்கே உரிய புத்திசாலித்தனத்தோடு இதற்கும் வழி கண்டுபிடித்தது.

அமெரிக்க ராணுவம் பயன்படுத்தும் ஜி.பி.எஸ். ரிஸீவர் உயரம், தொலைவு கணக்கை மில்லிமீட்டர் சென்டிமீட்டர் சுத்தமாக அறிவித்துவிடும். ஆனால், தனியாருக்கான அதேமாதிரி கருவியில் வேண்டுமென்றே தப்புக் கணக்குப் போட்டுச் சொல்ல ஒரு சூட்சமம் புகுத்தப்பட்டது. ரொம்ப உபத்திரவப்படுத்தாத தப்பு. 'நியூயார்க்கிலிருந்து வடக்கே பதினெட்டு மைல் தூரத்தில் இருக்கிறீர்கள்' என்று சரியாக அறிவிப்பதற்குப் பதிலாக தனியார் ஜி.பி.எஸ். பதினேழே முக்கால் மைல்



தொலைவு என்று பொய் சொல்லும். நமக்குச் சரி. இந்தத் தகவலை நம்பி ராக்கெட்டில் வைத்து ஏவுகணையைக் குறிப்பிட்ட இலக்கை நோக்கி அனுப்ப எதிரிகள் முற்பட்டால், அது அநேகமாக அவர்கள் தலையிலேயே விழலாம்.

ஒரு வழியாக தனியார் ஜி.பி.எஸ். தகவல் அளிப்பதில் தெரிந்தே செய்த இந்தத் தவறை அமெரிக்கா நீக்கிவிட்டது. மேலை நாடுகள் பலவற்றிலும் காரில் போகும்போது ஒலியாக, ஒளிப்படமாக வழி சொல்ல இன்று ஜி.பி.எஸ். வெகுவாகப் பயன்படுகிறது. நம்ம நாட்டிலும் போகாத ஊருக்கு வழிகாட்டும் அரசியல்வாதிகளை நம்புவதைவிட, ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அடுத்த நூற்றாண்டுக்குச் சுளுவாகப் போய்ச் சேரலாம்!

தஞ்சை பரத்வாஜ்

மேஷம் : ஆசைப்பட்ட அத்தனையும் அடையும் காலமிது. சொத்து சேர்த்து, புதிய தொழில் துவங்கி, கல்வி முன்னேற்றம் ஏற்பட்டு, வியாபார வெற்றிகண்டு, வெளிநாட்டுப் பயணம் திட்டமிட்டு, குடும்பச் சண்டைகள் நீங்கி... இப்படி முற்றுப் புள்ளி போடாமலேயே சொல்லிக்கொண்டு போகலாம். **வெற்றி கரமான வாரம்.**



ரிஷபம்: திருமண முயற்சி பலிக்கும். கோயில்களுக்கு யாத்திரை செல்ல வாய்ப்பு வரும். புதிய உற்சாக தகவல் வந்து சேரும். தடைப்பட்ட காரியங்கள் மூதாதையரின் ஆசியால் சீராகும். மொத்தத்தில் இறை அருள் வாய்க்கும் **தெய்வீக வாரம்.**

மிதுனம்: அடுத்தவன் மீது கல்லெறியாதே! அவன் அதை சேமித்து வைத்து உனக்குக் கல்லறை கட்டத் தயாராவான். கல் என்பது கடும் வார்த்தையைத்தான் குறிக்கும். இந்த ஒன்றை மட்டும் கவனத்தில் கொண்டால் போதும். மற்றதைச் சமாளித்துவிடலாம். உன் சொல்லே உனக்கு சத்ரு. ஜாக்கிரதை. **எச்சரிக்கையான வாரம்.**

கடகம்: வாகனப் பயணத்தில் கவனமும், எதிரிகளின் நடவடிக்கையில் கண்காணிப்பும், உறவுகளின் வாக்கு வாதத்தில் எச்சரிக்கையும், கடன் விஷயத்தில் உஷார்த்தனமும் தேவை. உங்கள் விழிப்புணர்வுக்குச் சவாலான காலமிது. **எதிர்ப்பு நிறைந்த வாரம்.**

சிம்மம்: மனச் சலனம் தீர்ந்து, மகிழ்ச்சிக்கான சூழல் பரவும். படிப்பு சீர்பட்டு குழந்தைகள் மகிழும். ஊடல் சீர்பட்டு மனைவி சிரிப்பாள். வழக்கு தீர்ந்து உறவுகள்

03.08.08 முதல்
09.08.08 வரை

நடக்குமென்பார்; நடக்கும்!

நெருங்கும். கடன் மறைந்து வரவுகள் கூடும். **குதூகலமான வாரம்.**

கன்னி: வீடு மாறுவீர்கள்; தொழிலை மாற்ற முடிவெடுப்பீர்கள்; ஊர் மாறி பயணம் செய்யத் திட்டமிடுவீர்கள்; காசு கை மாறிப் போகப் பெருஞ்செலவுக்கு வழி வைத்துப் போவீர்கள். எப்போதும் போற பஸ் விட்டுட்டு ட்ரெயின்ல போக ஆசைப்படுவீர்கள். **மாறுதலான வாரம்.** கிரக நிலை அப்படி!

துலாம்: இன்னைக்கோ நாளைக் கோன்னு இழுத்துக்கிட்டு இருந்த வழக்கு முடிவுக்கு வரும். ஃப்ரண்ட்ஸ்ங்க நிழல் மாதிரி கூட இருந்து ஆறுதலா உழைப் பாங்க! குடும்பத்தில் சமாதானக் கொடி பறக்கும். ஒரு நல்ல காரியத்துக்குப் போவீங்க! **ஆறுதலான வாரம்.**

விருச்சிகம்: செலவுக்குச் சேதியும் வரும் - நின்னு போன கடனும் வசூலாகும். படிப்பு முன்னேற்றமாயிருக்கும். அதற்கான சுபச்செலவும் கூடும். சொல் வாக்கைக் காப்பாத்தப் பெரும் முயற்சி எடுக்கணும். கூடவே செல்வாக்கு 'டக்'ன்னு பெட்ரோல் விலை மாதிரி 'கிர்'ன்னு உயரும். என்ன வெதைச்சியோ அதை இப்ப அறுவடை செய்யப்போற... அவ்வளவுதான். **சமமான வாரம்.**

தனுசு: நுணலும் தன் வாயால் கெடும் - கேட்டு இருப்பியே இந்தப் பழமொழிய. இப்ப நீதான் நுணல் (தவளை) நீ பேசற பேச்சுல சும்மாகெடக்கிற பாம்பைக் கூப்பிட்டு, உம் பசிக்கு என்னைத் தின்னுங்கிற மாதிரி வாயால கெட்டு டாதே. கடன் கொடுக்காதே. ஜாமீன் கையெழுத்துப் போடாதே! இந்த வாரம் யாரையும் நம்பாதே! உஷாராயிரு! **பதட்டமான வாரம்.**

மகரம்: விட்டுக் கொடுத்தா குடும்பம் நிலைக்கும். அடம்புடுச்சு நின்னா சிதறு தேங்காவாயிரும். சுவர் இருந்தாதான் சித்திரம் வரைய முடியும். உடம்பப் பத்திரமா கவனிச்சிக்க. வேலைப்பளு அதிகமாகும். செலவும் கூடும். குழப்பமான வாரந்தான். சனி, குரு, ராகு, கேது இந்த நாலு பேருக்கும் நமஸ்காரம் செஞ்சிட்டு எதவேணாலும் செய்... அம்புட்டுத்தேன்! **குழப்பமான வாரம்.**

கும்பம்: உடம்பு நல்லாயிருக்கும். வரவேண்டிய கடன்தொகை வந்து நெஞ்சில பாலை வார்க்கும். எதிரி எட்ட நின்னு வழி விடுவான். பிள்ளக்குட்டிக்கு பிரத்யேக நன்மைங்க நச்சுன்னு வந்து சேரும். புருஷன் பொஞ்சாதி வொறவு பௌர்ணமி மாதிரி பளிச்சுன்னு குளிர்ச்சியாயிருக்கும். ம்ம்... அனுபவி. **மகிழ்ச்சியான வாரம்.**

மீனம்: தாத்தா சொத்து பாகப்பிரிவினைக்கு வரும். கூட இருந்த கூட்டாளி உறவை வெட்டிக்கிட்டுப் போயிடுவான். அண்டை நாடு போலாம்னு மனசு அலைஞ்சுக்கிட்டுக் கெடந்தது, 'சட்'டென நடந்து முடியும். புதுசா எதத் தொடங்கினாலும் ஜெயிப்ப... குலதெய்வத்தைக் கும்பிட்டு உன் வழியில போயிட்டே இரு. **புத்துணர்ச்சி வாரம்.**

“பையன் பொறந்து ஆறு மாசம் ஆவுது. பொறந்தப்பவே உதடு பிளந்து இருந்திச்சுங்க. தனியார் ஆசுபத்திரியில விசாரிச்சதுல அம்பதாயிரத்துலேந்து ஒரு லட்சம் வரைக்கும் செலவாகும்னு சொன்னாங்க. ஒரு லட்சத்துக்கு நாங்க எங்ஙன போறதுங்க? அதான் ஈரோடு இதயம் நற்பணி இயக்க டிரஸ்ட் மூலமா இலவச சிகிச்சைன்னதும் சென்னைக்குப் போக கிளம்பி வந்துட்டோம்!'' எனக் கண்களில் நம்பிக்கை விரியக் கூறுகிறார் யுவராணி.



“அக்கா பொண்ணு

ஈரோடு இதயம் நற்பணி இயக்கம் டிரஸ்ட், சென்னை மதுரவாயல் மீனாட்சி கிளிப்ட் அண்ட் கிரேனியா ஃபேஷியல் சென்டர் மற்றும் மீனாட்சி அம்மாள் பல் மருத்துவக் கல்லூரி இவற்றுடன் இணைந்து, ஈரோடு மாநகரில் நடத்தி வருகிறது உதடு, பிளவு - மேல் அண்ணப் பிளவு இலவச அறுவை சிகிச்சை முகாம். கடந்த நான்கு ஆண்டுகளில் இதுவரை பதிமூன்று முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.


ஒசூர் அருகே மூக்காண்டபள்ளி கிராமத்திலிருந்து ஆறு மாதப் பெண் குழந்தை பூர்வஜாவோடு வந்திருக்கிறார் நித்யா. ''சென்னையில் ஆபரேஷன் செஞ்சு டிஸ்சார்ஜ் ஆகி ஒரு மாதமானாலும், அது வரை எதுவும் வசூலிக்க மாட்டாங்க. எல்லாமே இலவசம் தான்!'' என்கிறார்.

“தனியார் மருந்து கடையில் மெடிக்கல் பார்மசிஸ்ட் ஆக வேலை பார்க்கிறேன். இது போன்ற உதடு பிளவு அறுவை சிகிச்சை என்பது, ஒரு தடவையிலேயே முழுமையாகச் செய்துவிட முடியாது.
என் மகனுக்கு இதுவரை நான்கு முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. எந்தவொரு விஷயத்துக்கும் கட்டணம் வசூலிப்பதில்லை. துணைக்குச் செல்லும் நபர் ஒருவருக்கு, தங்குமிடமும் உணவும் முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இதுபோன்ற உதடு பிளவு, மேல் அண்ணப் பிளவு அறுவை சிகிச்சையினை முற்றிலும் இலவசமாகவே செய்து தருவது, இந்த டிரஸ்ட்டும் - சென்னை மதுரவாயல் மருத்துவமனை மட்டுமே எனக் கருதுகிறேன்!'' எனக் கூறுகிறார் நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் ராஜசேகரன்.



* டாக்டர் மணிகண்டன்

“ஈரோடு இதயம் நற்பணி இயக்கம் டிரஸ்ட் அறுபது உறுப்பினர்களைக்கொண்டது. முகாமில் தேர்வானவர்களை சென்னைக்கு அனுப்பி வைப்பதுடன் எங்கள் வேலை முடிந்து விடாது. ஒவ்வொரு வாரமும் எங்கள் டிரஸ்ட்டிலிருந்து இரண்டு நபர்கள் சென்னை



வேணாம்!”

சென்று, பயனாளிகளுக்கான அறுவை சிகிச்சை முறைகளை அருகிலிருந்து கண்காணித்துக்கொள்வார்கள். *98433 65633* மற்றும் *98948 16788* ஆகிய செல் நம்பர்களுக்கு, தமிழ்நாட்டிலிருந்து எந்த மாவட்டத்திலிருந்தும் எங்களை நாடுவோர்களுக்கு, மேற்கண்ட சிகிச்சைக்காக உதவி செய்யக் காத்திருக்கிறோம். சென்னையில் குறிப்பிட்ட நபர்களுக்காக ஆகும் மருத்துவச் செலவு, உணவு, தங்குமிடச் செலவுகளை ஸ்விட்சர்லாந்து நாட்டில் இயங்கி வரும் 'கிளிப்ட் சைல்டு இன்டர்நேஷனல்' அமைப்பின் செயலாளர் டாக்டர் ஹெர்மன் சைலர் மற்றும் திருமதி டாக்டர் ஹெரிகா ஆகிய இருவரும் வழங்கி வருகின்றனர்!'' எனக் கூறுகிறார் ஈரோடு இதயம் நற்பணி இயக்கம் டிரஸ்ட் நிறுவனத் தலைவர் மகாதேவன்.

''எழுநூறு குழந்தைகளில் ஒரு குழந்தை, உதடு பிளவு மற்றும் மேல் அண்ணப்பிளவுடன் பிறக்கிறது. இதில் எழுபது சதவிகிதக் குழந்தைகள், நெருங்கிய உறவில் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு பிறக்கின்றன. மூதாதையரில் யாருக்கேனும் இந்தக் குறைபாடு இருந்தாலும், இரண்டு தலைமுறைக்குப் பின்னரும் பரம்பரை வியாதி போல இது தொடரவும் வாய்ப்புகள் உள்ளன. அந்தக் குறைபாடுகளின் நிலை பொறுத்து அறுவை சிகிச்சை எண்ணிக்கையும் அதற்கான காலங்களும் மாறுபடும். அதுவரை பெற்றோர்கள் பொறுமை காக்க வேண்டும். நெருங்கிய உறவு முறையில் திருமணம் செய்தாலும் இந்தக் குறைபாடு வர வாய்ப்புள்ளது'' என்கிறார் முகச் சீரமைப்பு நிபுணரும், சென்னை மதுரவாயல் மீனாட்சி கிளிப்ட் அண்ட் கிரேனியா ஃபேஷியல் சென்டர் மற்றும் மீனாட்சி அம்மாள் பல் மருத்துவக் கல்லூரியின் திட்ட இயக்குநருமான டாக்டர் மணிகண்டன்.

செய்தியும், சித்திரமும்:
ஸ்ரீரங்கம் திருநாவு


✱ நம்பிக்கையோடு ஒரு தாய்...




ஜாலி ஸ்டோர்ஸ்

மாபெரும் விலை குறைப்பு!

முதல்வர் பிறந்த நாளுக்காக ஓட்டல் பண்டங்கள் விலை குறைக்கப்பட்டன. அதுபோல இவர்களின் பிறந்த நாளுக்கு எதை எதை விலை குறைக்கலாம்?




போடக் கூடாதா!
ரேட் குறைப்பு
தர்றேன் டிஸ்கவுண்ட் பாரு! தலை முடிய நல்லா வாரு சிம்பு எம் புகழ ஊரேல்லாம் கூறு!
ஆட்டோ கட்டணம் குறைப்பு
என்னை காலேஜ் ஸ்டூடண்ட்டா நடிக்க வைச்சா காலேஜ் ஃபீஸும் குறையும். இதை நான் சொல்லல. கடவுள் சொல்றார்!
வாசகர் யோசனை : சம்பத்குமாரி
கருத்து : 'சில்மிஷா' படங்கள் : பிள்ளை
மணல் விலை குறைப்பு
மணலைக் கயிறா திரிச்சா அணி மாறுறதுக்கு அழகான காரணம் கிடைக்குமில்லே!

இடைவெளி

சிவதாணு

செல்ஃபோன்கள் வருவதற்கு முந்தைய கால கட்டம். கிராமங்களில் பெருசுங்க இடுப்பில் கறுப்பு மூக்குப் பொடி டப்பா இருக்கும். அந்த மாதிரியான ஒரு சாதனம் 'பேஜர்' என்ற பெயரில் நகரத்து இளைஞர்களின் இடுப்பில் இருந்த நேரம் அது. அதன் விலையோ அப்போ அதிகம்.


சென்னையில் வாடகை ஆட்டோ ஓட்டும் ஆட்டோ டிரைவர் நான். அப்போ பேஜர் வைத்திருந்த ஆட்டோ டிரைவர் நான் ஒருவன் மட்டும்தான். அந்த பேஜரை எனக்கு வாங்கிக் கொடுத்தவர் ஒரு எழுத்தாளர். பிரபலமான வார இதழின் துணை ஆசிரியரும்கூட. அவரும், அவருடைய வீட்டில் உள்ளவர்களும் என் ஆட்டோவைக் கூப்பிடுவதற்காக வாங்கிக் கொடுத்தார். ''இதற்கு தமிழில் என்ன பெயர்?'' என்று கேட்டேன். அதற்கு அவர் ''குயில் கூவும், மயில் அகவும். இதுவும் என் அகத்தில் இருக்கிறதைச் சொல்லி உன்னை அழைப்பதால், 'அகவி' என்றே நாமகரணம் சூட்டலாம்'' என்றார்.

அவருடைய படைப்புகளை நான் தொடர்ந்து வாசித்திருக்கிறேன். ஓர் இலக்கியக் கூட்டத்தில் நண்பர் ஒருவர் மூலம், அவர் எனக்கு அறிமுகமானார். அப்போ அவருடைய விசிட்டிங் கார்டை எனக்குக் கொடுத்து, ''ஓய்வாக இருக்கும்போது வார இதழ் அலுவலகத்துக்கு வாருங்கள்'' என்றார்.

ஒருநாள் அவரைப் பார்க்கலாம் என்று, அவர் பணிபுரியும் வார இதழ் அலுவலகத்துக்குப் போனேன். முதல் மாடியில் அவரின் குளிரூட்டப்பட்ட தனியறை. டேபிள் மீது புத்தகங்கள், பேப்பர் என்று குப்பையாகக் கிடந்தது. என்னை வரவேற்றவர் உட்கார வைத்துவிட்டு காஃபி ஆர்டர் பண்ணினார். அன்று முழுவதும் ஆட்டோவில் அவர் பயணம் பண்ணும்போது அவருக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை விவரித்தார்.

பெங்களூரில் ஒரு கருத்தரங்கத்தில் கட்டுரை வாசிப்பதற்காகப் போயிருக்கிறார். ரயிலை விட்டு இறங்கி ஒரு ஓட்டலில் காஃபி சாப்பிட்டு இருக்கிறார். பின் ஒரு ஆட்டோ டிரைவரிடம், இவர் போக வேண்டிய இடத்தின் முகவரியைச் சொல்லி ஏறினாராம். ஆட்டோ, ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு இடத்தில் ஆஃப் ஆகி நின்று விட்டதாம். ஆட்டோ டிரைவர் இறங்கி பின்பக்க டோரைத் திறந்து ஏதோ பார்த்து விட்டு, இவரிடம், ''சார், வண்டி ஸ்டார்ட் ஆகவில்லை. கொஞ்சம் இறங்கித் தள்ளுங்க'' என்றானாம். இவரும் இறங்கித் தள்ளியிருக்கிறார். ஸ்டார்ட் ஆன வண்டி அப்படியே வேகமெடுத்து மறைந்துவிட்டது. இவர் கொண்டு போன பெட்டி அப்படியே ஆட்டோவில் போய்விட்டது. திகைத்துப்போய் என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு ரோட்டில் நின்றிருக்கிறார். பிறகு கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்தவர்களுக்கு ஃபோன் பண்ணியிருக்கிறார். அவர்கள் வந்து இவரை அழைத்துப் போயிருக்கிறார்கள். ஆட்டோ போன வேகத்தில் அதன் நம்பரைக்கூட கவனிக்க

வில்லையாம். அந்தக் கருத்தரங்கத்தில் கட்டுரை வாசிக்காமல், கடன் வாங்கி ஊர் வந்து சேர்ந்தாராம். வார இதழின் பக்கங்கள் முடிக்கிற அன்று இரவு தாமதமாக ஆட்டோவில் வீட்டுக்குப் போவாராம். வீட்டுக்குப் போய் இறங்கும்போது அந்த ஆட்டோ டிரைவர், ''இன்னா சார் அங்க சொன்னீங்க, இங்க வந்து இறங்கறீங்க? போட்டுக் கொடு சார்'' என்பானாம். உடனே இவர், ''எம்பா இன்னேரத்துல நான் யாரைப் போட்டுக் கொடுப்பேன்?'' என்பாராம். அன்று நான் அவரை என் ஆட்டோவில் அவர் வீட்டுக்கு அழைத்துப் போனேன். அடுத்த நாளிலிருந்து காலையில் அலுவலகத்துக்கு அவரை நான்தான் கூட்டிப் போவேன். மாலையில் மறுபடியும் அலுவலகத்துக்குப் போய் வீட்டுக்கு அழைத்து வருவேன். அப்பத்தான் அவருக்கு இந்த பேஜர் வாங்கி, எனக்குக் கொடுக்கணும் என்ற எண்ணம் தோன்றியிருக்கிறது. நான் எங்கேயாவது சவாரிக்காக நிற்கும்போது பேஜரில் 'கம் டு ஆபீஸ்' என்றோ, 'கம் டு ஹவுஸ்' என்றோ அழைப்பு வரும். நானும் அங்கிருந்து ஆட்டோவைக் காலியாக எடுத்துக்கிட்டு போவேன். 'ஒரு ஆட்டோ டிரைவரின் இலக்கிய தாகம்' என்ற தலைப்பில் என்னுடைய புகைப் படத்தைப் போட்டு, அவருடைய வார இதழில்



மூன்று பக்கக் கட்டுரை போட்டார். இது தான் தமிழகம் முழுவதும் உள்ள இலக்கியவாதிகளிடம் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்தது. அவருக்குத் தெரிந்த பேங்க் மேனேஜர் மூலமாக எனக்குக் கடனில் ஒரு ஆட்டோ எடுக்கும் முயற்சிகளும் மேற்கொண்டார்.


அப்ப ஒருநாள் மாலை நேரம். அவர் என்னை ஒரு மதுக்கூடத்துக்குக் கூட்டிப் போனார். இருவரும் மது அருந்தினோம். அவர் என்னிடம், "என்றைக்கும் இருக்கும் கலகலப்பு உங்களிடம் இல்லையே ஏன்?" என்று கேட்டார். அதற்கு நான், "குடியிருக்கும் வீட்டின் உரிமையாளருக்கும் எனக்கும் சின்னப் பிரச்னை. அவர் ஒரு மாதத்துக்குள் வீட்டைக் காலி பண்ணுங்கள் என்று கூறி விட்டார்" என்று சொன்னேன். அதற்கு அவர், தாம் முன்பு வாடகை வீட்டில் குடியிருக்கும்போது நடந்த நிகழ்வு ஒன்றைக் கூறினார். அதைக் கேட்டு நான் ஆடிப் போயிட்டேன்.

இவர் பத்திரிகையாளர் குடியிருப்புக்கு வருவதற்கு முன் வேளச்சேரியில் ஒரு வாடகை வீட்டில் குடியிருந்திருக்கிறார். அந்த வீட்டின் உரிமையாளருக்கு இரண்டு மகன்கள். இருவருமே வெளிநாட்டில் வேலை பார்க்கிறார்கள். மாடி சும்மாத் தானே கிடக்கிறது. வாடகைக்கு விடலாமே என்று இவருக்கு விட்டிருக்கிறார்கள். இவர் போய்ப் பார்த்துவிட்டு, "இல்லீங்க. எங்களோட என் வயதான அம்மாவும் இருப்பார்கள். அவர்களுக்கு மாடி ஏறி, இறங்குவது சிரமமாக இருக்கும். நீங்கள் மாடிக்குப் போய் விட்டு எங்களுக்குக் கீழே விட முடியுமா?" என்று கேட்டிருக்கிறார். அவர்களும் இரண்டு நாள் யோசனைக்குப் பிறகு, "சரி, நாங்கள் மாடிக்குப் போகிறோம்" என்று மாடிக்குப் போய்விட்டு, இவருக்குக் கீழ்த் தளத்தை வாடகைக்கு விட்டிருக்கிறார்கள்.

இவர் அந்த வீட்டுக்குக் குடிபோகும் முன்பே அந்த வீட்டுக்காரம்மா, கொல்லைப்புறத்தில் ஒரு கருவேப்பிலை கன்னு நட்டு வைத்திருக்கிறார். அது ஓர் ஆள் உயரம் வளர்ந்து இருக்கிறது. இவர் வேலைக்குக் கிளம்பின பிறகு, அந்த வீட்டுக்காரம்மா இவர்கள் வீட்டின் உள்ளோடு கொல்லைப்புறத்துக்குப் போய் கருவேப்பிலை கன்னுக்குத் தண்ணீர் ஊற்றிவிட்டு, கொஞ்சம் கருவேப்பிலை பறித்து வருவார். ஒருநாள் இவர் வீட்டில் இருக்கும்போது அந்தம்மா வந்துவிட்டுப் போயிருக்கிறார். இவர், மனைவியைக் கூப்பிட்டு, "எதுக்கு அந்தம்மா நம்ம வீட்டுக்கு வந்துட்டுப் போறாங்க?" என்று கேட்டிருக்கிறார். அவருடைய மனைவி அந்தம்மா வந்து போற விஷயத்தை விளக்கியிருக்கிறார். இவருக்குக் கோபம் வந்து அந்தம்மா விடம் போய், "வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு, அதற்குப் பிறகு எதற்கு வீட்டுக்குள் வந்து தொந்தரவு செய்கிறீர்கள்?" என்று சத்தம் போட்டிருக்கிறார். அதற்கு அந்தம்மா, "இல்லீங்க, நீங்க இங்க குடி வருவதற்கு முன்பே அந்தக் கருவேப்பிலைக் கன்னை நட்டு வைத்து, என் குழந்தை மாதிரி வளர்த்து வருகிறேன். உங்கள் வீட்டுக்குள்ளோட நான் வந்து



போவது உங்களுக்குப் பிடிக்கலைன்னா, பின்பக்க கதவைத் திறந்து விடச் சொல்லுங்கள்'' என்றிருக்கிறார். இந்தப் பேச்சு வார்த்தை தடித்துப் போயிருக்கிறது. கடைசியாக அந்தம்மா, ''இவ்வளவு கண்டிஷன் பேசுற நீங்க, பேசாம வீட்டைக் காலி பண்ணிடுங்க. அந்த வாடகைப் பணத்தை வாங்கித்தான் நாங்கள் வாழணும்ன்னு அவசியம் இல்லை'' என்றிருக்கிறார். இது நடந்த அடுத்த வாரமே இவருக்குப் பத்திரிகையாளர் குடியிருப்பில் வீடு கிடைத்துவிட்டது.



தூறல் கவிதை

பிச்சைக்காரியின்
கந்தல் புடைவையாய்
குடிசை வீடே
படகாகி நீரில்
நகரப் போவதை
அறியாமல்
மும்முரமாக தயாராகின
வீட்டுக்குள்
காகிதக் கப்பல்கள்!

– பா.தீனதயாளன்

அந்த வீட்டைக் காலி பண்ணுவதற்கு நான்கு நாட்களுக்கு முன் அந்த ஆள், இரவு கொதிக்கக் கொதிக்க வெந்நீர் காய்ச்சி கருவேப்பிலை கன்னோட வேரில் ஊற்றியிருக்கிறார். மூன்றாவது நாளே அது பட்டுப் போய்விட்டது. இதை அவர் சொன்ன அன்று இரவு எனக்குத் தூக்கமே வரவில்லை.

அடுத்தநாள் காலை எட்டு மணிக்கு 'கம் டு ஹவுஸ்' என்று அகவியில் தகவல் வந்தது. நான் அவர் வீட்டுக்கு ஆட்டோ கொண்டு போகவில்லை. பதினொரு மணி போல அவருடைய வார இதழ் அலுவலகத்துக்குப் போனேன்.

'ஐயா! வணக்கம். நேற்று மதுபான விடுதியில் நீங்கள் 'வாடகை வீட்டில் குடியிருக்கும்போது கருவேப்பிலை கன்னுக்கு வெந்நீர் ஊற்றி வாடச் செய்தேன்' என்று கூறியது, என்னை இரவெல்லாம் தூங்கவிடாமல் செய்துவிட்டது.

எழுத்துக்கும் உங்களுக்கும் ஓர் இடைவெளி இருக்கிறது. எனக்கும் உங்களுக்கும் கூடத்தான். அந்த இடைவெளியில் கருவேப்பிலை முளைத்திருக்கிறது.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் மனம் வாடினேன்' என்றார் ஒருவர். 'ஒரு புளிய மரத்தின் கதை' என்ற நாவலில் மக்களோடு மரத்தின் வாழ்க்கையை இணைத்து எழுதினார் ஒருவர். செடி கொடிகளோடு தான் பேசியதை 'தாவரங்களின் உரையாடல்' என்று எழுதினார் இன்னொருவர். நீங்கள் சாதாரண ஒரு ஆளாக இருந்து அப்படியொரு காரியம் செய்திருந்தால், என்னைப் பெரிதாகப் பாதித்து இருக்காது. நீங்கள் ஒரு படைப்பாளியாக இருந்துகொண்டு இப்படிச் செய்யலாமா? தாங்கள் வாங்கிக்கொடுத்த அகவியையும் இத்துடன் வைத்துள்ளேன்! இனி கொஞ்ச காலம் நாம் சந்திக்காமலே இருப்பது நல்லதாக எனக்குப் படுகிறது. நன்றி!' என்று எழுதி, அகவியோடு வைத்து காவலாளியிடம் கொடுத்து விட்டு வந்தேன்.

இது நடந்து பல வருடங்களாகி விட்டன. இப்போது நான் செல்ஃபோன் வாங்கிவிட்டேன். காலங்கள் கடந்த பின்பும் விலகாமல், இன்றும் அந்த கருவேப்பிலைக் கன்று ஒரு மரமாக வளர்ந்து, கிளை பரப்பி, வேரூன்றி நிற்கிறது என் மனத்தில். ○

புது காண்ட்ராக்ட்..!



''என்னமோ ஓஸோனில் ஓட்டை விழுந்துட்டுதாமே?''

''என்னய்யா அதுக்கு?''

''அதை ரிப்பேர் செய்து ஓட்டையை அடைக்கிற காண்ட்ராக்டை, எனக்கு வாங்கித் தரமுடியுமா தலைவரே!''

- ராஜாஜி



''டாக்டர்! ரெண்டு இட்லியைக் கூட என்னால முழுசாச் சாப்பிட முடியல!''

''பிட்டுப்பிட்டுச் சாப்பிடுங்க!''

- வந்தை ஜி.கே.நிதி



''சோத்தைத் திங்காம உருளைக்கிழங்கையே ஏன் தின்னுக்கிட்டிருக்கீங்க?''

''வெந்திருப்பதைத்தானே கமலா திங்க முடியும்?''

- உ.ராஜாஜி

''வாசல்ல என்ன கூட்டம் அமைச்சரே?''

''அது... வந்து, தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ், மன்னருக்கு எத்தனை மனைவிகள்னு தெரிவிக்கச் சொல்லிக் கேட்கறாங்க, அரசே!''

- சி.பூங்கோதை



கூண்டுக்குள் பச்சை இலைகள்

வாழ்க்கையில் எத்தனையோ சம்பவங்கள் நடந்தேறுகின்றன. மனத்தில் சுகம், வலி, பிரச்னைகள் நிறைந்த நிகழ்வுகளை அதே உணர்வோடு அந்த வலியை, உணர்வை, நிகழ்வை படிப்பவர் உணரும் வண்ணம் படைப்பில் வெளிப்படுத்தும்போது அது சிறந்த படைப்பாகிறது. அப்படித்தான் வே.இராமசாமியின் 'கிணற்றுக்குள் முளைத்த மருதாணி' கவிதைத் தொகுப்பும்.

குளம் குளுமையானது; அதில் வந்திறங்கும் கொக்குகளால் மன நிறையும் அழுகை; ஒரு கிராமத்து தாய்க்குத் தன் பிள்ளைகளிடம் எத்தனை அன்பிருந்தாலும், அவள் வளர்க்கும் கோழிக்கும் பசுவுக்கும்கூட அதனை எந்தவிதத்திலும் வேறுபடுத்தாது அளிக்கும் இயல்பு! என்று உயர்ந்த நுண்ணுணர்வுகளை ரசனையோடும் ஏக்கத்தோடும் வெளிக்காட்டுகிறார் கவிஞர் வே.இராமசாமி.

உடல் தளர்ந்த நிலையிலும் மொட்டைக் கிணற்றின் பக்கவாட்டிலுள்ள பொந்தில் காலூன்றி காலூன்றி நாக்கைத் துருத்தித் துருத்தி மேலேறும் காட்சி, 'அப்பா இந்த வேளையில்' என்ற கவிதையில் கண்ணீரைக் கொண்டு வருகிறது.

நட்ட நடு மேய்ச்சல் காட்டில் பருவமடைந்து அவள், ஒரு சின்னஞ்சிறிய ஆட்டுக்குட்டியின் துணையோடே வீடடைந்தாள். 'எத்தனை நாகரிகமான நிதர்சனமான பதிவு! இந்த ஒரு கவிதையிலேயே எத்தனை பண்பாடு நிறைந்த வாழ்வு தெரிகிறது! கவிதைக்கு இது சான்று என்று ச.தமிழ்ச்செல்வன் அணிந்துரையில் கூறியிருக்கிறார்.

'நல்லது ஒனர்/ என் கை நகக் கண்களை/ அழுத்தியிருக்கும்/ எம் மரநாற்காலியை/ நகர்த்திப் போடுங்கள்/ எழுதப் போகிறேன்/ அந்த வலியையும்' என்று கட்டளையிடும்பொழுது கவிஞன் முதலாளியாகிறான்.

எத்தனை வண்ணத்தில் பறவைகள் இருந்தாலும் பச்சை வண்ணத்தில் இருக்கும் கிளியைப் பார்க்கும்போது மனம் பசுமையாகத்தானே இருக்கிறது. கூண்டுக்குள் உயிர்கொண்ட பச்சை இலைகள் உள்ளே பறக்கும் என்று தன் கற்பனை ஆற்றலையும் வெளிப்படுத்துகிறார் இக் கவிதை மூலம்.

வாழ்வின் பாடுகளையே படைப்பாக வழங்கும் வே.இராமசாமியின் கவிதைகள் தமிழ்க் கவிதை பரப்பில் புதிய விளைச்சல்...? ஊஹூம்! நாம் கவனிக்கத் தவறிய வரப்போரத்து அழகுப் பூக்கள்.

மதி நிலையம், 4(39) தணிகாசலம் ரோடு, பிருந்தாவன் அடுக்ககம், தி.நகர், சென்னை 600 015. விலை. ரூ.45/-

சிவராஜ்



தமிழக தலைநகரான சென்னையில், ஒரு வித்தியாசமான, புகைப்படக் கண்காட்சி ஜோராக நடந்தேறிக்கொண்டிருக்கிறது. கையில் முதன்முறையாக காமெராவை ஏந்தி, அதன் வழியே தெரிந்த உலகத்தை, மிக நேர்த்தியாகப் பதிவு செய்திருக்கிறார்கள். அத்தனைபேரும் பள்ளிக்குழந்தைகள் என்பதுதான் அந்தக் கண்காட்சியின் ரசிக்க வேண்டிய ஹைலைட்.



புகைப்பட மொழி!



வாழ்க்கையில் முதன்முறையாக காமெராவைப் பார்ப்பது மட்டுமின்றி, அதைக் கொண்டு தங்களுக்குத் தெரிந்த உலகத்தை காமெராவின் மூலம் சிறை பிடிப்பதும் அவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் ரொம்பவே உற்சாகப்படுத்தியுள்ளது.

ஃபிரான்ஸின் புகழ்பெற்ற புகைப்பட நிபுணர் லோரேன் தரத் (Lorene Durret), காமெராவை எப்படிப் பிடிப்பது, காமெராவைக் கொண்டு எப்படிப் படம் பிடிப்பது என்பதைக் கற்றுத் தந்திருக்கிறார்.

இவரைத் தொடர்புகொண்டு இந்தப் புகைப்பட பயிலரங்கு அனுபவத்தைப் பற்றிக் கேட்டபொழுது, ''இப்படிப்பட்ட ஒரு புகைப்பட வொர்க் ஷாப்பை, இந்தியாவில் நடத்தவேண்டும் என்பது என் நீண்ட நாள் கனவு. பிறந்தது முதலே காமெராவை

யும் அதில் பதிந்த தம் முகத்தையும் பார்த்த குழந்தைகளைவிட, காமெராவை ஓர் எட்டாக் கனி என நினைக்கும் குழந்தைகளுக்கு காமெராவைத் தொட்டு, விளையாட ஒரு வாய்ப்பளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்... சென்னையைச் சேர்ந்த அஸீமா ட்ரஸ்டிடம் தெரிவித்தேன். அவர்களது வழிகாட்டலின்படி, நவ்பாரத் மெட்ரிகுலேஷன் பள்ளியைத் தேர்ந்தெடுத்து, அங்கே படிக்கும் 10லிருந்து 13 வயதுக்குட்பட்ட 5 மாணவிகளையும், 5 மாணவர்களையும் பயிற்சிக்கு ஏற்று, அவர்களது விடுமுறை நாட்களில் இந்தப் பயிற்சியை அளித்தேன்.







இந்தப் பயிற்சி ஆரம்பித்த முதல்நாளே நான் அவர்களிடம் சொன்னது: 'நம் தாய்மொழிகள் வேறு வேறு என்றாலும், காமெரா தான் நம் பொது மொழி'! காமெராவைக் கையிலெடுத்த உடனேயே தாங்கள் பார்க்கும் அனைத்தையுமே அதில் பதிவு செய்திட வேண்டும் என்று துடித்தார்கள். மெல்ல மெல்ல எல்லாவற்றையுமே காமெரா கண்ணோட்டத்தில் பார்க்கவும், பதிவு செய்யவும் வெகு சீக்கிரத்திலேயே கற்றுக்கொண்டுவிட்டார்கள். அவர்கள் எடுத்த அந்தப் புகைப்படங்களைத் தேர்ந்தெடுத்து சென்னையில் புகைப்படக் காட்சியாக அமைத்தது அவர்களது தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளது. தங்களால் புகைப்படக் கலையை அறிந்து கொள்ள முடியும் என்ற உணர்வு அவர்களிடம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் பதிவு செய்திருக்கும் அந்தத் தெருக்களையும், தெருவாசிகளையும் என்னைப் போன்ற ஒரு புகைப்பட நிபுணரால்கூட இவ்வளவு துல்லியமாக எடுத்திருக்க முடியாது'' என்கிறார் லோரேன் தரத்.

- நளினி சம்பத்குமார்



இந்தியர்கள்

டாக்டரிடம் போனால் பிளட் டெஸ்ட், ஈ.ஸி.ஜி, ஸ்கேன் என்று படிப் படியாக நம் ஆரோக்கியம் குறித்த ஆராய்ச்சி அதிகரிப்பதுதான் இன்றைய நடைமுறை. உச்சந்தலை முதல் உள்ளங் கால்வரை பரிசோதிக்க, விதவிதமான கருவிகளை இந்திய மருத்துவத் துறை இறக்குமதி செய்கிறது. அறுவை சிகிச் சைக்கான பலவித நவீன கருவிகளையும் இறக்குமதி மூலமே பெறுகிறது. 'சுதந்திரம் பெற்று அறுபதாண்டுகளுக்கு மேல் ஆகி யும், 90 சதவிகித உபகரணங்களை நாம் வெளிநாடுகளிலிருந்தே வாங்குவது செமத்தியான வேஸ்ட்' என்று அடித்துச் சொல்கிறார் டாக்டர் ஜி.எஸ்.கே. வேலு. இவர் ட்ரிவிட்ரான் என்ற, மருத்துவ உபகர ணங்கள் உற்பத்தி செய்யும் தனியார் நிறு வனத்தின் நிர்வாக இயக்குநர்.

வேலு தரும் சில தகவல்கள்:

- இந்தியாவின் மருத்துவ தொழில் நுட்ப மார்க்கெட் 12,000 கோடி ரூபாய் மதிப்புள்ளது. இதில் பத்தாயிரம் கோடி இறக்குமதிதான்!
- இத்துறைக்கான வழிகாட்டல், சட் டங்கள் குழப்படியாக உள்ளதால் நிறைய தடுமாற்றம் இருக்கிறது.
- மருத்துவ உபகரணங்கள் இறக்குமதிக்கு ஏராளமான சலுகை கள் அளிக்கப்படுகின்றன.
- ஆனால், அந்தச் சலுகை களின் பயனை இந்திய நோயாளிகள் அனுபவிப் பதில்லை. மருத்துவப் பரி சோதனை நிலையங்கள் சகட்டுமேனிக்குக் கட்டணம் வசூலிக் கின்றன.
- இந்தியாவிலேயே இந்த உபகரணங் களை உற்பத்தி செய்யலாம் என்றால், உதிரி பாகங்களுக்கும் மூலப் பொருட்களுக்கும் அபரிமிதமான இறக்குமதி தீர்வை விதித்து அரசு நெருக்கடி கொடுக்கிறது. அதே சமயம் முழுமையாக ஒரு இயந்திரத்தை இறக்குமதி செய்ய நிறைய சலுகை அளிக்கிறது.



● முன்னேறிய நாடுகளில், குறிப்பிட்ட காலத்துக்குத்தான் ஒரு பரிசோதனைக் கருவியைப் பயன்படுத்த, சட்டம் அனுமதிக்கிறது. அந்நாடுகள் காயலான் கடையில் போடும் கருவிகளை வாங்கி வைத்துக் கொண்டு, இங்கே அறியாத மக்களை டாக்டர்கள் ஏமாற்றுகிறார்கள்.

● உதிரி பாகங்களின் விலை அதிகம் என்பதால் நல்ல, புது இயந்திரங்கள்கூட சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை.



இளிச்சவாயர்களா?

அமைச்சர் அன்புமணி, மருத்துவ பூனைக்கு மணி கட்டுவாரா?

மேலும், கள்ளத்தனமாகத் தருவிக்கப்படும் பல இயந்திரங்கள் புழக்கத்தில் உள்ளன. இவற்றுக்கு முறையாக 'சர்வீஸ்' செய்ய இயலாததால், சீக்கிரம் பழுதாகிவிடுகின்றன.

● சைனாவிலும் 1990கள் வரை இதே நிலைதான். ஆனால், சீன அரசு, 'இனி இக்கருவிகளை இறக்குமதி செய்யக்கூடாது' என்று ஆணை பிறப்பித்தது. அயல்நாட்டினர் வந்து தொழிற்சாலை தொடங்குவதற்கான சூழலையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

● இதன் பிறகு சீனாவில் மளமளவென்று பல சர்வதேச நிறுவனங்கள், தொழிற்சாலைகள் அமைத்து உற்பத்தி தொடங்கின. இன்று உள்நாட்டிலேயே 60,000 கோடி மதிப்புக்கு கருவிகள் உற்பத்தியாகின்றன. அதனால் சோதனை கட்டணங்கள் குறைந்து, மக்களுக்குப் பளுவும் குறைந்துள்ளது.

"இந்தியாவில் மெடிகல் டூரிஸம் மட்டும் வளர்ந்தால் போதுமா? பரிசோதனைக் கருவிகளும் பன்னாட்டுத் தரத்தில் இருக்க வேண்டாமா?'' என்று கேட்கிறார் டாக்டர் வேலு.

''மருத்துவ தொழில்நுட்பத் துறையுடைய வளர்ச்சிக்கு அத்தியாவசியமான மின்னணு, உயிரி தொழில்நுட்பங்களிலும் ஐ.டி.யிலும் நாம் பலமாக இருக்கிறோம். இந்தப் பலங்களைப் பயன்படுத்திக் கொண்டு மருத்துவ தொழில்நுட்பப் பூங்காக்களைத் தொடங்கினால், தரமான கருவிகளை நாமே தயாரிக்கலாம். ஏழைகளுக்கும் பரிசோதனைகள் கட்டுப்படியாகிற நிலைமை உருவாகும். மருத்துவ சேவையின் தரமும் தர்மமும் காக்கப்படும்...'' என்கிறார்.

அமைச்சர் அன்புமணி, மருத்துவ பூனைக்கு மணி கட்டுவாரா?

– ஸ்ரீநி

✱ ஜி.எஸ்.கே.வேலு



அன்றும் இன்றும் என்றென்றும்

உபநிஷத்தின் உபதேசம்

அமரர் கல்கி

**"உங்கள் அபிப்பிராயம் என்ன?
ஆனால், இதைப் பற்றி நமக்குள் விவாதம் வேண்டாம்!"**

சம்பாஷணைக் கலையில் 'விவாதம்' என்னும் அம்சம் மிகவும் முக்கியமான ஒரு ஸ்தானத்தை வகிக்கிறது என்று சொல்லலாம். உலகிலே வசிக்கும் சுமார் நூற்று எழுபத்தைந்து கோடி ஜனங்களுக்குள்ளே தினந்தோறும் நடக்கும் பேச்சுக்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து பங்கு 'விவாதம்' என்னும் தலைப்பின் கீழ் வரக்கூடியதாகவே இருக்கும். எனவே, சம்பாஷணைச் சாஸ்திரத்தில், 'விவாதம்' எவ்வளவு முக்கியமானதென்று சொல்ல வேண்டியதில்லை.

விவாதத்தைப் பற்றி நான் நேயர்களுக்குச் சொல்லும் யோசனைகள் மூன்றே மூன்றுதான். அவையாவன:

1. விவாதம் வேண்டாம்.

2. அப்படி விவாதம் செய்தாலும், அதில் ஜெயிக்க வேண்டாம்.

3. அப்படி விவாதத்தில் ஜெயித்தாலும், ஜெயித்ததாகக் காட்டிக்கொள்ள வேண்டாம்.

இவைதான் நான் தயாரித்திருக்கும் விவாத சூத்திரங்கள். இனி வருவது இந்தச் சூத்திரங்களுக்கு வியாக்யானம்.

விவாதம் ஏன் ஏற்படுகிறது? அபிப்பிராய பேதத்தினால். "சென்ற வருஷத்தைவிட இவ்வருஷம் வெய்யில் கடுமை" என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். "ஆமாம், வெய்யில் கடுமைதான்" என்று நீரும் அபிப்பிராயப்படுகிறீர். நமக்குள் விவாதம் இல்லை. "இந்தக் கட்டுரை நன்றாயிருக்கிறது" என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். "நன்றாயில்லை" என்று நீர் அபிப்பிராயப்படுகிறீர். நமக்குள் விவாதம் எழுகின்றது. ஆதலின், விவாதத்துக்கு அடிப்படை அபிப்பிராய பேதம் என்று ஏற்படுகிறது.

இரண்டு பேர் சண்டை போட்டால், அவர்கள் எதற்காகச் சண்டை பிடிக்கிறார்களோ அது சண்டை பிடிக்கும்படியான யோக்யதை உள்ளதா என்று பார்க்க வேண்டும். ஆறறிவுள்ள மனிதனுக்கும், ஐந்தே அறிவுள்ள பிராணிகளுக்கும் வித்தியாசம் இதுதான். ஒரு நாய் ஒரு தெருவில் வாசம் செய்கின்றது. இன்னொரு நாய் தனது தேச யாத்திரையினிடையே அந்தத் தெருவின் வழியே போக நேர்கின்றது. "என் தெருவில் நீ எப்படி வரலாம்?" என்று ஊர் நாய் கேட்கிறது. "உன் அப்பன் வீட்டுத் தெருவோ? பொதுச் சாலையில் போவதற்கு நீ என்ன கேட்கிறது?" என்று அசலூர் நாய் சொல்கிறது. இதிலிருந்து அவற்றுக்குள் விவாதம் எழுகிறது. "அட முட்டாள்

நாய்களா!'' என்று நாம் சொல்வோம்!

''எந்த நாய் தெருவோடு போனால் எனக்கென்ன?'' என்று ஊர் நாய் சும்மா இருந்திருக்கலாம். ''உன் தெருவும் ஆச்சு, உன் மூஞ்சியும் ஆச்சு'' என்று அயலூர் நாய் வேறு வழியாய்ப் போயிருக்கலாம்.

ஆகவே, ஆறறிவுடைய மனிதர்களாகிய நாம் விவாதம் தொடங்குவதற்கு முன்னால், விவாதிப்பதற்குரிய விஷயம் தக்க பெறுமானமுள்ளதா என்று பார்த்தல் அவசியம். விவாதம் என்பது அபிப்பிராயத்துக் காகத்தான் எழுகின்றது என்று முன்னமே பார்த்தோம். எனவே, அபிப்பிராயத்தின் பெறுமானம் என்னவென்பதை ஆராய வேண்டும். இது விஷயமாக நான் தீவிர ஆராய்ச்சி நடத்தி, மனிதர்களுடைய அபிப் பிராயத்தின் பெறுமானம் என்னவென் பதை ஐயந்திரிபறக் கண்டுபிடித்திருக் கிறேன்.

''ஒரு செல்லாக் காசு பெறாததாயிருந் தாலும், எப்படியும் என்னுடைய அபிப்



"என்னுடைய வட்டாரத்தில் உள்ளவர்கள் அவ்வளவு பேரையும் நான் விவாதத்தில் தோற்கடித்து விட்டேன்"

பிராயமல்லவா? அதைத் தாங்கி நான் நிற்க வேண்டாமா?'' என்று கேட்டீர்களானால், சரி! பலமாக, உறுதியாக பூமியை ஆதிசேஷன் தாங்குவது போல அதைத் தாங்கிக்கொண்டு நில்லுங்கள். ஆனால், அதற்காகப் பிறருடன் விவாதம் செய்வானேன்?

விவாதம் செய்வதன் நோக்கம் என்ன? எதிராளியை அவனுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதே ஆகும். இது சாத்தியமாகுமா? இந்த நோக்கம் கைகூடும் என்பதற்கு அணுவளவேனும் இடமிருக்கிறதா? இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு பகிரங்க இரகசியத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. அது, இவ்வுலகில் உள்ள மனிதர்கள் அவ்வளவு பேரும் பைத்தியங்கள் என்பதுதான்.

நீங்கள் எந்த விதத்தில் பைத்தியம் என்று சொல்லிவிடட்டுமா? எந்த விஷயத்தில் நீங்கள் என்னுடைய அபிப்பிராயத்துடன் மாறுபடுகிறீர்களோ, அந்த விஷயத்தில் நீங்கள் பைத்தியங்கள்! அதேமாதிரியாக, உங்களுடைய அபிப்பிராயத்துடன் மற்றவர்கள் மாறுபடும்போது அவர்கள் பைத்தியங்களாகின்றனர். ''அவர் எல்லா விஷயத்திலும் கெட்டிக்காரர்தான். ஆனால், இந்த ஒரு விஷயத்தில் மட்டும் சுத்தப் பைத்தியம்'' என்று அடிக்கடி நாம் சொல்லுவதில்லையா?

உங்களையும் மீறி விவாதம் செய்து ஜெயித்தும் விட்டீர்களானால், அப்போது என்ன செய்வது? ஜெயமடைந்ததைக் காட்டிக் கொள்ளாதிருப்பதுதான் வழி.

'விவாதம் வேண்டாம்' என்னும் முதல் சூத்திரத்தின் பொருளை இப்போது உணர்ந்துகொண்டுவிட்டோம். இனி மற்ற இரண்டு சூத்திரங்களின் கருத்தையும் அறிந்துகொள்ளுதல் பிரயாசை இல்லை.

சிலருக்குத் தங்களை மீறிப் பாட்டுப் பாடவும் பிரசங்கம் செய்யவும் வருவது போல், சிலருக்கு விவாதம் செய்யவும் வந்துவிடலாம். அப்படி அசம்பாவிதமாக அகப்பட்டுக்கொண்டுவிட்டால், விவாதத்தில் வெற்றியடைய வேண்டாம். வெற்றியில்தான் ஆபத்து இருக்கிறது.

விவாதத்தில் நீர் ஜெயித்துவிடலாம். ஆனால், உமது அபிப்பிராயத்தை எதிராளி ஒப்புக்கொள்ளும்படி மட்டும் செய்ய முடியாது. அதற்கு மாறாக, அவர் தமது அபிப்பிராயத்தை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொள்வார். நல்ல சிநேகிதர் ஒருவரை ஜென்ம விரோதி ஆக்கிக் கொண்டதுதான் கண்ட பலன் ஆகும்.

ஜான்ஸன் என்னும் ஆங்கிலப் புலவரிடம் ஒரு டாக்டர் ஒருநாள் வந்து, ''என்னுடைய வட்டாரத்தில் உள்ளவர்கள் அவ்வளவு பேரையும் நான் விவாதத்தில் தோற்கடித்துவிட்டேன்'' என்றார். ''ரொம்பவும் சந்தோஷம்! உம்மிடம் இப்போது வைத்தியம் பண்ணிக்கொள்ள யாராவது வருகிறார்களா?'' என்று கேட்டார் ஜான்ஸன்.

''ஒருவரும் வருவதில்லை. அது எனக்கு அதிசயமாயிருக்கிறது'' என்றார் டாக்டர்.

''எனக்கு அது அதிசயமில்லை'' என்றார் ஜான்ஸன்.

கதர் இயக்கத்தை எதிர்த்து இயந்திரத் தொழிலை ஆதரித்த சிலரிடம் விவாதம் செய்து நான் வெற்றி பெற்றதுண்டு.

அவர்கள் எல்லோரும் இன்றுவரை கதர் மீது தீராத வன்மை கொண்டிருக்கிறார்கள்.

வேறு சிலரிடம் நான் சுலபமாய் என் தோல்வியை ஒப்புக்கொண்டு கடைசியில், ''நீங்கள் சொல்றதுதான் சரி! இயந்திர யுகத்திலே கை ராட்டையினால் என்ன செய்ய முடியும்? ஆனாலும் பாருங்கள்! சுயராஜ்யம் நம்ம கையில் வந்து இயந்திரத் தொழிலை சரியாய் அடைகிற வரையில் எப்படியும் கதரினால் நாலு ஏழைகளுக்குப் பணம் போகிறதல்லவா?'' என்றபோது, ''அப்படி வேணுமானால் சொல்லுங்கள். ஏதோ தற்காலத்துக்குக் கதரை வைத்துக்கொள்ளலாம்'' என்று முடித்தார்கள். இவர்களில் சிலர் இப்போது கதர் அணிகிறார்கள்.

உங்களையும் மீறி விவாதம் செய்து ஜெயித்தும் விட்டீர்களானால், அப்போது என்ன செய்வது? ஜெயமடைந்ததைக் காட்டிக்கொள்ளாதிருப்பதுதான் வழி. இது அவ்வளவு கஷ்டமல்ல. ஏதேனும் ஒரு விவாதத்தில் நீர் ஜெயமடைந்து விடுகிறீரென்றும், ஒரு நண்பரைத் தீராத பகைவனாக்கிக்கொள்ளும் நெருக்கடியான நிலைமையில் இருக்கும்போது திடீரென்று விழித்துக்கொள்கிறீரென்றும் வைத்துக்கொள்ளும். அப்போதுகூடத் தப்பித்துக்கொள்ள வழி இருக்கிறது. ''ஆனாலும், நீங்கள் சொல்வதில் ஓர் உண்மை இருக்கிறது, சார்! அதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்'' என்று சொல்லும். அந்தக்கணமே ஜென்ம விரோதம் ஏற்படுதல் தடுக்கப்பட்டுவிடும்.

இந்தக் கட்டுரையின் தலைப்புக்கும், இதுவரையில் நான் எழுதியதற்கும் என்ன சம்பந்தம்? சம்பந்தம் இருக்கிறது. 'விவாதம் வேண்டாம்' என்பது உண்மையில் நான் சொல்லுவதல்ல. அது தான் உபநிஷத்தின் உபதேசம். 108 உபநிஷத்துக்குள் ஓர் உபநிஷத்தில் அந்த மகா வாக்கியம் வருகிறது. உபநிஷத்து வாக்கியம் ஒன்றை எடுத்துக்கொண்டு அதற்குப்



- சீர்காழி வி.ரேவதி

பல பக்கங்கள் வியாக்கியானம் எழுதியிருக்கின்றனர் நமது பெரியோர் என்று அறிவீர்கள். என்னால் அது முடியுமா? என்று பார்த்தேன். முடியும் என்று நிரூபித்துவிட்டதாய்க் கருதுகிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன? ஆனால், இதைப் பற்றி நமக்குள் விவாதம் வேண்டாம்! ○

நீர் ஆகாரம்!

எடிட்டர் கூப்பிட்டதும் அவரது ரூமுக்குப் போனேன்.

''ஏம்பா... விஷ்ணு, ஒருத்தர் அஞ்சு வருஷமா சாப்பாடு எதும் சாப்பிடாம வெறும் தண்ணீர் மட்டும் குடிச்சிட்டு உயிர் வாழ்றாராம். அவரைப் பற்றி ஒரு மேட்டர் போடலாமே?'' என்றார்.

''ஆமாம் ஸார், சுவாரஸியமாயிருக்கும்'' என்று சொல்லி, அவரைச் சந்திக்க முடிவெடுத்து வெளியே வந்தேன். அட்ரஸ் விசாரித்து அவரைக் கண்டுபிடித்துவிட்டேன். சிரிப்பு நடிகர் ஓமக்குச்சி நரசிம்மன், ஹீரோ தனுஷ் இருவரும் 'டயட்'டில் இருந்து இளைத்தால் எப்படி இருப்பார்களோ அப்படி இருந்தார்.

வயது அறுபது இருக்கும். மகன், மருமகள், பேத்தி என கூட்டுக் குடும்பம். என்னைப் பார்த்ததும் அவருக்கு முகமெல்லாம் பிரகாசம். அந்தக் காலத்துப் பெருமைகளையும், கிராமங்கள் பற்றிய அவரது ஆர்வத்தையும் கொட்டினார். நான் பேட்டியை ஆரம்பித்தேன்.

''ஸார்! ஒரு மனுஷனால சாப்பாடு இல்லாம, வெறும் தண்ணியை மட்டுமே குடிச்சு உயிர் வாழ முடியுமா?''

''ஏன் முடியாது? மனிதனோட ஆதார உணவே தண்ணீர்தான். சுத்தமான காற்று, தண்ணீர் இந்த ரெண்டும் மனிதனைக் காப்பாத்திடும்.''

''உங்களுக்கு அஞ்சு வருஷத்துல எந்த வியாதியும் வரலையா?''

''ம்ஹூம்... நாம சாப்பிடற சாப்பாட்டாலதான் வியாதியே வருது. நமது யோகிகள், முனிவர்கள் இப்படித்தானே காட்டில் பஞ்சபூதங்களை மட்டுமே நம்பி வாழ்ந்தாங்க.''

''அஞ்சு வருஷமா தண்ணியை மட்டும் குடிச்சு உயிர் வாழறதாச் சொன்னீங்க. அதுக்கு முன்னால என்ன செஞ்சீங்க?'

''அப்போ எல்லாரையும்போல சாப்பிட்டுக்கிட்டு இருந்தேன். பிறகு ரிடையர்டு ஆகிட்டேன். மகன், மருமகள் இரண்டு பேரும் மதிக்கறதில்லை. வேண்டாவெறுப்பா தண்டச்சோறுங்கற மாதிரி போட்டாங்க. தன்மானம், அதைச் சாப்பிட இடம் தரலை. மானங்கெட்ட சோறு வேண்டாம்னு விட்டாலும் பாசம் விட்டு விலக முடியல. அதான் யாரோட தயவும் வேணாம்னு தண்ணீரை நம்பினேன். இன்னமும் நம்புறேன்'' என்றார்.

பேட்டியை முடிக்கத் தெரியாமல் திணறியபடியே பேனாவை மூடினேன். ○



சென்னிமலை
சி.பி.செந்தில்குமார்

தாயம்மா



* குழந்தைகளுடன் தாயம்மா

பொள்ளாச்சி அருகே கல்லாங்காட்டுப் புதூர். சரணாலய வளாகத்தில் நம் கண்ணில் படுவது 'அட்சய பாத்திரம்' பெயர் தாங்கிய குடில். குடிலைக் கடந்து சென்றால்... வண்ணத்துப் பூச்சிகளைப் போல குழந்தைகள் பாய்ந்தோடி வந்து, 'தாயம்மா... தாயம்மா!' எனக் கூறி வனிதாவைக் கட்டிப் பிடித்துக்கொள்கின்றனர். அத்தனை குழந்தைகளும், தனக்கு தாய் - தந்தை யாரென அறியாதவர்கள். சுமார் இருநூறு குழந்தைகள். பள்ளி செல்கின்றனர். பாடம் படிக்கின்றனர். அத்தனை குழந்தைகளுக்கும் இனிஷியல் வி. தான். அவர்கள் அனைவர்க்கும் தன்னையே கார்டியனாகப் பதிவுசெய்து, அவர்களுக்கான முதல் எழுத்துக்குத் தன் பெயரையே தந்திருக்கிறார் வனிதா. சரணாலயம் ஸ்வீகார் இதுதான்.

தன் குடும்பம் தன் வேலையென்று உழல்பவர் மத்தியில் வரலாற்றுத் துறைப் பேராசிரியையாக வேலை பார்த்த வனிதா, சேவை செய்வதற்கென்றே வேலையைத் துறந்தவர். 2001ல் சரணாலயம் என்கிற தொண்டு நிறுவனத்தைத் துவக்கினார். தாய்மையின் வற்றாத ஜீவநதியாக, சரணாலயம் பல கிளைச் சேவை நதிகளைப் பொள்ளாச்சி பகுதிகளில் பாய்ந்து பரவ விட்டுள்ளது.

சரணாலயம் ஜீவன், பொள்ளாச்சி அருகே ஆச்சிப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது. முழுமையான மருத்துவ வசதி, தனித் தனி படுக்கை வசதி, நிறைய ஊட்டச் சத்துக்கள் வழங்கும் உணவு விடுதி, எய்ட்ஸ் நோயாளிகளுக்கான காப்பகம்... என தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வாரியம் இவர்களுக்கான செலவுகளை ஏற்றுக்கொள்கிறது.

''இவங்களுக்கு தினசரி யோகா, தியானம், பகவத்கீதை ஒப்பித்தல், அதன் விளக்கம் அளித்தல் போன்ற பயிற்சிகள் தரப்படுகின்றன. சரணாலயத்திலிருந்து வெளியே செல்லும் இக் குழந்தைகள், எதிர்காலத்தில் மீண்டும் இந்தச் சமூகத்துக்கு சேவை செய்பவர்களாக வர வேண்டும் என்பது எங்களது குறிக்கோள்!'' என்கிறார் நிறுவனத்தின் சேர்மன் வனிதா.

செய்தியும், சித்திரமும்: இந்திரா மணாளன்

ஈகோ இல்லாத



விஜய்க்கு ஈகோ இருக்கா? இந்தக் கேள்வியை என்கிட்ட நிறையப்பேர் கேட்டிருக்காங்க.

எல்லா மதங்களும் ஒரு விஷயத்தை ரொம்ப அழுத்தமாச் சொல்லுது. 'நடந்ததை நினைச்சு வருத்தப்படாதீங்க. வரப் போறதை நினைச்சு கவலைப்படாதீங்க. இந்த நிமிஷத்தைச் சந்தோஷமா அனுபவிங்க' - இப்படிச் சொல்ற ஆன்மிகம் இன்னும் ஒரு விஷயத்தையும் சொல்லுது. 'ஒரு மூணு எழுத்தை மட்டும் உங்ககிட்ட வாழ்நாள் முழுக்க அண்ட விடாமப் பார்த்துக்கோங்க'ங்குது. அந்த மூணு எழுத்துக்குப் பேரு ஈகோ (EGO).



பொதுவா எல்லா நடிகர்களுக்குமே ஈகோ இருக்கும். அது இல்லைன்னு யாருமே சொல்ல முடியாது. ஈகோவுலயே நல்ல ஈகோ, கெட்ட ஈகோன்னு இரண்டு இருக்கு. விஜய்க்கும் ஈகோ இருக்கு. ரொம்ப எளிமையாச் சொல்லணும்னா, எந்தத் தொழில்ல இருந்தாலும், யாரா இருந்தாலும் போட்டி இருக்கணும்; பொறாமை இருக்கக் கூடாது. அதுதான் நல்ல ஈகோ. எனக்குத் தெரிஞ்சு விஜய் யாரைப் பார்த்தும் பொறாமைப்பட்டது கிடையாது. மத்தவங்களைவிட அதிகமா உழைக்கணும், ஜெயிக்கணும்ங்கற போட்டி மனப்பான்மை மட்டும் தான் அவன்கிட்ட இருக்கு.

இப்படித் தொழில்ல போட்டி மனப்பான்மையோட இருக்கற விஜய், சாதாரணமா எந்தச் சூழ்நிலையிலயும் ஈகோவோட இருந்ததே இல்ல. அவனைப் பார்த்துத்தான் நானே, எப்படி ஈகோ இல்லாம இருக்கறதுங்கறதைக் கத்துக்கிட்டேன்.

முதல்ல நமக்குள்ள இருக்கற நம்மளைப் பாத்து, சரி பண்ணிக்கணும்னு நான் நினைப்பேன். ஆனா, முடியறதே இல்ல. அதாவது ஈகோவை முழுசா விட்டுடறது. எல்லாரையும் ஒரே மாதிரி நினைக்கிற பக்குவம். அது எப்போ முடியுதோ, அப்பதான் நான் முழு மனுஷி. இந்த விஷயத்துல விஜய் ரொம்ப கொடுத்து வைச்சவன்.

வீட்டுக்குள்ள வர்றப்பவே, வாசல்ல இருக்கற வாட்ச்மேனைப் பாத்துச் சிரிப்பான். 'விஷ்' பண்ணுவான். விசாரிப்பான். 'கடகட'ன்னு உள்ள வந்து வேலை பாக்கற எல்லார்கிட்டயும் பேசுவான். சமையல் கட்டு வரைக்கும் வந்து, 'என்னக்கா! எப்படி இருக்கீங்க?'ன்னு விசாரிப்பான். சமையல்கார அம்மாவுக்குச் சந்தோஷத்தையும் சிரிப்பையும் அடக்க முடியாது.

எனக்கு விஜய்கிட்ட இருந்துதான் இந்த

நல்ல பழக்கம் வந்தது. சென்னைல ரெண்டு தெருவுக்கு ஒரு சலவைக்காரர் நிச்சயம் இருப்பார். எங்க தெருவுல, எங்க வீட்டு வாசல்கிட்டயே ஒரு சலவைக்காரர் இருக்கார். நான் வீட்ல ருந்து வெளியே போறப்போ, அவரைப் பாத்து வணக்கம் சொல்லிட்டுதான் போவேன். 'நல்லா இருக்கீங்களா? என் டிரெஸ்ஸை அயர்ன் பண்ணும் போது பாத்துப் பண்ணுங்க'ன்னு சொல்லிட்டுப் போவேன். அவர் ரொம்ப சந்தோஷமாத் தலையாட்டிச் சிரிப் பார். அந்தச் சந்தோஷம் ரொம்ப முக்கியம்.

பொதுவா, நமக்குச் சமமா இருக் கறவங்களையும், நமக்கு மேல இருக்கற வங்களையும் நம்மளால திருப்திப் படுத் தவே முடியாது. அவங்கள்லாம் 'ஹாய்!' சொல்றதுக்கும், 'பை!' சொல்றதுக்கும் தான் சரி. நீங்க யாரையாவது திருப்திப்

விஜய்!



படுத்தணும்னா, உங்களுக்குக் கீழ் இருக்கறவங்களைப் புரிஞ்சு நடந்தாப் போதும். அவங்க திருப்தி உங்ககிட்ட வந்து ஒட்டிக்கும்.

ஒரு நாள், விஜய் கிட்ட, 'நீயும்கூட யோகா, தியானமெல்லாம் பண்ணலாமே?'ன்னு சொன்னேன். அதுக்கு அவன், 'நானே ரொம்ப அமைதி; எனக்கு எதுக் கும்மா இன்னும் அமைதி?'

ஷோபா சந்திரசேகர்

அவன் சொன்னது எனக்கு ரொம்ப சரின்னு பட்டுது. விஜய்கிட்ட இருந்து நான் கத்துக்கிட்ட இன்னொரு விஷயம். மத்தவங்களுக்குப் பிடிச்ச மாதிரி நட்ந்து, அவங்களைச் சந்தோஷப்படுத்தறது. ஒருத்தர் சாய்பாபாவோட பக்தரா இருப்பார். அவர்கிட்ட 'ஓம் ஸ்ரீ சாய்ராம்'னு சொல்லி வணக்கம் சொல்லுங்க. ரொம்ப சந்தோஷப் படுவார். அதே மாதிரி, 'பிரெய்ஸ் த லார்ட்'னு சொன்னா ஒருத்தருக்குப் பிடிக்கும்னா, அவருக்கு வணக்கம் சொல்றப்போ அதைச் சொல்லுங்க. உற்சாகமா உங்ககிட்ட பேச ஆரம்பிச்சுடுவார். இன்னொருத்தருக்கு 'எல்லாப் புகழும் இறைவனுக்கே!'ன்னு சொன்னா பிடிக்கும்னா, அதைச் சொல்லுங்க. விஜய் இப்படித்தான் செய்வான்.



விஜய்க்கு ஒரு பழக்கம் இருக்கு. சில முக்கியமான தினங்களை செல்ஃபோன் ரிமைண்டர்ல போட்டு வைக்கிற மாதிரி மனசுக்குள்ள போட்டு வைச்சுடுவான். அன்னிக்கு மறக்காம, சம்பந்தப்பட்டவங்களோடு பேசுவான்.

கடந்த ஜூன் பதினொண்ணாம் தேதி விஜய்கிட்டருந்து ஃபோன் வந்துச்சு. அன்னிக்கு என் அம்மாவுக்கு பிறந்த நாள். நான் 'என்ன விஷயம் சொல்லுப்பா!'ன்னேன்.

'இன்னிக்கு அம்மம்மாவுக்கு பர்த்டே இல்ல? அவங்ககிட்ட ஃபோனைக் குடுங்க'ன்னான். நான் ஃபோனை என் அம்மாகிட்ட குடுத்தேன். அவங்களுக்கு வணக்கம் சொல்லிட்டு ரொம்ப நேரம் ஃபோன்ல பேசிக்கிட்டிருந்தான் விஜய். அப்போ அவன் ஏதோ ஒரு ஷூட்டிங்குக்காக பொள்ளாச்சிக்கோ, பழனிக்கோ போயிருந்தான். ஊர்ல இருந்திருந்தா, நிச்சயம் நேர்ல வந்திருப்பான். அன்னிக்கு என்னோட அம்மா அப்படியே உச்சி குளிர்ந்து போயிட்டாங்க. இதுதான் விஜய்.

இப்படிச் சின்னச் சின்ன விஷயங்களை ஞாபகம் வச்சுக்கிட்டு நாம எத்தனைபேர் மத்தவங்களைச் சந்தோஷப்படுத்தறோம்?

(தொடரும்)

எழுத்து வடிவம்: **பாலு சத்யா**

என்ன பரிசு?

- சரியான விடைகளுடன் வரும் முதல் 10 கூப்பன்களுக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட்...
- குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ்...

ஹலோ வாசகர்களே!

ஷோபா சந்திரசேகர் எழுதற, 'என் செல்ல தளபதி' தொடர் அசத்தலா இருக்கு தானே? நீங்களும் சும்மா அசத்தறீங்க இல்ல. போன வாரப் போட்டிக்கு மளமளன்னு என்ட்ரீஸ்

தொடர் சங்கிலிப் போட்டி கூப்பன்

விஜய் வின்னர்ஸ்-14



கட் & கீர்

குவியுது!

- விஜய் வின்னர்ஸ் - 11 தொடர் சங்கிலிப் போட்டிக்கான முடிவும், இந்த வார கூப்பனும் பக்கம்-70ல் உள்ளன.
- பதினாறு வாரங்களும் அதிரடிப் போட்டி தொடரப் போகுது. ஒவ்வொரு வாரமும் பரிசு! பதினாறாவது வாரம் பம்பர் போட்டி, வியப்பான மெகா பரிசுகள்!
- நீங்க செய்ய வேண்டியது ரொம்ப சிம்பிள்! ஒவ்வொரு வாரமும் ஐந்து கேள்விகள் கேட்போம். அதுல ஒண்ணு தொடரிலிருந்து வரும். சரியான விடைகளை 'டிக்' அடிச்சு கூப்பனையும் நிரப்பி, அந்தப் பக்கத்தைக் கத்தரிச்சு அனுப்பணும்.
- ஒருவரே எத்தனை கூப்பன் வேணும்னாலும் அனுப்பலாம். ஆனா ஜெராக்ஸ் கூடாது. எவ்வளவு வேகமா அனுப்பறீங்களோ அந்தளவுக்குப் பரிசு பெற சான்ஸ் இருக்கு!
- வெய்ட்! பதினாறாவது வார பம்பர் போட்டியில நீங்க கலந்துக்கணும்னா 'விஜய்' ஸ்டில் போட்ட 'தொடர் சங்கிலி கூப்பனை' பத்திரமா சேகரிக்கணும். (இந்த வாரம்-69ஆம் பக்கம் இருக்கு)
- பதினாறாவது வார பம்பர் பரிசு போட்டியோடு முதல் 15 போட்டிகளுக்கான தொடர் சங்கிலி கூப்பன்கள் அனைத்தையும் இணைச்சு அனுப்பணும். ஒரு கூப்பனை 'மிஸ்' பண்ணினாலும், நீங்க அந்த வியப்பான பரிசுகளை 'மிஸ்' பண்ணிடுவீங்க.
- இந்த பதினாறு வாரத்தில் உங்களுக்கு ஒரு இதழ் கிடைக்காமப் போனாலும், உடனே எங்களுக்கு ஃபோன் பண்ணுங்க. உங்க நகரத்து ஏஜெண்ட் மூலமா கிடைக்க உதவி செய்யறோம்.
  ஸோ, டயல் : 4343 8888
- போட்டி குறித்த முடிவுகளில் ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

அறிவிப்பு

வாசகர்களின் அமோக வரவேற்பையும், வேண்டுகோளையும் கவனத்தில் கொண்டு விஜய் வின்னர்ஸ் தொடர் சங்கிலிப் போட்டியை 16 வாரமாக நீட்டித்துள்ளோம். 16வது வாரம் சூப்பர் பம்பர் போட்டியும் உண்டு. எனவே 16வது வார இறுதியில் 15 வார விஜய் வின்னர்ஸ் தொடர் சங்கிலிப் போட்டி கூப்பன்கள் + 16வது வார பம்பர் பரிசு கூப்பன் + 16வது வார பம்பர் பரிசுப் போட்டிக்கான விடை... மொத்தமாக இணைத்துச் சேர்த்து அனுப்ப வேண்டும்.



விஜய் வின்னர்ஸ்-11

தொடர் சங்கிலிப் போட்டி பரிசு பெற்றோர் விவரம்...

1. ஈஸ்வரி பாஸ்கரன், விருதுநகர் 2. கே.கனகராஜ், சென்னை - 32. 3. க.கோகுல கிருஷ்ணன், திருவாரூர் 4. டி.எம்.கணேசன், சென்னை - 87. 5.ரா.தேன்மொழி, சென்னை - 92. 6. ஆர்.அருள்செல்வி, தஞ்சாவூர் 7. பி.இசக்கிபாண்டியன், திருநெல்வேலி 8. ஆர்.ரேவதி, தஞ்சாவூர் 9. கே.சக்திராஜ், சென்னை - 38. 10. எம்.பெருமாள் ராஜா, ஆண்டிபட்டி

* முதல் பத்து கூப்பன்களை அனுப்பிய மேற்கண்டோருக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.
* குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ் அனுப்பி வைக்கப்படும்.

இந்த வாரக் கேள்விகள்!

கடைசி தேதி : 21.08.2008

1. 'மேகமாய் வந்து போகிறேன்' பாடல் இடம்பெற்ற படம்?
   - ☐ துள்ளாத மனமும் துள்ளும்
   - ☐ கில்லி
2. 'நிலாவே வா' படத்தில் விஜய்க்கு ஜோடி?
   - ☐ சுவலட்சுமி ☐ விஜயலட்சுமி
3. 'ஃப்ரண்ட்ஸ்' படத்தில் விஜய்யின் மனைவி?
   - ☐ தேவயானி ☐ ரம்பா
4. 'காதலுக்கு மரியாதை' படத்தின் இசையமைப்பாளர்?
   - ☐ இளையராஜா ☐ தேவா
5. விஜய் முக்கியமான தினங்களை எதில் குறித்துக் கொள்வார்?
   - ☐ டைரியில் ☐ மனதில்

பெயர் : .... வயது : ....

முகவரி : ....

....

செல் : .... இ.மெயில் : ....

போட்டி கூப்பன் அனுப்ப வேண்டிய முகவரி :
விஜய் வின்னர்ஸ் போட்டி - 14,
கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு ரோடு,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

கண்டிப்பா வரணும்

தமிழ்நாயகி



மகளுக்குத் திருமணம். பாதிக்கு மேல் பத்திரிகை வைத்தாயிற்று. ''என்னங்க, இன்னிக்கு என் தோழி தேன்மொழிக்கு அழைப்பிதழ் கொடுத்தாகணும். லீவ் போடுங்க'' என்றாள்.

போட்டேன். அவள் வீடு அம்மாப்பேட்டையில் இருந்தது. வையாபுரித் தெருவுக்குப் போனோம். உடையாப்பட்டிக்கு வீடு மாறிவிட்டாளாம். இ.பி.ஆஃபீஸ் பக்கம் வீடு. கண்டுபிடித்து விசாரித்தால்... சூரமங்கலம் குடிமாறிவிட்டாளாம்.

முகவரியைக் கண்டுபிடித்துப் போனால்... சிவதாபுரத்துக்கு மாறியதாய் தகவல்.

போனோம். சிவதாபுரத்தில் ஃபேன்ஸி ஸ்டோர் வைத்திருக்கிறாளாம். கடையும் வீடும் ஒன்றாய் இருக்கிறதாம்.

காலையில் கிளம்பி... மதியம் இரண்டு மணி ஆயிற்று. ஏற்காடு அடிவாரம்! அதுதான் கொண்டப்ப நாயக்கன் பட்டி!

அப்பாடா...! கடையில் இருந்தாள் தேன்மொழி. ஒருவழியாக, தன் தோழியை வலைவீசித் தேடிப் பிடித்தாள் மனைவி.

''ஏய்... அன்பரசி... வாடி.... எப்படி இருக்கே? எத்தனை வருஷம் ஆச்சு!''

கூல்டிரிங்க்ஸ் கொடுத்தாள்.

''கட்டாயம் என் மகள் கல்யாணத்துக்கு வந்துடணும். உன்னைத் தேடாத இடமில்லை. நீதான் முன்ன இருந்து எல்லாம் செய்யணும்'' என்று அழைப்பிதழ் கொடுத்தாள் என் மனைவி அன்பரசி.

வீடு திரும்பியபோது, ''பேருக்கு ஏத்தமாதிரியே இருக்கடி அன்பரசி! தோழின்னா... உன் மாதிரிதான்டி இருக்கணும். அரை நாள் அலைஞ்சு அழைப்பிதழ் கொடுக்கும் உன் ஃப்ரண்ட்ஷிப்பைப் பாராட்டறேன்டி'' என்றேன்.

''அட நீங்க ஒண்ணு! அவங்க வீட்டு விசேஷத்துக்கு கால் பவுன் வைச்சிருக்கேன். விட்டுடமுடியுமா? அதுக்காகத்தான் இவ்வளவு அலைச்சலும்...'' என்றபடி பாத்திரம் துலக்கத் துவங்கிவிட்டாள்.

நட்புக்கும் சுயநலத்துக்குமான இடைவெளி பளிச்சென்று துலங்கியது. ●

திக்திக் தொடர்கதை - 2

நில்... கவனி... கொல்!



சென்ற வாரம் -

சிங்கப்பூருக்குப் பணி நிமித்தமாக சில மாதங்கள் செல்கிறாள் பவித்ரா. ஈ-மெயில், தொலைபேசி என்று பலவிதங்களிலும் முயற் சித்தும் தனது நெருங்கிய தோழி ஷிப்ராவுடன் தொடர்புகொள்ள முடியாது திகைக்கிறாள். சென்னை வந்தவுடன் ஷிப்ராவின் புதிய தொலைபேசி எண் கிடைக்கிறது. சரமாரியாகக் கேள்விகளைக் கேட்க, ஓரிரு வார்த்தைகளாக விடையளிக்கிறாள் ஷிப்ரா. நடுவில் திடீரென ஷிப்ராவின் அலறல் கேட்கிறது. ரயில் ஒன்று கடகடவெனச் செல்லும் ஒலியும், தான் பேசியபோது ரயில்வே லைனை க்ராஸ் செய்ய விருப்பதாக ஷிப்ரா கூறியதும் நினைவுக்கு வர, தவிப்புடன் ஆட்டோவில் ஏறுகிறாள் பவித்ரா.

ஆட்டோ சென்றுகொண்டிருக்க, உள்ளே ஆயிரம் பிரார்த்தனைகளுடன் குமுறிக்கொண்டிருந்தாள் பவித்ரா. 'கடவுளே, ஷிப்ரா ரயில்வே லைனைத் தாண்டியிருக்க வேண்டும். அலறியது வேறு யாரோவாக இருக்க வேண்டும். ரயில் சத்தமென்பது அருகில் ஒலித்த வானொலி நாடகத்தில் இடம் பெற்றதாக இருக்க வேண்டும். ஒருவேளை ரயில் ஷிப்ராவை நோக்கி வேகமாக வந்திருந்தால் அப்போதும்கூட அலறிக்கொண்டே ஷிப்ரா தண்டவாளத்தைத் தாண்டியிருக்க வேண்டும். அந்த அதிர்ச்சியில் ஷிப்ரா தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். சுதாரித்துக்கொண்டு அவளே இப்போது நம்மைத்



தொடர்பு கொள்வாள்.'

செல்ஃபோன் ஒலித்தது. ஆனால், எதிர்முனையிலிருந்து அழைத்தது வேறொரு கல்லூரித் தோழியின் குரல்.

''பவித்ரா, விஷயம் தெரியுமா? ரயில் விபத்திலே நம்ம க்ஷிப்ரா செத்துட்டாளாம்.''

அவள் தொடர்ந்து பேசியது எதுவும் பவித்ராவின் காதுகளில் நுழையவில்லை.

பின் இருக்கையில் மயங்கி விழுந்திருந்த பயணி யார்? இப்போது என்ன செய்வது? பதறிப்போனார் ஆட்டோ ஓட்டுனர். அவருக்குத் தெரிந்த முதல் உதவியாக, தண்ணீரை அவள் முகத்தில் தெளித்தார். பலனில்லை. அருகில் இருந்த மருத்துவமனைக்குள் வண்டியைச் செலுத்தினார்.

'ரயில் பாதையைக் கடக்கையில் ரயில் மோதி இளம் பெண் இறப்பு' . நாளிதழ்களில் இந்தச் செய்தி அன்று காலை முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது.

புவனேஸ்வரி அம்மாளுக்குத் தவிப்பாக இருந்தது. ஒருநாள் முழுக்க மயங்கிய நிலையில் இருந்து, நடுவே கொஞ்ச நேரம் உணர்வு திரும்பியபோது கண் விழித்த பவித்ரா, ''நான்தான் அவளைக் கொன்னுட்டேன். அவள் உயிர் போக நான்தான் காரணம்'' என்று உடல் நடுங்க அலறியது நினைவுக்கு வந்தது. சமாதானம் செய்ய முயற்சித்த தங்களைச் சிறிது நேரம் வெறித்துப் பார்த்துவிட்டு நடந்ததைக் கூறினாள். பிறகு மீண்டும் மயங்கினாள். 'அதிர்ச்சிதான், மற்றபடி கவலைப்பட எதுவுமில்லை' என்று கூறியிருந்தார் டாக்டர்.

மீண்டும் உணர்வு திரும்பிய கணமே மீண்டும் அதே எண்ணம். 'முதல்லே ஒழுங்காக க்ராஸ் பண்ணு. அப்புறம் பேசலாம்' என்று

அருண் சரண்யா

கூறி, தொலைத்தொடர்பைத் துண்டித்திருக்க வேண்டாமா?

''நான் உடனே ஷிப்ரா வீட்டுக்குப் போகணும். அவ ஹஸ்பண்டைப் பார்க்கணும்'' என்றாள்.

ஈஸ்வரனும் புவனேஸ்வரி அம்மாளும் தயங்க, ''இப்பவே போகணும்'' என்றாள் உறுதியாக.

''கொஞ்சம் ஓய்வெடுத்துவிட்டுக் கிளம்பலாமே...'' என்ற அப்பாவின் யோசனையை ஏற்காததை, அவளது தீவிர முகக் குறிப்பு உணர்த்தியது.

''சரிம்மா நீ கிளம்பு'' என்றபடி மகளின் கைப்பையை அவளிடம் நீட்டியவர், மனைவியிடம் ''நீயும் கூடப்போ'' என்றார்.

நிறையப் பேர் கூடியிருந்தனர். இறந்தது இளம்பெண் என்பதாலும், காரணம் விபத்து என்பதாலும் பரபரப்பு கூடியிருந்தது. 'ரயில் பாதையைக் கடக்கும்போது ஜாக்கிரதை உணர்ச்சி வேண்டாமா?' என்று ஒருவர் கூற, 'ஆஃபீஸுக்கு சீக்கிரம் போகணும்கிற அவசரம். பாவம் எமலோக ஆஃபீஸுக்கு சீக்கிரம் போய்ச் சேர்ந்துட்டா' என்று ஒருவர் பரிதாபப்பட, 'அந்த இடத்தில் சுரங்கப்பாதை கட்டறாங்க. அரசாங்கம்தான் இந்தச் சாவுக்குப் பொறுப்பேற்க வேண்டும்' என்று வேறொருவர் முழங்கிக்கொண்டிருந்தார். 'ரயிலிலே போகும்போது விபத்து என்றால் நஷ்டஈடு கிடைத்திருக்கும். ஆனால், இதற்கெல்லாம் நஷ்டஈடு கிடையாது' என்று விளக்கமளித்துக்கொண்டிருந்தார் இன்னொருவர்.

நாம பொம்மைகள்தான் பவித்ரா. ஆட்டுவிக்கும் கயிறு மேலே இருப்பவனிடம் தான்.

உள்ளே நுழைந்தனர் பவித்ராவும் புவனேஸ்வரி அம்மாளும்.

''தனிமை தேவைன்னு மாடிக்குப் போயிருக்கான் குரு. கொஞ்ச நேரத்துக்கு யாரும் டிஸ்டர்ப் செய்ய வேணாம்னு சொல்லியிருக்கான்'' என்றார் ஒரு உறவினர்.

அதற்கு முக்கியத்துவம் கொடுக்காதவளாய் பவித்ரா மாடிப்படிகளில் ஏற, புவனேஸ்வரி அம்மாள் சற்றுச் சங்கடத்துடன் பின்தொடர்ந்தாள்.


மாடியறையில் சற்றுப் பெரிய அளவில் சட்டமிட்டு மாட்டப்பட்டிருந்த புகைப்படத்தில் முகம் நிறைய புன்னகையுடன் குருவின் அருகில் நின்றுகொண்டிருந்தாள் ஷிப்ரா. எதிரே அமர்ந்திருந்த குரு, அறைக்குள் சப்தம் கேட்டுத் திரும்பினான்.

பவித்ராவைப் பார்த்ததும் அவன்

ஹைக்கூ

பிச்சைக்காரனின் சாவில்
இறைந்து கிடக்கின்றன
சில்லறைகள்!

- பா. உதயக்கண்ணன்



முகத்தில் மேலும் வேதனை கூடியது.

"ஐ அம் ஸாரி" விம்மலுக்கிடையே பவித்ராவிடமிருந்து வார்த்தைகள் வெளிப்பட்டன.

துக்க நிகழ்வுக்காக வெளிப்பட்ட வேதனை வாக்கியம். இப்படி எண்ணிய குரு, அடுத்து வந்த அதே வாக்கியத்தின் தமிழாக்கத்தில் வியப்படைந்தான்.

"என்னை மன்னிச்சிடுங்க."

அம்மா கண்களை உருட்டித் தன்னிடம் கூறிய செய்தியை அலட்சியப்படுத்தி விட்டு, பவித்ரா தன் நேர்மையை வெளிப்படுத்தினாள்.

"சிங்கப்பூரிலிருந்து நேத்துதான் வந்தேன். ஷிப்ராவுக்கு ஃபோன் செய்தேன்..." நடந்ததைக் கூறி முடித்து கண்ணீர் விட்டாள் பவித்ரா.

"நாம பொம்மைகள்தான் பவித்ரா. ஆட்டுவிக்கும் கயிறு மேலே இருப்பவனிடம்தான். நீ என்ன, வேணும்னா செய்தே?" என்று மகளைச் சமாதானப்படுத்தும் விதத்தில் கூறிய புவனேஸ்வரி அம்மாள் குருவின் பக்கம் திரும்பி, "தம்பி, காலமும் கடவுளும்தான் உங்க மனசுக்குத் தெம்பைத் தரணும்" என்றாள்.

இது எதுவும் காதில் விழாதது போல் பவித்ராவை உற்றுப் பார்த்தான் குரு. அதில் ஒரு குரோதம் தெரிந்தது.

"நீ ஷிப்ராவை மட்டும் சாகடிக்கலை" என்றான்.

புரிந்தது. பவித்ராவோடு தானும் இறந்துவிட்டதாக அவன் உணர்கிறான். அவ்வளவு நெருக்கமான இல்லறம்.


புவனேஸ்வரி அம்மாளுக்குத் தலை சுற்றுவது போன்ற உணர்வு ஏற்படத் தொடங்கியது. 'நான்தான் ஷிப்ராவைக் கொன்னேன்' என்று மகளே ஆற்றாமையில் புலம்பியது வேறு. 'நீதான் ஷிப்ராவைச் சாகடித்தது' என்பதுபோல் குரு பேசியது வேறு அல்லவா?

உடனடியாக மகளை அழைத்துக்கொண்டு கிளம்பி விட வேண்டும் என்றது அவளது உள்ளுணர்வு.

"மிஸ்டர் குரு, ஷிப்ராவும் நானும் எவ்வளவு நெருக்கமான தோழிகள்னு உங்களுக்கே தெரியும்" என்று விம்மலுடன் பவித்ரா தொடங்கினாள்.

"ப்ளீஸ் கெட் அவுட்" என குரு கத்த, வேகமாக மகளை இழுத்துக்கொண்டு கிளம்பினாள் புவனேஸ்வரி அம்மாள். அந்த அவசரத்தில் பவித்ராவின் கைப்பைக்குப் பதிலாக, வேறொரு கைப்பையைத் தான் எடுத்து வந்ததை அவள் அப்போது உணரவில்லை.

(திக்திக் திக்திக்)



"சட்டசபைக்குள்ளே எதுக்கு இவ்வளவு பெரிய கூண்டு வருது?"
"எதிர்க்கட்சிக்காரங்க ரகளை பண்ணினா, கூண்டோடு வெளியேற்றத்தான்!"
– சம்பத்குமாரி

இந்த முறை ஜெயிக்குமா இந்தியா?



* டோலா பேனர்ஜி



1936-ல் ஜெர்மனியில் ஒலிம்பிக் போட்டி நடந்தபோது, இந்திய ஹாக்கி வீரர் தயான் சந்தின் நுணுக்கமான திறமைகளைக் கண்டு வியந்து போனார்கள் ஜெர்மானியர்கள். தயானைப் பார்த்து ஆச்சர்யப்பட்ட ஹிட்லர் முத்தாய்ப்பாகச் சொன்னார். 'நீங்கள் மட்டும் ஜெர்மனிவாசியாக இருந்தால் குறைந்தபட்சம் உங்களை மேஜர் ஜெனரலாக மாற்றியிருப்பேன்'. காரணம், அப்போது தயான் சந்த் இந்திய ராணுவத்தின் சிப்பாயாக வேலை பார்த்து வந்தார். பிறகு நடந்த ஆஸ்திரேலியச் சுற்றுப்பயணத்தின்போது 200 கோல்களைச் சர்வசாதாரணமாக அடித்த தயான் சந்தைப் பார்த்து, ஆஸ்திரேலியக் கிரிக்கெட் பிதாமகன் பிராட்மேன் அதிசயித்துப்போய், 'இது என்ன, கிரிக்கெட்டில் ரன்களை அடிப்பதுபோல கோல்களை அடிக்கிறார் இவர்!' என்றார். இனி, இக்கால பீஜிங் பங்கேற்பாளர்கள் பற்றிப் பார்ப்போம்.

கவனித்துப் பார்த்தால், தனி நபர் பிரிவில் இதுவரை பெற்றுள்ள நான்கு பதக்கங்களில் மூன்று, இறுதியாக நடந்த மூன்று ஒலிம்பிக்ஸ் மூலமாகக் கிடைத்துள்ளன. 96ல் லியாண்டர் பெயஸூம் 2000ஆம் ஆண்டில் கரம் மல்லேஸ்வரியும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள். சென்ற ஒலிம்பிக்கில் ரத்தோர் சிங்குக்கு வெள்ளி.

ஆகஸ்ட் எட்டு முதல் இருபத்திநான்கு வரை நடக்கவுள்ள பீஜிங் ஒலிம்பிக்ஸ் போட்டியில் கலந்துகொள்ள 57 இந்திய வீரர்கள் (26 பெண்கள் 31 ஆண்கள்) தகுதி பெற்றுள்ளனர். இதில் துப்பாக்கி சுடும் போட்டி, டென்னிஸ், வில் வித்தை, குத்துச்சண்டை ஆகிய பிரிவுகளில் பதக்கம் பெற பிரகாசமான வாய்ப்புகள் தென்படுகின்றன. முன்னெப்போதுமில்லாத அளவுக்கு இந்த விளையாட்டுகளில் இந்திய வீரர்கள் நடப்பு உலக சாம்பியன்கள்.

- கடந்த சில ஆண்டுகளாக எங்கு சர்வதேசப் போட்டிகள் நடந்தாலும், அங்கு இந்தியாவின் கொடியை உயர்த்திப் பிடிப்பவர்கள் ஷூட்டிங் (துப்பாக்கி சுடும்) வீரர்கள். இப்போது மனாவ்ஜிட் சிங் சாந்தும் அபினவ் பிந்திராவும் நடப்பு உலக சாம்பியன்கள்.
- வில்வித்தைப் பிரிவில் டோலா பேனர்ஜி உலக சாம்பியன்.
- குத்துச்சண்டை வீரரான

விஜேந்தர், ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற கஜகஸ்தான் வீரரைச் சமீபத்தில் வென்றார். அன்றிலிருந்து விஜேந்தர் ஒரு ஹீரோவாகப் பார்க்கப்படுகிறார்.

துப்பாக்கி சுடும் போட்டியில் ஒன்பது பேர் இந்தியா சார்பாக களம் இறங்குகிறார்கள். அஞ்சலி பகவத்துக்கு இது மூன்றாவது ஒலிம்பிக்ஸ். ஒலிம்பிக்கில் சீனர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் பெரும் சவாலாக இருப்பேன் என்று உறுதியளித்திருக்கிறார் அஞ்சலி பகவத். ஒலிம்பிக் பதக்கப் பட்டியலில் ககன் நரங் பெயரும் இடம்பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

● நீச்சல் போட்டியில் மகாராஷ்டிராவைச் சேர்ந்த பதினாறு வயது விர்தாவால் காதேவும் சந்தீப் சஜ்வாலும் இந்தமுறை களத்தில் குதிக்க உள்ளனர்.

● டேபிள் டென்னிஸில் ஷரத் கமல், நேஹா அகர்வால் ஆகிய இருவரும் தகுதி பெற்றுள்ளனர்.

● சென்ற ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் நான்கு மணி நேரம் கடுமையாகப் போராடித் தோற்றுப் போயினர் லியாண்டர் பெயஸும் மகேஷ் பூபதியும். பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் இவ்விருவரும் சேர்ந்து ஆடுவது ஒரு மாதத்துக்கு முன்புவரை சந்தேகத்துக்கிடமாகவே இருந்தது. இப்போது அது உறுதியாகிவிட்டாலும் பதக்கம் வெல்வார்கள் என்பது உறுதியில்லை!





ச.ந.கண்ணன்



* விர்தாவால்

● இந்திய அரசு தருகிற பரிசுத்தொகை போதாது என்று, இப்போது சாம்சங் போன்ற சில தனியார் நிறுவனங்களும், ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்பவர்களுக்குப் பண முடிப்பு வழங்கத் தயாராக உள்ளன. பரிசுகளைப் பெற்றுக்கொள்ள இந்த முறையாவது நிறைய கரங்கள் நீள வேண்டும். ○



அழகின் வடிவே... அருளின் வடிவே...

ஓராறு முகமும்

முருகன் பழந்தமிழ்க் கடவுள். மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்தின் தெய்வமாக முருகன் விளங்குகிறார் என்று சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. முருகன் என்றாலே அழகன் என்று பொருள். முருகன் அழகின் வடிவம். மாறாத இளமையின் வடிவம். ஞான வடிவம். அவன் வடிவழகைப் பேசும் பைந்தமிழ்ப் பனுவல்கள் ஏராளம்!

'பன்னிரு விழிகளிலே பரிவுடன் ஒரு
விழியால்
என்னை நீ பார்த்தாலும் போதும்
- வாழ்வில்
துயரேதும் வாராது எப்போதும்'

என்ற அசைக்க முடியாத பக்தி உணர்விலிருந்து

'வள்ளிக் கணவன் பேரை
வழிப்போக்கர் சொன்னாலும்
உள்ளம் குழையுதடீ கிளியே!
ஊனும் உருகுதடீ!'

என்ற ஆழமான காதல் உணர்வு வரை தமிழ்க்கவிதையின் எல்லாப் பரிமாணங்களையும் பார்த்துவிட்டான் முருகன். ஓராறு முகமும் ஈராறு கரமும் பலகோடி பக்தர்களைப் பரவசத்துக்குள்ளாக்கியது போல் கவிஞர்களையும் கலைஞர்களையும் தன் பால் ஈர்த்திருக்கிறது!

'ஆறு முகமும், அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவழச்
செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச்
சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிருத் திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும்; முத்து அணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்
ஒளிப்பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும்
இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி
முழங்க...'

முருகனது முடிமுதல் அடிவரை அங்க அங்கமாக வர்ணித்துக்கொண்டு போகிறது கந்தர் சஷ்டி கவசம். தமிழ் மக்களின் வீட்டு முதற்பிள்ளை முருகப் பெருமான்!

தமிழ்நாட்டில் வள்ளி தெய்வானை சமேதராய் காட்சி தரும் பெருமான், வடநாட்டில் கார்த்திகேயன் என்ற பெயர் கொண்ட கட்டை பிரம்மச்சாரி! அங்கு பிள்ளையார்தான் குடும்பஸ்தன். கேர ளத்திலும் கர்நாடகத்திலும் முருகனை நாகப் பாம்பின் உருவத்தில் வழிபடுகிறார் கள். கன்னட தேசத்தில் உள்ள 'சுப்ர மண்யா' என்ற தலத்தின் மூலஸ்தானத்தில் இருப்பது ஒரு பாம்புப் புற்றுதான். இலங் கையிலுள்ள கதிர்காமத்தில் முருகனை உருவமற்ற அரூபமாகவே வழிபடுகிறார் கள். அழகே வடிவான முருகனுக்கு இப் படியும் சில பரிமாணங்கள்.

ஆனால், நம் தமிழ்நாட்டில் விதவித

-த.கி.நீலகண்டன்

மான கோலங்களில் காட்சி தருகிறான் கந்தன். ஆறுபடைவீடுகளில் பழநி, சுவாமி மலை, திருத்தணி ஆகிய தலங்களில் ஆண்டியின் கோலத்தில் காட்சி தருகிறான் என்றால், திருப்பரங்குன்றத்திலும் பழ முதிர்ச் சோலையிலும் கல்யாணக் கோலத்தில் விளங்குகிறான். திருச் செந்தூரில் சிவயோக வடிவம். பன்னீர் மரத்தடியில் பஞ்சலிங்கங்களை ஸ்தாபித்து, பன்னீர் புஷ்பங்கள் கொண்டு பூஜிக்கும் கோலம் செந்தூரில் விளங்குகிறது. மேல் கரங்களில் ஜபமாலையும் வஜ்ராயுதமும் தாங்கி, கீழிரண்டு கரங்களில் ஒன்றில் பன்னீர் புஷ்பம் தாங்கி, மற்றொரு கரத் தைத் தொடையில் ஊன்றிய 'ஊரு ஹஸ்த மாக' நின்ற கோலத்தில் செந்திலாண்டவன் தரிசனம் தருகிறான். பார்க்கப் பார்க்கப்

ஈராறு கரமும்...



பரவசம் ஊட்டும் திருமேனி!

எட்டுக்குடி, எண்கண், விராலிமலை, குன்றக்குடி போன்ற தலங்களில் மயில் வாகனத்தில் ஒய்யாரமாக அமர்ந்து காட்சி தருகிறான். யானை மீது அமர்ந்த அபூர்வ மான முருகன் திருவடிவத்தை திருமுரு காற்றுப்படை பேசுகிறது. திருத்தணி, சுவாமிமலையில் சன்னிதிக்கு எதிரே மயிலுக்குப் பதிலாக யானையே விளங்கு கிறது! சில தலங்களில், உத்ஸவ மூர்த்தி யான முருகப் பெருமான் ஆட்டுக்கிடா வாகனத்திலும் பவனி வருகிறார். திருப் போரூரில், மயிலேறும் வேகத்தையும் வாகை வேலையும் வார்ப்பில் சிறைப்பிடிக்கும் அற்புதத் திருமேனி ஒன்று இருக்கிறது. அழகும் கம்பீரமும்

நிறைந்த முருகனின் வடிவம் சிற்பக் கலைஞர்களின் கவனத்தைப் பெருவாரியாகக் கவர்ந்திருக்கிறது. நின்ற கோலம்; ஒய்யாரமாக மயில் மீது அமர்ந்த கோலம்; வில்லேந்திய வேலனாக நின்ற கோலம்; ஆண்டி கோலம்; அரச கோலம், பால்வடியும் முகம்கொண்ட பாலகன் வடிவம்; பரவசமூட்டும் குமர வடிவம்; கமண்டலம், ஜபமாலை ஏந்திய ஞான வடிவம் என்று பல்வேறு கோலங்களில் முருகப்பெருமானை வடித்திருக்கிறார்கள்!



ஆனால், இவை எல்லாவற்றையும் விஞ்சும் அதிசய வடிவம் ஒன்று, சிக்கல் என்ற தலத்தில் விளங்குகிறது. ஒரு முகமும் நான்கு கரங்களும் கொண்டு, நிமிர்ந்த தோளும் விரிந்த மார்புமாக, இரு பாதங்களை ஆயத்த நிலையில் இருக்கும் (Attention) போர்வீரன் போல் சேர்த்து வைத்து, முகத்தில் சாந்தமும் புன்னகையும் தவழ கம்பீரமாக விளங்குகிறான் சிங்கார வேலன். இருபுறமும் வள்ளியும் தெய்வானையும் விளங்குகின்றனர். கையில் சக்தி ஆயுதம் சார்த்தியிருக்கிறது! சரி, இதில் என்ன அதிசயம்? முருகனின் அழகுக்குக் கேட்கவாவேண்டும்! என்றால், இங்கு காணும் திருவுருவம் உலோகத்தில் விளைந்த அற்புத அழகு மட்டுமல்ல, மனிதனுக்கு வியர்த்துக் கொட்டுவது போல் இந்த முருகனுக்கும் வியர்த்துக் கொட்டுகிறது!

கந்தசஷ்டி உத்ஸவத்தின்போது சூரசம்ஹாரத்துக்குப் புறப்படும் முன் பெருமான், தன் அன்னை 'வேல் நெடுங்கண்ணி' என்ற சக்தியிடம், சக்திவேல் வாங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அன்னையிடம் செல்லும்போது அமைதியும் சாந்தமுமாக விளங்கிய பெருமான், அவரிடமிருந்து வேலைப் பெற்றுக்கொண்டதும் உக்ரரூபியாக மாறி விடுகிறார். அந்த உக்ரத்தின் காட்சியாக அவரது திருமேனிக்கு வியர்க்கிறதாம்! முதலில் முழங்கையிலும் புருவத்திலும் முத்து முத்தாகத் தோன்றும் வியர்வைத் துளிகள், நேரம் ஆக ஆக, அவர் அணிந்திருக்கும் ஆடையே நனைந்து போகும் அளவுக்குப் பொங்குகிறதாம்! வேலாயுதம் பெறும் நிகழ்ச்சி முடிந்தவுடன் வியர்வை அடங்கி விடுகிறதாம்!

அற்புத அழகு மட்டுமல்ல, மனிதனுக்கு வியர்த்துக் கொட்டுவது போல் இந்த முருகனுக்கும் வியர்த்துக் கொட்டுகிறது


இந்தச் சிலை சுயம்பு மூர்த்தியல்ல! ஒரு சிற்பியால் வார்த்து எடுக்கப்பட்டதுதான். ஆனால், சிலையை வடிப்பவரின் ஒருமித்த சிந்தையும் ஆழ்ந்த தியானமும் அசைக்க முடியாத நம்பிக்கையும், பக்தர்களின் சிந்தையோடும் தியானத்தோடும் நம்பிக்கையோடும் சேர்ந்து அந்தச் சிலைக்கு உயிரூட்டிவிடுகிறது என்பதற்கு, இந்த சிக்கல் சிங்காரவேலனே சாட்சி!

(பெருகும்)

● லெ.நா.சிவகுமார்,
சென்னை - 33

? பொது நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன் சிங்கும் எதிர்க்கட்சித் தலைவர் அத்வானியும் ஒற்றுமை யுடன் கைகோக்கிறார்களே?

! ஆனால், ஆமதாபாத்தில் சந்தித்த சோனியாவும் மோடியும் பேசிக் கொள்ளாமல் இறுக்கம் காத்திருக் கிறார்களே!



* காத்து...



* ... இறுக்கம்!



* வீழ்ந்த கௌரவம்!

● என்.எஸ்.மணிமாறன்,
திருவண்ணாமலை

? சரத்குமாரை அவரது கட்சியினர் சிவப்பு காம ராஜர் என்று அழைப்பது பற்றி..?

! சரத்குமாரை, சரத் குமாராகவே ஏற்க சரத் குமார்தான் தமது கட்சியின ரைத் தயார் செய்ய வேண்டும். அதை விடுத்து, காமராஜர் - அண்ணா என்பதெல்லாம் பிறர் புகழில் குளிர் காயும் விஷயம்.

கச்சத் தீவைத் திரும்பப் பெற வாதாடுவார்களாமே?

● எம்.சம்பத்,
வேலாயுதம்பாளையம் ★

? மன்மோகன் சிங் அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் பெற்ற வெற்றியில், எத்தனை சதவிகிதம் ஜனநாயகத்தின் பங்கு இருந்ததாக நினைக்கிறீர்கள்?

! நூறு சதவிகிதம் ஜனநாயகம்தான். ஆனால், அதை அரியணையில் அமர்த்தி மதிப்பதற்குப் பதிலாக, எல்லோரும் சேர்ந்து அதற்கு ஜோக்கர் வேஷம் போட் டுக் கேவலப்படுத்திவிட்டார்கள்.

● அ.மல்லிகா, சென்னை - 78

? பெருமாள் பட சி.டி. வெளியீட்டு விழாவுக்கெல்லாம் முதல்வர் செல்வது சரியா?

! வக்கிர மனங்களின் வெளிப்பாடு அப்படம் என்பதைத் துவக்கவிழா போஸ்டர்களே உணர்த்திய பிறகு தவிர்த் திருக்க வேண்டும். பகுத்தறிவு என்ற

பெயரில் விழாவுக்குச் சென்றதுடன், மூன்றாம் தரப் பேச்சால் தம்மையும் தமிழ்நாட்டையும் மலினப் படுத்திக் கொண்டுவிட்டார்.

● எ.உஷாசுதர்ஷன், திருச்செங்கோடு

? 'எல்லா மதங்களிலும் நிரூபிக்க முடியாத நம்பிக்கைகள் உள்ளன. இவற்றில் விவாதம் செய்ய முடியாது. இணக்கம் மட்டுமே ஏற்படுத்த முடியும்' என சுவாமி தயானந்த சரஸ்வதி கூறியுள்ளாரே...?

! வாஸ்தவம்தான். ஆனால் இணக்கத்துக்கான முயற்சிகளை யாரும் எடுப்பதாகத் தெரியவில்லையே!

● த.புகழேந்தி, கூகூர்

? 'கச்சத்தீவு எங்களுக்குத் திரும்ப வேண்டும் என்று வாதாட வேண்டிய சூழ்நிலைக்கு வந்துள்ளோம்' என முதல்வர் பேசியிருக்கிறாரே?

! முடிஞ்சுபோன கதையைக் கிளறும் முதல்வரின் வீணான வாதம். இலங்கைப் பிரச்னைக்கு யதார்த்தமா தீர்வு காண திட்டத்தை, வலுவா தயாரிச்சு, பிரபாகரன் - இலங்கை அரசு, இரு தரப்பு முன்னாலேயும் வைக்கட்டும்; அமைதிக்கு வழி செய்யட்டும்.

● கே.எஸ்.கோவர்த்தனன், சென்னை - 42

? சென்னை மேற்கு மாம்பலத்தில், டாஸ்மாக் கடையில் 24 மணி நேரமும் செயல்படுகிற 'பார்' உள்ளதை எதிர்த்து, பொது மக்கள் முற்றுகை ஆர்ப்பாட்டம் செய்துள்ளனரே?

✱ இரட்டை நோக்கம்





✱ அறிவுறுத்தும் இணக்கம்

! 'சட்ட விரோதமான இந்த விற்பனை, மது விற்பனைக்கு இலக்கு நிர்ணயித்ததால் இருக்குமா?' என்று ஆலோசிக்க வேண்டும். நிற்க; மே.மாம்பலம் வாசிகளுக்கு வாழ்த்து தெரிவிப்பதோடு, இந்த இயக்கம் விரிவடைந்து, மக்களின் பூரண மதுவிலக்குப் போராட்டமாகவே மலர வேண்டும் என்பது தராசின் ஆசை.

● எஸ்.மாணிக்கம், மின்னல் □

? இந்த பலப் பரீட்சையில் மன்மோகன் சிங் Vs அத்வானி என்பது போய், மன்மோகன் சிங் Vs மாயாவதி என்று ஆகிவிட்டதே - கவனித்தீர்களா?

! மாயாவதிக்கு இரண்டு நோக்கங்கள். 'எனது எதிரி (முலாயம் சிங்)யின் நண்பன் எனக்கு எதிரி' என்பது ஒன்று. மூன்றாவது அணி மூலம் குறுக்கு வழியில், தாம் பிரதமர் ஆகிவிடலாம் என்கிற ஆசை இரண்டாவது. ஆனால், அவர் மூன்றாவது அணி மூலம் பா.ஜ.க.வுக்குத்தான் வலிமை சேர்க்கிறார்.



✱ பாராட்டு வாசகம்!

● ஜி.ஜெயராமன், கூந்தலூர்

? கும்பகோணம் பள்ளி தீ விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் நினைவாக, ஜூலை 16ஆம் தேதியை குழந்தைகள் பாதுகாப்பு தினமாக அறிவிக்க வலியுறுத்தியிருப்பது சரிதானே?

* பரிசளித்த சமத்துவம்



! ஜூலை 16 மட்டுமல்ல; 365 நாளும் குழந்தைகள் பாதுகாப்பு தினமாகக் கருதித்தான் ஒவ்வொரு பள்ளியும் இயங்க வேண்டும். அப்போதுதான் ஜூலை 16, படிப்பினை புகட்டிய ஒரு கறுப்பு தினமாகப் பின்னுக்குச் செல்லும்.

● **கா.மு.ஜக்கரியா, எலந்தங்குடி**

? 'கம்ப ராமாயணத்தைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும்' என்று திராவிட இயக்கத்துக்கு இசைவாகப் பேசியவர்கள், இன்று அதே ராமாயணத்தை மேற்கோள் காட்டி, சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்த்துள்ளனரே?



* பறித்த சுதந்திரம்

! 'Devil quoting the scripture' என்பதற்கு ஏற்ப நடந்துகொள்கிறார்கள். 'ராமரே இல்லை; பாலமே கட்டவில்லை' என்றவர்கள், இப்போது, 'ராமரே தாம் கட்டிய பாலத்தை இடித்துவிட்டார்' என்ற நிலைக்கு இறங்கி, பாலத்தையும் ராமரையும் ஒப்புக்கொண்டுள்ளனர். ராமர் கட்டிய பாலத்தை அவர் வேண்டுமானால் இடிக்கலாம். டி.ஆர்.பாலு இடிக்க மக்கள் சம்மதிக்க மாட்டார்கள்.

● **சி.மகேஷ், திருச்சி**

? மண்டேலா 90...?

! உலக மக்களின் மகிழ்ச்சிகரமான சமத்துவத்துக்கு அவர் பரிசளித்த ஆண்டுகள்!

● **வே.ந.கதிர்வேல், வேலூர் - 6**

? 'மத்திய அமைச்சரவையில் பதவிகளைக் கேட்டுப் பெறுவது எங்களது உரிமையாகும்' என்கிறாரே சிபு சோரன்?

! பாவம் பிரதமர்; அமைச்சரவையை நிர்ணயிக்கும் தமது தனி உரிமையையும் விலையாகக் கொடுத்து, நம்பிக்கை வாக்கெடுப்பில் ஜெயித்துள்ளார்.

● **அ.அப்துல் காதர், சென்னை - 45**

? 'சோம்நாத் சட்டர்ஜியும் நானும் கொள்கை அளவில் எதிரெதிர் துருவங்கள். எனினும், அவரது துணிச்சலான நிலைப்பாட்டை மதிக்கிறேன்' என பால் தாக்கரே பாராட்டியுள்ளாரே?

! பால் தாக்கரேயும் தராசும் கொள்கை அளவில் எதிரெதிர் துருவங்கள். எனினும், தாக்கரேயின் இந்த மனம் திறந்த பாராட்டுகளுக்கு, தராசின் இதயபூர்வ பாராட்டு!

● **என்.கோமதி, நெல்லை**

? சென்னைக்கு மட்டும் ஒரு மணி நேரம்; எங்களுக்கெல்லாம் இரண்டு மணி நேரம் மின்வெட்டாம்... தாங்கள் செய்த பாவம் என்ன?

! சென்னை அளவுக்குத் தொழிலகங்களும் வி.ஐ.பி. நெரிசலும் நெல்லையில் இல்லாததுதான் குற்றம். இது புண்ணியமா, பாவமா என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டியதுதான். ●

☐ ரூ.100 பரிசு பெறுபவர் : எஸ்.மாணிக்கம், மின்னல்

★ ரூ.50 பரிசு பெறுபவர் : எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

ஜாக்பாட்டா? 'ஜாக்கெட்'பாட்டா?

ஜெயா டி.வி.யில் ஆண், பெண் என சகலரையும் இழுத்திருக்கும் நிகழ்ச்சி குஷ்புவின் ஜாக்பாட். ஆனால், இது ஜாக்பாட்டா 'ஜாக்கெட்'பாட்டா எனக் கேட்குமளவு குஷ்புவின் விதவிதமான ஜாக்கெட் பிரசித்தம். நிகழ்ச்சி முடிந்ததும் ஜாக்கெட் பற்றிதான் பெண்களின் பேச்சு நீள்கிறது; ஜெனரல் நாலெட்ஜ் பற்றியல்ல என்ற கருத்து சரியா? கொஞ்சம் விசாரித்தபோது...



* குஷ்பு

''மேல்தட்டு வர்க்கத்துப் பெண்கள் இப்படியான மாடல்களில் ஜாக்கெட் போடுவார்களோ என்னவோ தெரியாது. ஆனால், மத்தியதர குடும்பப் பெண்களிடம், குஷ்புவின் ஜாக்கெட் பெரும் மோகத்தை ஏற்படுத்தியுள்ளது உண்மையே. ஆனால், அது நடைமுறைக்கு உதவாது; வெறும் ஏக்கத்தோடு நின்று போகும். காரணம், அந்த ஜாக்கெட் காஸ்ட்லியானது மட்டுமல்ல, அதிக கவர்ச்சியானதும்கூட. அந்த நிகழ்ச்சியை ஜாக்கெட்டுக்காகவே பார்க்கும் பெண்கள் ஏராளம்'' என்கிறார் தனியார் நிறுவன ஊழியர் கிருஷ்ணகுமார்.

ஆனால், வேலைக்குச் செல்லும் குடும்பத் தலைவியான திருமதி உமாவோ, ''ஆடல் பாடல் நிகழ்ச்சியை யார்வேண்டுமானாலும் நடத்திவிடலாம். அறிவு சார்ந்த நிகழ்ச்சியை நடத்தத் தனித் திறமை வேண்டும். குஷ்பு, சினிமா உலகத்தில் தனித்துவமான அறிவாளிதான். ஆயினும் ஜாக்பாட் வெற்றிக்கு ஜாக்கெட் காரணமல்ல. அந்த ஜாக்கெட்டினால் கொஞ்சம் ஆபாசநெடி வருவதைத் தவிர்க்க வேண்டும்'' என்று, நிகழ்ச்சியை ஒரு பெண்ணின் வெற்றியாகவே பார்க்கிறார்.

சின்னத்திரையில் அதிகமான கல்லூரிப் பெண்களின் ஆதரவைப் பெற்றிருக்கும், நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஆனந்தக் கண்ணனிடம் ஜாக்பாட்டா 'ஜாக்கெட்'பாட்டா என்று

சர்ச்சை



* ஆனந்த கண்ணன்

கேட்டபோது,

''ஒரு நாட்டுக்குள் நுழைய முதலில் விசா வேண்டும். பிறகுதான் அந்நாட்டைச் சுற்றி வர முடியும். ஜாக்பாட் நிகழ்ச்சிக்கான விசா, குஷ்புவின் ஜாக்கெட்தான். விசா மட்டுமே போதாது ஒரு நாட்டைச் சுற்றிவர. குஷ்புவின் திறமைதான் ஜாக்பாட்டின் வெற்றி. சத்யராஜ் ஒருமுறை என்னிடம், 'நீயும் குஷ்புவும் ஒண்ணு. அவங்களுக்கு ஜாக்கெட்; உனக்கு விதவிதமான ஹேர் ஸ்டைல். அவ்வளவுதான்'னு நக்கலடித்தார்'' என்றபடி ஜாக்கெட்டுக்கு 'விசா' அந்தஸ்து கொடுத்தார்.



* கிருஷ்ணகுமார்



* உமா

கல்லூரிப் பேராசிரியையான அனுராதா மட்டும், ''குஷ்பு பற்றி, ஜாக்கெட் பற்றி மட்டும் பேசறீங்க. இந்தப் பேச்சு வர்றதுக்குக் காரணமான அந்த ஜாக்கெட் டிஸைனர் ஆணா? பெண்ணா? மொதல்ல இது ஜாக்பாட் வெற்றியா, ஜாக்கெட் வெற்றியான்னு பார்க்காதீங்க. இது ஜாக்கெட் டிஸைனரின் வெற்றி. ஆடை வடிவமைப்புக் கலையின் அபரிமிதமான வெற்றி'' என்று யாரும் நுழையாத வேறு ஒரு தளத்தில் நின்று பேசினார்.

ஏனோ வைதேகி கொஞ்சம் சூடாகி...

''டிஸைனர் ஒரு ஆண்தான்னு எங்களுக்குத் தெரியும். இது குஷ்பு என்ற பெண்ணின் ஹோம் ஒர்க் வெற்றி. ஜாக்கெட் வெச்சே நிகழ்ச்சி வெற்றின்னா, தமிழ்நாட்டுப் பெண்களை எல்லாம் முட்டாள்னு சொல்ற மாதிரி இருக்கு'' என்றார். கேட்ட கருத்துகள் மண்டைக்குள் டிசைன் போட, அந்த ஜாக்கெட் டிஸைனரைத் தேடிப் பிடித்து தொலைபேசியில் கருத்து கேட்டோம். முகத்தைக் காண்பிக்க மறுக்கும் அவர், 'நோ கமெண்ட்ஸ்' என்று தொடர்பைத் துண்டித்தார்.



* வைதேகி



* அனுராதா

- ராகவ்குமார்

நமக்குப் பொருத்தமாக உடையணிவதுதான் என்றுமே ஃபேஷன். டீ.வி. சினிமாவைப் பார்த்து அப்பட்டமாக காப்பியடிப்பது நகைப்புக்குரியது. நல்ல ' ட்ரெஸ் சென்ஸ் இருக்க வேண்டும். இந்த வாரம் நாம் தெரிந்து கொள்ளப் போவது 'ஃபேஷன் மிஸ்டேக்'கைப் பற்றி! கச்சிதமாக இருந்தால் ஃபேஷன். ஓவராக, பொருந்தாமல் இருந்தால் அது ஃபேஷன் மிஸ்டேக். இனி டேக்குக்குப் போகலாமா மிஸ்?

★ ஒரே நேரத்தில் சிவப்பு + பச்சை காம்பினேஷனைத் தவிர்க்கவும். க்ளாஷ் ஆகும். பச்சை ட்ரெஸ் போட்டால் நோ சிவப்பு லிப்ஸ்டிக்! அப்படியே சிவப்பு லிப்ஸ்டிக் போட்டால் பச்சை ஐஷேடோவைத் தவிர்க்கவும்.

★ ஷார்ட் ஸ்கர்ட்டுடன் ஷார்ட் டாப் கூடாது. டாப் சின்னதாக இருந்தால், ஜீன்ஸ் போட வேண்டும்.

★ உடை சிம்பிளாக இருக்கும்போது ஹெவி ஜுவல்லரி கூடாது. தவிர்க்க வேண்டிய நகை நெக்லெஸ். ஒரே நேரத்தில் ஏகப்பட்ட நகைகளும் போடக் கூடாது.

★ காதணியாக விக்டோரியன் ஷாண்டிலி யர் இயர் ரிங் (நீளமாகத் தொங்கும் தொங்கட்டான்கள்) போட்டிருந்தால் கழுத்தில் எதுவும் வேண்டாம்.

★ ஸ்கர்ட் பூப்போட்ட ஃப்ளோரல் டிஸைன் இருந்தால், டாப் ப்ளைனாக இருத்தல் நலம். இரண்டிலும் பாட்டர்ன் இருந்தால் ரொம்ப காடியாகத் தெரியும். (பட்டாம்பூச்சி துரத்தும்... பரவாயில்லையா)

★ மிக டைட்டாக ட்ரெஸ் போடுவதைத் தவிர்க்கவும். கம்ஃபர்டபிள் உடைகள் அணிவதற்கு, பார்ப்பதற்கு டீஸன்டாக இருக்கும்.

★ ட்ரெஸ்ஸை க்ராண்டாக போட்டுவிட்டு, காலணி அழுக்காக, ட்ரெண்டியாக இல்லாமல் இருந்தால் பெரிய மிஸ்டேக்.

★ எந்த ட்ரெஸ்ஸாக இருந்தாலும் காலில் ஸ்னீக்கர்ஸ்தான் போடுவேன் என பிடிவாதம் பிடிக்கக் கூடாது. ஸ்கர்ட், ஜீன்ஸ், கேப்ரீஸ்... போன்ற உடைகளுக்கு ஸ்டராப்பி, பீட்ஸ், காலணிகள் போடலாமே.

★ வேலைக்குப் போகும் பெண்ணாக இருந்தால் ஷார்ட் ஸ்கர்ட், ஸ்லீவ்லெஸ், லோநெக், ஸ்டிலெடோஸ் (குதிகால் உயரக்





மிஸ்டேக்..?

காலணி) லெதர்பான்ட், ஸ்கர்ட், பளபள துணிகள், ஜிமிக்கிகள், தலை நிறைய பூ, கைவழிய வளையல்கள், அடை ஜரிகை பட்டுப் புடைவைகள்... இவற்றைத் தவிர்க்கவும்.

★ உடை எப்போதுமே பளிச்சென்று அயர்ன் பண்ணியிருக்க வேண்டும். கசங்கிய சல்வார்-கமீஸ், டாப்ஸ்... ஃபேஷன் மிஸ்டேக்! (கான்ஸ் ஃபிலிம் ஃபெஸ்டிவலில் ஐஸ் போட்டிருந்த உடை கசங்கியிருந்ததாம்; விமர்சகர்கள் திட்டித் தீர்த்துட்டாங்க...)

★ உள்ளாடைகள் வெளியே தெரியாமல் இருப்பது கச்சிதம் + இதம்!

★ தனக்குப் பொருத்தமான வண்ணங்களையே தேர்ந்தெடுத்து உடுத்த வேண்டும். லேட்டஸ்ட் கலர் என போட்டுக் கொண்டு கிளம்பக் கூடாது.

★ நாம் மாடல் கிடையாது. தினசரி வேலைக்கோ, கல்லூரிக்கோ போகும் போது காஷுவல் உடைகளே பெஸ்ட்! இதுதான் இப்போதைய ஃபேஷன் என பொருந்தாத ஸ்டைலில் ட்ரெஸ் பண்ணிக் கொள்ளாதீர்கள்.

★ மேக்கப் அளவுடன் இருக்க வேண்டும். டூ மச்சா முகத்தில் குழைச்சு அடிச்சுண்டா அம்பலமாயிடும்.

★ இடத்துக்கு, நேரத்துக்குத் தகுந்தாற் போல் ஹேண்ட்பேக் இருக்க வேண்டும். ஆஃபீஸுக்கு லெதர் ஹேண்ட்பேக், காலேஜுக்கு ஜுட் பேக்... என பின்னி எடுங்க.

★ முகத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் நகங்களுக்கும் கொடுக்க வேண்டும். நெய்ல்பாலிஷ் பளிச்சென்று இருக்க வேண்டும். சீராக வெட்டப்படாத, பாதிக் கலருடன் தோற்றமளிக்கும் நகங்கள்... ஃபேஷன் மிஸ்டேக்!

★ போஸ்கள் மிக முக்கியம், முதுகைக் கூன் போட்டு உட்காரக் கூடாது! நல்ல தன்னம்பிக்கையுடன் கூடிய நடை என்றுமே ஃபேஷன்தான்.

– லதா சேகர்

உடையழகு... நடையழகு...

திரைப்படம் தயாரிப்பதற்காக வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் கந்துவட்டிக்காரர்களுக்குப் பயந்து, தயாரிப்பாளர்கள் தற்கொலை செய்துகொண்ட சம்பவங்கள் ஏராளம். தற்கொலை முயற்சியில் தப்பிப் பிழைத்த சம்பவங்களையும் தமிழ்த் திரை உலகம் கண்டிருக்கிறது. இதையெல்லாம் 'பாஸ்ட் ஹிஸ்ட்டரி' ஆக்கும் நோக்கத்தில், கார்ப்பரேட் ஃபைனான்ஸ் திசை நோக்கித் திரும்பியுள்ளது தமிழ் சினிமா.

உதாரணமாக, குறுந்தட்டுகள் தயாரிப்பில் முன்னணி நிறுவனமான மோசர்பேர், முறைப்படி தயாரிப்பாளர்களிடமிருந்து திரைப்படங்களுக்கான வீடியோ உரிமையை வாங்கி, மிகக் குறைந்த விலையில் திரைப்படங்களின் வி.சி.டி மற்றும் டி.வி.டிக்களைத் தயாரித்து விற்பனைக்குக் கொண்டு வந்து பெரும் புரட்சி செய்தது. அடுத்த கட்டமாக, திரைப்படத் தயாரிப்பிலும் இறங்க முடிவு செய்தது. ஆகவே, நடிகர் பிரகாஷ்ராஜின் டூயட் மூவீஸ் நிறுவனத்துடன் கைகோத்துக்கொள்ள முடிவு செய்தது. அதன் பலனாக டூயட் - மோசர்பேர் கூட்டுத் தயாரிப்பில் மூன்று திரைப்படங்களுக்கான அறிவிப்பு ஒரே சமயத்தில் வெளியானது. இதில் முதல்படமான பிரிதிவிராஜ் - கோபிகா நடித்த 'வெள்ளித்திரை' வெளியாகி வெற்றி பெற்றது. அண்மையில் கோலாகலமான முறையில் ஆடியோ வெளியீடு நடந்த சேரன் ஹீரோவாக நடிக்கும் 'ராமன் தேடிய சீதை' படமும் மோசர்பேர் கைகொடுப்பில் உருவாகும் படமே!

வடக்கே இந்திப்பட உலகில், ரிலையன்ஸ் உள்ளிட்ட சில பெரிய வர்த்தக நிறுவனங்களும் திரைப்படத் தயாரிப்பில் இறங்கியுள்ளன. ஹாலிவுட் வரை சென்று முதலீடு செய்ய மும்முரமாகிவிட்டன.

சினிமா எடுக்க நிதி உதவி செய்வதற்கு மிகவும் தயங்கிய வங்கிகள், தற்போது கார்ப்பரேட் நிறுவனங்களின் கைகுலுக்கல் காரணமாக, சினிமாவையும் ஒரு 'தொழிலாக' ஏற்கத் தயாராகியுள்ளன. கடனுதவி செய்கின்றன.

''திரைப்படத் தயாரிப்பு நிர்வாகம் என்பது சவாலான ஒரு பணி. எனவே, சினிமா தயாரிப்புக்கு உயிர்நாடியான முதலீடு விஷயத்தை கார்ப்பரேட் நிறுவனம் கவனித்துக்கொள்ள, சினிமா அனுபவம் வாய்ந்தவர்கள் படத்தயாரிப்புப் பணியில் ஈடுபடுவது ஒரு வெற்றிக் கூட்டணியாகக் கருதப்படுகிறது. ஒரு படத்தின் கதை, அதன் இயக்குநர், நடிக நடிகையர், பட்ஜெட் போன்ற விஷயங்களை, கார்ப்பரேட் கம்பெனியின் போர்டு அலசி

* 'ஆயுதம் செய்வோம்...' படக்காட்சி



ஆராய்ந்து ஒப்புதல் வழங்கிவிட்டால், திரைப் படத்தயாரிப்பில் சிக்கல்

ஏதுமிருக்காது. அது மட்டுமில்லாமல், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வங்கிகள் கடனுதவி வழங்குவதில் பிரச்னை எதுவும் இருக்காதல்லவா?'' என்று கேட்கிறார் மோசர்பேர் நிறுவனத்தின் தலைமை அலுவலரான தனஞ்ஜெயன்.

''பொதுவாக சினிமா தயாரிப்பு என்பது ஒரு தனி நபர் எடுக்கும் முடிவுகள் சார்ந்தே இருந்து வருகிறது. ஆனால் ஒரு கார்ப்பரேட் கம்பெனியில் கூட்டு முடிவுதான். மேலும், கார்ப்பரேட் கம்பெனி, ஒரு திரைப்படத்தை எப்படி விற்பது? எப்படி விளம்பரம் செய்வது போன்ற விஷயங்களைத் தொழில் அனுபவ நேர்த்தியுடன் செய்யும். கூட்டு முடிவு; கூட்டு செயல்திட்டம் இவைதான் கார்ப்பரேட் ஃபைனான்ஸின் பலம். எதிர்காலத்தில், கார்ப்பரேட் நிறுவனங்களின் சினிமா தயாரிப்பு அதிகரித்து, ஆரோக்கியமான பாதையில் முன்னேறிச் செல்லும்'' என்கிறார் ஜி.வி. ஃபிலிம்ஸின் தலைமை நிர்வாகியான சுப்ரமணியன்.

''இந்தக் கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள சினிமாத்துறையினர் சிலர் தயாராக இல்லை. இன்றளவும் ஒரு திரைப்படம் நிச்சயமாக வெற்றிப் படமாக அமையுமா என்பதை யாராலும் உறுதியாகச் சொல்லிவிட முடியாது. ஒரு தனிப்பட்ட தயாரிப்பாளருக்கு சினிமா எடுப்பதில் இருக்கும் ஈடுபாடு, ஒரு

* 'அபியும் நானும்...' படக்காட்சி

கார்ப்பரேட் கைகுலுக்கல்





★ எஸ்.பி.முத்துராமன்



★ சுப்ரமணியன்

கார்ப்பரேட் கம்பெனிக்கு நிச்சயம் இருக்காது; சினிமா தயாரிப்பு என்பது வெறுமனே முதலீடு எவ்வளவு? லாபம் எவ்வளவு? என்று கணக்குப் போடுவது மாத்திரமில்லை'' என்று கூறுகிறார் பழம்பெரும் தயாரிப்பாளர் ஒருவர்.

''பிரமிட் சாய்மீரா நிறுவனம் நேரடியாகவும், கூட்டுத் தயாரிப்பிலும் சினிமாக்கள் எடுப்பதுடன், சின்னத்திரை தொடர், தியேட்டர்களை நிர்வகிப்பது, திரைப்பட வினியோகம் என்று பல்வேறு தளங்களில், உலக அளவில் தடம் பதித்துள்ளது. சமீபத்தில் பத்து அனுபவம் வாய்ந்த தயாரிப்பாளர்களை அழைத்து, அவர்களிடம் ஆளுக்கு ஒரு படம் தயாரிக்கும் பொறுப்பை ஒப்படைத்துள்ளது. இது ஆரோக்கியமான முயற்சி'' என்கிறார் இயக்குநர் எஸ்.பி.முத்துராமன்.

''திரைப்படத் தயாரிப்பில் இறங்கும் கார்ப்பரேட் கம்பெனிகளை நான் இருகரம் நீட்டி வரவேற்கிறேன். அதே சமயம் சற்று எச்சரிக்கையாகவும் இருக்க விரும்புகிறேன். லாபம் மட்டுமே அவர்களுக்கு நோக்கமெனில் அவர்களுடன் கைகோக்க நான் தயாராக இல்லை. அதுபோலவே, அழுத்தமான, நல்ல கதைகளைப் படமாக எடுக்க முன்வராமல், சினிமாவையும் ஒரு பிசினலாகப் பார்த்து வெற்றி என்ற ஒரே நோக்கத்துடன் களம் இறங்கினால், சினிமாவின் எண்ணிக்கைதான் அதிகரிக்குமே தவிர தரம் உயராது. நிதி உதவி செய்வதால் கார்ப்பரேட் கம்பெனிகள் இயக்குநரது சுதந்திரத்தில் தலையிட்டாலும் அது சரியில்லை'' என்கிறார் பிரகாஷ் ராஜ்.

''கார்ப்பரேட் ஃபைனான்ஸ் முறை, திரைப்படத்துறையின் நிதிப் பிரச்னையை ஓரளவுக்குத் தீர்த்து வைத்துக்கொண்டிருக்கிறது. ஆனாலும் எல்லா தயாரிப்பாளர்களுக்கும் வங்கிக் கடனுதவி கிடைப்பதில்லை. கார்ப்பரேட் கம்பெனிகளும் எந்தத் தயாரிப்பாளரானாலும் சரி என்று கூட்டு சேர முன் வருவதில்லை. எனவே தயாரிப்பாளர்கள் தனியார் ஃபைனான்சியர்களையே நாட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எனவே, கந்து வட்டிக்காரர்களின் கட்டுப்பாட்டிலிருந்து முற்றிலுமாக விடுபடுவது என்பது தற்போதைக்குச் சாத்தியமில்லை. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், திரை உலகின் பெரிய தலைவலி தீரும் என்பது மட்டும் நிச்சயம்'' என்கிறார் சுப்ரமணியன்.

- எஸ். சந்திரமௌலி

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்தும் 'கந்தர்வன் நினைவு சிறுகதைப் போட்டி - 2008' சிறுகதைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 11.9.2008. முகவரி: நா.முத்து நிலவன், துணைப் பொதுச்செயலாளர், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், 96, சீனிவாச நகர் 3ஆம் தெரு, புதுக்கோட்டை- 622 004. விரிவான தொடர்புக்கு செல்பேசி: 94431 93293

முதல் பரிசு பெற்ற சிறுகதை 'பேராண்மை' ஒரு சினிமாவைப் பார்ப்பது போல கனவும் நிஜமுமாக முகத்தில் அறைந்தது. வெறும் வெளி உணர்ச்சிக்கு அடிமையாகிவிடாமல், உண்மையை, இருப்பை உணர்தலே நிச்சயம் 'பேராண்மை'தான். மிகப் பொருத்தமான தலைப்போடு சிறப்பான கதையைத் தந்த கதாசிரியர் இரா.ரமேஷுக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

- ரேவதி பாலு, சென்னை - 41

'நில், கவனி, கொல்' தொடர், ஆரம்பமே திகிலாக இருக்கிறது. தொடரும் அத்தியாயங்கள் எப்படிப் போகுமோ என திக்திக்க வைக்கிறது.

- ஜே.துரைராஜ், ஆலப்பாக்கம்

சிம்பு தேவனின் தொடர், வித்தியாசமான ஈர்ப்பாய் தொடக்கத்திலேயே அமைந்துவிட்டது.

- ஆர்.பழனி குமார், மதுரை - 14

'அழகின் வடிவே அருளின் வடிவே' படிக்க திருப்தியாக இருந்தது. ஸ்லோகத்தைச் சொல்லி, பதவுரை சொல்லி, கலைநயம்மிக்க கணபதியின் முன்னழகு, பின்னழகு காண்பித்து, ஆஹா எனக் கூற வைத்தது.

- சி.என்.ரமா தேவி, சென்னை - 83

50kg தாஜ்மஹால் புதிய தொடர், நகைச்சுவையான படத்துடன் ஹெல்த்தான சுவையுடன் இனித்தது.

- என்.சீத்தாலட்சுமி, அண்ணா நகர்

ஏ.ஆர்.ரஹ்மானின் இசையில் டி.எம்.எஸ். பாடப்போவதை, 'வெண்கல மணிக்கு வெள்ளியில் நாக்கு' என்று தராக சிலாகித்துக் கூறியது, மிகச் சரியான உவமானமாகும்!

- வே.ந.கதிர்வேல், வேலூர் - 6

ஆண்டு மலர் என்று சொல்வதைவிட அறுபத்தாறு ஆண்டுகள் ஆண்ட மலர் என்றுதான் சொல்லவேண்டும். கல்கியைக் கண்டு பூரிப்பும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது. இனிய நல் வாழ்த்துகள்.

- சிம்மவாஹினி, வியாசர் நகர்

சிம்புதேவன் தொடரில் 'லண்டனில் உள்ள ஏல் பல்கலைக் கழகம்' என்று தவறுதலாக வெளியாகிவிட்டது. 'அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக் கழகம்' என்று திருத்தி வாசிக்கவும்.

தவறுக்கு வருந்துகிறோம்.

- ஆசிரியர்



அக்கம் பக்கம்



அப்படிப் போடு அரிவாளை!

கேரளாவில் திடீரென்று 'அடுத்து வருகிற பாராளு மன்றத் தேர்தலில் எர்ணாகுளம் பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிடப் போகிறார் மலையாள சூப்பர் ஸ்டாரான மம்முட்டி' என்று ஒரு பரபரப்பான சேதி. 'இல்லை! அவர் போட்டியிடப் போகும் தொகுதி முஸ்லிம்கள் மெஜாரிடியான மலாபுரம் மாவட்டத்தில் உள்ள பொன்னானி தொகுதிதான்' என்று ஒரு மறுப்புச் செய்தி. பொள்ளாச்சியில் 'மாயாபஜார்' படத்தின் ஷூட்டிங்கில் இருந்த மம்முட்டியை மீடியா துரத்தியது. ''எனக்குத் தேர்தலில் ஜெயித்து பாராளுமன்றத்துக்குப் போவதில் விருப்பமில்லை; நடிப்பின் மூலமாக மக்கள் மனத்தில் தொடர்ந்து இடம் பிடிக்கவே விருப்பம்'' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்லி விட்டார்.

தலை தப்பியது தம்புரான் புண்ணியம்!

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஸ்ரீ மூலம் திருநாள் வசித்த அரண்மனை, பின்னாளில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் வசிப்பிடமானது. அரண்மனையின் பெயரும் 'கிளிஃப் ஹவுஸ்' என்று மாற்றப்பட்டது. தற்போது கேரள முதல்வர் அச்சுதானந்தன் வசிப்பதும் அங்குதான். சில நாட்களுக்கு முன்பு ஒருநாள் காலை, முதலமைச்சரது பங்களாவில் அவரது படுக்கை அறையின் மேற்கூரையின் ஒரு பகுதி உடைந்து, முதலமைச்சர் தலை வைத்துப் படுக்கும் இடத்தில் விழுந்தது! நல்லகாலம்! அதற்குப் பதினைந்து நிமிடங்கள் முன்புவரை அங்கே படுத்துத்தூங்கிக்கொண்டிருந்த முதலமைச்சர், அதிர்ஷ்டவசமாக பாத்ரூமில் இருந்ததால் தப்பித்துவிட்டார்.

செல்லால் சிக்கல்!

திருவனந்தபுரத்தில், மாணவிகள் செல்ஃபோன் எடுத்து வர தடையுள்ளது. அண்மையில் ஒரு பள்ளியில் யாரோ ஒரு மாணவி செல்ஃபோன் கொண்டு வந்திருப்பதாகத் தகவல் பரவ, பரிசோதனையில் யாரிடமும் செல்ஃபோன் சிக்கவில்லை. ஒரு சில மாணவிகளை மட்டும் மறுபடி அழைத்து, மீண்டும் பரிசோதனை நடத்தப்பட்டது. அப்படியும் செல்ஃபோன் சிக்கவில்லை. ஆனால், அப்புறம்தான் சிக்கல். அந்த மாணவி

களுள் ஒருவர், மற்ற மாணவிகள் முன்னால் உடைகளுக்குள் தேடியதால் குறுகிப் போய்த் தற்கொலை முயற்சி செய்துவிட்டார். தக்க நேரத்தில் ஆஸ்பத்திரியில் சேர்த்து பிழைக்க வைத்துவிட்டார்கள். போலீஸ், மாணவி மீதும் ஆசிரியர்கள் மீதும் வழக்கு தொடர்ந்திருக்கிறது.

அண்மையில் குட்ட நாடு விவசாயிகளுக்காக மத்திய அரசு ஒரு ஸ்பெஷல் திட்டத்தை அறிவித்திருக்கிறது! அதுவும் மஹாராஷ்டிர விவசாயிகளுக்கான விதர்பா பேக்கேஜ் போல வீணாகாமல் இருந்தால் சரி!

பூவில் பிளேடு!

சர்ச்சைகளுக்குப் பெயர்போன குருவாயூர் கோயிலில் சுவாமிக்கு அணிவிப்பதற்காக வந்த மாலைகளுடன் ஒரு பிளேடு வந்துவிட்டது. அபசாரமென்று கோயிலைப் புனிதப்படுத்தும் சடங்கை நடத்தச் சொல்லிவிட்டார்கள். சடங்கை முடித்து, கோயிலுக்கு பூஜைக்கு பூ சப்ளை செய்யும் 17 குடும்பங்களையும் கூப்பிட்டு, எச்சரிக்கை விடுத்துள்ளது கோயில் நிர்வாகம்.

– கௌதம் ராம்

வயலில் பாயும் கடல்



* மம்முட்டி



* அச்சுதானந்தன்

குட்டக் குட்ட...!

குட்ட நாடு நெல் விவசாயிகளுக்குக் கடல் பிரச்னை. இங்கே நெல் பயிராகும் சுமார் 25 ஆயிரம் ஹெக்டேர் நிலப் பகுதி, கடல் மட்டத்துக்குச் சற்று கீழாக இருப்பதால், அடிக்கடி கடல் நீர் நிலப் பகுதியில் புகுந்துவிடுகிறது. நிலத்தில் நிரம்பிவிட்ட உப்புநீரை, பம்ப் மூலம் வெளியேற்றுவதற்கு விவசாயிகள் படும் பாடு சொல்லி மாளாது. மேலும், இந்தப் பகுதியில் நல்ல ரோடு கிடையாது; நீர் வழிப்பாதையிலும் ஒரே சேறு, சகதி.

உங்களுக்கு ரொம்ப ரொம்ப பிடிச்சவங்க கிட்ட ஓராயிரம் புன்னகையை சோலார் பவர்ல பார்க்கணுமா? சின்னதா ஒரு 'கிஃப்ட்' கொடுத்துப் பாருங்க... அப்புறம் தெரியும்! இந்தப் புன்னகையோடு, புதையல் மாதிரி 'கிஃப்ட்'களைப் பொக்கிஷமா பாதுகாத்து வைச்சிருக்கறவங்க நிறைய பேரு இருக்காங்க. அவங்கல்ல நாலு பேரு, இப்ப நம்ம காஃபி ஷாப்ல...



பாத்திமாபீ:

நான் பந்தாவா பர்த்டேயைக் கொண்டாடற ஆளு கிடையாது. *(நாங்க இப்ப ஒண்ணும் சொல்லலியே உங்கள!)* ஆனா ஃப்ரெண்ட்ஸ்னா எனக்கு உயிர்.

ஊஞ்சல்னா எனக்கு ரொம்ப பிடிக்கும். *(ஊஞ்சல் விரும்பும் ஏஞ்சல்!)* அதத் தெரிஞ்சுக்கிட்டுகூட விஜி கொடுத்திருக்கலாம்.

இப்ப நான் வேற காலேஜ்; அவ வேற காலேஜ். விஜியோட ஞாபகம் வரும்போதெல்லாம், இப்படி இத ரொட்டேட் பண்ணுவேன், சூப்பர் மியூஸிக்கோட ஊஞ்சல் மெதுவா ஆடும்; கூடவே என் மனசும் ஆடும்.

சிந்துஜா:

இதோ இந்த ரொட்டேட்டிங் ஃபோட்டோ ஃப்ரேம்தான் என்னோட மோஸ்ட் மெமரபிள் கிஃப்ட். ஏன்னா எங்க அக்கா விக்னேஷ்வரி, ஆசை ஆசையாய் எனக்கு வாங்கித் தந்தது.

பிறந்த நாள் அன்னைக்கு வழக்கமாக பேக் எடுத்துக்கிட்டு ஸ்கூலுக்குப் போயிட்டேன். பிரேயர் முடிஞ்சு, 'பேக்'கை ஒப்பன் பண்ணினா இந்த கிஃப்ட்! ஒரே குழப்பம் யாரு வைச்சதுன்னு.

ரெண்டுநாள் கழிச்சு, அம்மா சொன்னாங்க, இதை அக்காதான் என் ஸ்கூல் பேக்ல வைச்சதுன்னு.

''ஹாய் அக்கா! நீ கொடுத்த கிஃப்ட் பத்தித்தான் பெருமையா சொல்லிருக்கேன். அவசியம் கல்கி புக் வாங்கிப் பார்.'' *(ஃபோன் செலவை மிச்சம் பண்றீங்களா?)*

ரகீப்:

'அதியா' - என்னோட ஃப்ரெண்ட் பேரு. 'எனக்கு ஸ்விட்ச் போட்டா, அவனுக்கு லைட் எரியும்' - அந்தளவுக்கு 'திக்'னு சொல்ல வர்றேன்.

'நீ அதிகமா டி.வி. பார்க்கறதால

காஃபி ஷாப்



‘ஆசையா கொடுத்தா பரிசுப் பொருள்; அந்தஸ்த்தைக் காட்ட நினைச்சா காட்சிப்பொருள்!

ஸ்மைலிங் கிஃப்ட்

அகமதி:

இந்த 'கனவுக்கன்னி' கிஃப்ட், கீர்த்தி தேவி எனக்குக் கொடுத்தது. 'வாடி, என் ஃப்ரெண்ட்டுக்கு ஒரு கிஃப்ட் வாங்கணும்'னு அழைச்சிட்டுப் போனா. நான் கிஃப்ட் செலக்ட் பண்ணிக் கொடுத்தேன். மறுநாள் பார்த்தா, அந்த கிஃப்டை எனக்கே கொடுத்தா. 'ஏன்'னு கேட்டதுக்கு, 'நான் வாங்கி, உனக்குப் பிடிக்காம போயிடக் கூடாது. அதான் உனக்குப் பிடிச்சதை உன்னையே செலக்ட் பண்ண வைச்சேன்'னு சொன்னா. என் ஃப்ரெண்ட் எவ்வளவு க்ரேட் பார்த்தீங்களா?

அதனால இந்த 'ட்ரீம் கேர்ள்' எப்பவும் என் கூடவே இருக்கிறாள். *(தூங்காம பார்த்துக்கோங்க!)*

டீ.வி. மேலேயே இத வைச்சுக்கோ. டீ.வி. பார்க்கும்போதெல்லாம் என் ஞாபகம் உனக்கு வரும்'னு சொல்லிக் கொடுத்தான். அங்கேயேதான் வைச்சிருந்தேன். உங்ககிட்ட காண்பிக்கறதுக்காகத்தான், இப்ப கையில எடுத்தேன்.

'கிஃப்ட்' சிறுசு, ஆனா அதக் கொடுத்த அதியா மனசு பெரிசு! *('பஞ்ச்' பாலா பட்டம் உங்களுக்குத்தான்!)*

நாலு பேரும் நல்லாதான் சொன்னீங்க. ஆனா, நீங்க மத்தவங்களுக்குக் கொடுத்த கிஃப்ட் பத்திச் சொல்லவே இல்லை? - ஓ! நாங்க கேட்கவே இல்லங்கறீங்களா? அதுவும் சரிதான்!

– எம்.திரவியமுருகன்





பத்து பத்து

ப்ளஸ்

- வழக்கத்திலிருந்து விடுபட்டு கதையை யோசித்திருக்கும் இயக்குநரின் அணுகுமுறை.
- திரைக்கதையில் தெறிக்கும் விறுவிறு மின்சாரம்.
- கொலையாளி யார் என்பதை அறிய ஆடியன்ஸையும் அலற வைப்பது.
- க்ரைம் சப்ஜெக்ட்டில் ஆங்காங்கே தெறிக்கும் யதார்த்த நகைச்சுவை.
- கதாநாயகன் அந்தஸ்து உள்ள நடிகர்களை நம்பாமல், சின்னச் சின்ன நடிகர்களை நடிக்க வைத்திருக்கும் சாமர்த்தியம்.

மைனஸ்

- மூன்று ஹிட் படம் கொடுத்த டைரக்டர் 'தலைவாசல்' விஜய், 'குட்டி'யூண்டு வீட்டில் வசிப்பது.
- எல்.வி.கணேசனின் பின்னணி இசை.
- சற்றே தூக்கலான கவர்ச்சித் திணிப்புகள்.
- நாடகம் பார்ப்பது போன்ற ஒளிப்பதிவு.

குட்டு

வீட்டில் யாரையும் நம்பி தங்க வைக்கக் கூடாது என்ற நீதியை (?) நம்முள் விதைக்க முனையும் டைரக்டரின் குயுக்தியான சிந்தனைக்கு...

ஷொட்டு

சல்லடை போட்டுத் தேடினாலும் கிடைக்காத கொலைகாரனுக்கு ஆண்டவன் கோர்ட் வழங்கும் அற்புதத் தீர்ப்புக்கு...

– அநாமிகா

Dr.Kamakshi Memorial Hospital



Dr. T.G. Govindarajan
Persident - Founder -
Medical Director

தமிழ்நாட்டிலேயே முதல்முறையாக உடலிலுள்ள புற்றுநோய் மற்றும் இதர நோய்களை எளிதில் கண்டறிய உதவும்

PET CT Scan

மருத்துவ சேவை நிறுவனத்தில் ஒரு மைல்கல்
தமிழகத்தில் இதுவே முதல் முறை

Dr. காமாட்சி மருத்துவமனை

கேன்சர் இன்ஸ்டிடுட் (wia)

இணைந்து பெருமையுடன் அறிமுகம் செய்துள்ளது



தமிழ் நாட்டில் முதல்

PET CT Scan



10% Special Discount On Sunday for Master & Executive Health Check-up

இந்தியாவில் 4, 5 இடங்களில் மட்டுமே உள்ள இந்த ஸ்கேனிங் கருவியின் சிறப்பம்சங்கள்:

* பெட் சி.டி.ஸ்கேன் என்பது உடல் அணுக்களின் செயல்திறன் பற்றியும் அணு பெருக்கத்தைப் பற்றியும் முழு தகவல்களைத் தரவல்லது.
* முக்கியமாக பெட் சி.டி.ஸ்கேன், மனிதனின் உச்சந்தலையிலிருந்து, உள்ளங்கால் வரை முழுவதும் பரிசோதிப்பதால், உடலில் எங்கெல்லாம் புற்றுநோய் இருக்கிறது? அது வேறு எங்கெல்லாம் பரவியிருக்கிறது? நோயின் தீவிரம் எந்த அளவு உள்ளது? என்பதை எல்லாம் துல்லியமாகக் கண்டறியப் பயன்படுகிறது.
* அதேபோல், ரேடியோதெரபி, கீமோதெரபி போன்ற சிகிச்சைகளுக்குப் முன் 'பீரியாடிகல் ரிவியூ' மூலம் நோயின் தாக்கம் எவ்வளவு குறைந்துள்ளது என்பதையும் கண்டறியலாம்.
* மூளையில் ஏற்படும் 'அல்ஸேமெர்ஸ்', 'பார்க்கின்சன்ஸ்', புற்றுநோய் போன்ற நோய்களை கண்டறியவும், அவற்றுக்கு எளிய முறையில் கண்டறியவும், 'பெட் சி.டி. ஸ்கேன்' பயன்படுகிறது.
* புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களுக்கு எந்த மாதிரியான சிகிச்சை முறையை பின்பற்ற வேண்டும் என்று தெளிவாக உணர்த்துகிறது. இதயத்தில் உள்ள பிரச்னைகள் மற்றும் தசைகளின் செயல்பாடுகளை அறிய உதவுகிறது.

இலவச ஆலோசனைக்கு: எஸ்.சுபாஷிணி – 93451 20265, 93810 30712

#1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Tel : +91-44-22469200 (30 Lines), 66300300 (30 Lines), Fax : 22463282
E-mail : info@drkamakshimemorialhospital.org
Website : www.drkamakshimemorialhospital.org

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG s Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.